விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 14 சனிக்கிழமை (29.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 010

## வடக்கில் வெள்ள இடரால் பாதிப்பு

### ஓர் இலட்சத்து 20 ஆயிரமாக உயர்வு

(கிளிநொச்சி)

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால், 38 ஆயிரத்து 739 குடும்பங்களைச் சேர்ந்த ஓர் இலட்சத்து 19 ஆயிரத்து 962 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

ஆயிரத்து 528 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 906 பேர் இடம்பெயர்ந்து 19 இடைத்தங்கல் முகாம்களில் தொடர்ந்து தங்கவைக்கப்பட்டுள்ளனர். 24

## வெள்ளப் பாதிப்புகளை ஹெலியில் இருந்தவாறே சுற்றிப்பார்த்த ரணில்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள இடர் பாதிப்புக்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உலங்கு வானூர்தியில் இருந்தவாறே பார்வையிட்டார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள இடர் தொடர்பான பாதிப்புக்கள் மற்றும் மக்களுக்கான இழப்பீடுகள், உதவிகள் தொடர்பில் ஆராய்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் 23

## பணத்துக்கு ஆசைப்பட்டு 10 ஆயிரம் இழந்த யுவதி

### வடமராட்சி கரவெட்டியில் சம்பவம்

(கரணவாய்)

பணப்பரிசிலுக்கு ஆசைப்பட்ட யுவதி ஒருவர் பத்தாயிரம் ரூபாயினை இழந்த நிலையில் தான் ஏமாற்றப்பட்டதாக நெல்லியடி பொலிஸில் முறையிட்டுள்ளார். வடமராட்சி கரவெட்டி பகுதியைச் சேர்ந்த யுவதி ஒருவருக்கு நேற்று வெள்ளிக்கிழமை தொலைபேசி அழைப்பு ஒன்றை மேற்கொண்ட நபர் உங்களிற்கு பணப் பரிசு அதிர்ஷ்டமாக கிடைத்துள்ளது.

இதற்கு பத்தாயிரம் ரூபாய் பணத்தினை வைப்பிலிட வேண்டும் என்றும் அதை 5ஆயிரம் ரூபாய் வீதம் 23

## அச்சுவேலியில் புத்தகக்கடை எரிந்து நாசம்



(யாழ்ப்பாணம்)


அச்சுவேலி நகரப்பகுதியில் உள்ள பாடசாலை உபகர 24

## வடக்கு மாகாணத்தில் வெள்ள இடரால் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களில்

# நுண்கடன்களை வசூலிக்க பிரதமர் ரணில் தடை விதிப்பு

## வங்கிக் கடன்களுக்கும் சலுகைகள்

(கிளிநொச்சி) வடக்கில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள மக்களிடம் நுண்நிதிக் கடன் வசூலிப்பதை தற்காலிமாக நிறுத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார். மேலும் விவசாயக் கடன்கள் மற்றும் சிறு முயற்சிகளுக்கான கடன்களை மறுசீரமைக்குமாறும் பிரதமர் வங்கிகளுக்கு பணித்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)



### இரணைமடு தொடர்பில்

## விசாரணை செய்ய குழு நியமனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடுகுளம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள மூவரடங்கிய குழுவை வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே நியமித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழக பொறியியல் பீட விரிவுரையாளர் சுப்பிரமணியம் சிவகுமார் தலை 23

## அனைத்துக்கும் இராணுவம் என்றால் பிரதேச சபைகளை மூடிவிடுங்கள்

### ரணில் முன் சிறீதரன் எம்.பி ஆதங்கம்

(கிளிநொச்சி)

இராணுவத்தினரைக் கொண்டு எல்லாவற்றையும் செய்வதென்றால் பிரதேச சபைகளை மூடிவிடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

அண்மையில் திடீரென ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் பல்வேறு பாதிப்புக்களை சந்தித்துள்ளன.

கடும் மழை காரணமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது

இந்த கலந்துரையாடலில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் குடிநீர் தேவை 24

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு வருட இறுதிக்குள் இழப்பீடு

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் வெள்ள பாதிப்பினால் சேதமடைந்த வீடுகளை திருத்துவதற்கு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு 31ஆம் திகதிக்கு முன்னர் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பல வாக்குறுதிகளை வழங்கிய பிரதமர், வெள்ள அனர்த்தத்தினால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களை தொடர்ந்து எதிர்வரும் மூன்று தினங்களுக்கு தங்கவைத்து உணவு வழங்க ஏற்பாடு செய்யுமாறு 23

### பகிடிவதை தாங்காமல்

## கழுத்தை அறுத்த பல்கலை மாணவன்

(கிளிநொச்சி)

பகிடிவதை தாங்க முடியாமல் பல்கலை மாணவன் ஒருவர் கழுத்தை அறுத்து ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று இரவு கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

அவ்வாறு கழுத்து அறுக்கப்பட்ட மாணவன் உறவினர்களால் அவசர சிகிச்சை வாகனத்தில் பளை வைத்தியசாலைக்கு 23

## அமைச்சர் ராஜித இன்றையதினம் வடக்குக்கு விஜயம்

(கிளிநொச்சி)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ள மக்களைப் பார்வையிடுவதற்காக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன வடக்கிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

அதன்படி கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இன்று சனிக்கிழமை 23

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.10 ஆயிரம்

### உடனடியாக வழங்குமாறு பிரதமர் ரணில் உத்தரவு

(கிளிநொச்சி)

வடக்கு மாகாணத்தில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 10 ஆயிரம் ரூபாய் நிதியை இழப்பீடாக உடனடியாக வழங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டார்.

அத்துடன், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சொத்து இழப்பு மதிப்பீடு நிறைவடைந்ததும் 25 லட்சம் ரூபாய் வரை காப்பீட்டுப் பணம் வழங்குமாறும் அவர் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அமைதியான ஆர்ப்பாட்டங்கள்
## எந்நேரத்திலும் வன்முறையாக மாறலாம்
### இலங்கை குறித்து கனடா எச்சரிக்கை

அமைதியான ஆர்ப்பாட்டங்கள் எந்நேரத்திலும் வன்முறையாக மாறலாம். எனவே, இலங்கைக்கு சுற்றுலா பயணம் மேற்கொள்வோர் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என கனடாவின் புதுப்பிக்கப்பட்ட பயண ஆலோசனையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியல் நெருக்கடிகள் தீர்ந்துள்ள நிலையில், இலங்கை குறித்த தமது பிரஜைகளுக்கான புதுப்பிக்கப்பட்ட பயண ஆலோசனையை கனடா வெளியிட்டுள்ளது.

அதன்படி, இலங்கையில் அரசியல் ஸ்திரமின்மை என்ற பதம் புதுப்பிக்கப்பட்ட பயண ஆலோசனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

எனினும், இலங்கையில் அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள் வன்முறையாக மாறலாம் என்றும், அதனால் பொதுப் போக்குவரத்துகள் பாதிக்கப்படலாம் என்றும் புதிய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் இடங்கள் மற்றும் பாரிய கூட்டங்கள இடம்பெறும இடங்களுககு பயணிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்ளும் தமது பிரஜை களுக்கு கனடா எச்சரித்துள்ளது. (ம-3)

**ஒப்பந்த சேவை**

கட்டிடங்களுக்கான சட்டறிங், பிளேட் போடுதல் மற்றும் முழு அளவிலான ஒப்பந்த வேலைகள் துரிதமாகவும், தரமாகவும் செய்து வழங்கப்படும். (C-4926)

**லக்ஸ்மி கென்ஸ்ரக்சன்ஸ்**
நீர்வேலி தெற்கு, நீர்வேலி. 076 171 1231

**அறைகள் வாடகைக்கு**

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் A9 வீதிக்கு அண்மையில் (NAITA நிறுவனத்துக்கு அருகில்) இரண்டு அறைகள் வாடகைக்கு உண்டு. (அரச மற்றும் தனியார் உத்தியோகத்தர்களுக்கு மட்டும்.)

**தொடர்பு: 0702202207**

**HARTLEYITES SPORTS CLUB - POINT PEDRO**
ஹாட்லியைற்ஸ் விளையாட்டுக்கழகம், பருத்தித்துறை

**ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவித்தல்**

காலம் : 2019.01.13 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : முற்பகல் 10 மணி
இடம் : கல்லூரி கேட்போர்கூடம்

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 2019.01.05ஆம் திகதிக்கு முன்னர் தலைவர்/செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(C-4927) **செயலாளர்**

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**UNIT OF ALLIED HEALTH SCIENCES, FACULTY OF MEDICINE**

**WALK-IN INTERVIEW**

Walk –in Interview for the post of Temporary Demonstrator will be held on 04.01.2019 at 11.00 a.m at the Board room of the Faculty of Medicine, University of Jaffna.

**Temporary Demonstrator**
in
**Nursing/Pharmacy/Medical Laboratory Sciences**

**Qualifications:-**
A Degree in the relevant subject.

**Note**- Candidates who are awaiting for the results of the final examinations are expected to attend the interview.

**SALARY SCALE** –Rs.33,100/=p.m (fixed)

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Candidates are requested to appear with relevant certificates, National Identity Card and self-prepared applications.

**Registrar,**
**University of Jaffna.**
**26.12.2018**

# பூநகரிப் பிரதேச சபை
## பொதுச்சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள்
## குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2019

கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேசசபை எல்லைப்பரப்பிற்குட்பட்ட இடங்களிற்கு உட்பட்ட பொதுச் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பன 2019ம் ஆண்டிற்காக 01.01.2019 தொடக்கம் 31.12.2019 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு மீள் கேள்விகள் பொருத்தமான நபர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

- கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 31.12.2018 தொடக்கம் 07.01.2019வரை காலம் மு.ப.8.30 - பி.ப 3.30 வரை
- கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 08.01.2019 மதியம் 12.00 மணி வரை
- கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 08.01.2019 பி.ப 12.30 மணி

கேள்வி நிபந்தனைகள்:

1. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர் பிரதேசசபை, பூநகரி எனும் முகவரிக்கு அரச முத்திரை இட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி எனும் முகவரிக்கு 08.01.2019 திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்களினை பெற விரும்புபவர்கள் பிரதேச கிராம சேவையாளரின் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராம சேவையாளரினால் தேசிய அடையாள அட்டையினை உறுதிப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணத்தினையும் செலுத்த வேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவரிற்கும் படிவம் வழங்கப்பட மாட்டாது.
5. கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் நாளன்று கேள்வியாளரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
6. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தலிற்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளினை நிராகரிக்கின்ற அதிகாரம் கேள்விச்சபைத் தலைவரிற்கு உண்டு.
7. இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்படவேண்டும்.குத்தகைக்கு எடுத்தவர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவரால் நடாத்தப்படின் குத்தகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படும்.
8. அரச கால்நடை வைத்திய நிலையத்தால் காதில் பட்டியிடப்பட்ட மாடுகள் மட்டும் வெட்ட அனுமதிக்கப்படும்.
9. எம்மால் அமைக்கப்பட்டுள்ள கொல்களத்திலேயே இறைச்சிக்கான மாடுகள் வெட்டப்படவேண்டும்.
10. இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படமுன்னர் எம்மால் குறித்துரைக்கப்படும் சட்ட திட்டங்களிற்கமைவாக நடந்து கொள்ள வேண்டும்.
11. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் மூன்றில் ஒரு பங்கினை 16.01.2019 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையோடு ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.

### 2019ம் ஆண்டுக்கான பொதுச்சந்தைகள், கருவாட்டுக் கடைகள் இறைச்சிக்கடைகளுக்கான மீள் கேள்வி கோரல்


| தொ. இல | விடயம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள் விக் கட்டணம் | ஏற்றுக் கொள் ளப்படும் ஆகக் குறைந்த கேள் வித் தொகை |
|---|---|---|---|---|
| | பொதுச்சந்தைகள் | | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 5000.00 | 33250.00 |
| 2 | முட்கொம்பன் | 500.00 | 3000.00 | 10000.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 500.00 | 5000.00 | 57000.00 |
| 2 | வலைப்பாடு | 500.00 | 3000.00 | 15000.00 |
| 3 | 19 ம் கட்டை | 500.00 | 3000.00 | 25000.00 |
| இரணை தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடா கடற்கரை | 500.00 | 3000.00 | 15000.00 |
| 2 | முழங்காவில் நாச்சிக்குடா சந்தி | 1000.00 | 8500.00 | 347630.00 |
| 3 | முழங்காவில் நாச்சிக்குடா சந்தி (மாலைநேர) | 1000.00 | 8500.00 | 144000.00 |
| | மாட்டிறைச்சிக்கடைகள் | | | |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 1000.00 | 8000.00 | 25000.00 |
| 2 | கிராஞ்சி | 1000.00 | 3000.00 | 31500.00 |
| 3 | வலைப்பாடு | 1000.00 | 5000.00 | 96045.00 |
| | கோழியிறைச்சிக்கடைகள் | | | |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 500.00 | 3000.00 | 10000.00 |
| 2 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 5000.00 |
| 3 | வலைப்பாடு | 500.00 | 3000.00 | 10000.00 |
| | ஆட்டிறைச்சிக்கடை | | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3000.00 | 5000.00 |
| 2 | பள்ளிக்குடா | 500.00 | 3000.00 | 5000.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 5000.00 |
| 2 | ஜெயபுரம் | 500.00 | 3000.00 | 5000.00 |
| இரணை தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி | 500.00 | 3000.00 | 5000.00 |
| | கருவாட்டுக்கடை | | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3000.00 | 10000.00 |
| 2 | பள்ளிக்குடா | 500.00 | 3000.00 | 10000.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 10000.00 |
| இரணை தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி இல - 01 | 500.00 | 3000.00 | 10000.00 |
| 2 | நாச்சிக்குடா சந்தி இல - 02 | 500.00 | 3000.00 | 10000.00 |

திரு.அருணாசலம் ஐயம்பிள்ளை
தவிசாளர், பிரதேச சபை, பூநகரி.

(C-4922)

# மதக் கலவரத்தை ஏற்படுத்தவே புத்தர் சிலைகளுக்குச் சேதம்

## புத்தசாசன அமைச்சர் காமினி காட்டம்



(கொழும்பு)

நாட்டில் மதக் கலவரம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான முன்னெடுப்புக்களாகவே புத்தர் சிலைகளுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் பார்க்கப்படுவதாகவும், இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அதிகபட்ச சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது முஸ்லிம் சமூகத் தலைவர்களின் கருத்தாகவுள்ளதாகவும் புத்தசாசன அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பிரதமர் தலைமையில் கூடி ஆராயப்பட்டது. அமைச்சர்களான கபீர் ஹாஷிம், றிசாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

திட்டமிட்ட அடிப்படையில் இனங்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சியா இது என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட 6 இளைஞர்களையும் எதிர்வரும் 2 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மாவனல்ல நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தவறியுள்ளது

## நாமல் எம்.பி.சாடல்



(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக, அவர்களின் தேவைகளை நிறைவேற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தவறியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தாக்குதல் சம்பவமொன்றில் குற்றம் சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சாவை நாமல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிறைக்குச் சென்று பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து அங்கு ஊடங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே நாமல் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் தேவைகளை கருத்தில் கொள்ளாத தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் குற்றம் சாட்டினார். (இ-7)

# நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும்

## அமைச்சர் அஜித் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என அமைச்சர் அஜித் பீ பெரேரா நேற்று கொழும்பில் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். இது குறித்து தொடர்ந்தும் பேசிய அவர், "நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவது குறித்து ஐக்கிய தேசிய முன்னணி தீர்மானிக்கவில்லை.

தற்போதைய நாடாளுமன்றின் ஆயுட்காலம் முடிந்த பின்னரே பொதுத் தேர்தல் நடத்தப்படும். எனினும், முன்கூட்டியே நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலர் முயற்சிக்கின்றனர்.

எவ்வாறாயினும், முன்கூட்டியே தேர்தலை நடத்துவதற்குத் தீர்மானிக்கவில்லை. இந்நிலையில், எதிர்வரும் நாடாளுமன்றத்



தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் இடம் பெறும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நபர் ஒருவர் மீது தாக்குதல்

# ரஞ்சித் சொய்சா உட்பட நால்வருக்குப் பிணை!



(கொழும்பு)

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா உட்பட நால்வரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பெல்மடுல்ல நீதவான் நீதிமன்றம் நேற்றுக் காலை இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அதனடிப்படையில் தலா இரண்டு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 16ஆம் திகதி கொடகவெல பிரதேசத்தில் வைத்து நபர் ஒருவர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அதன்படி கடந்த 20 ஆம் திகதி காலை கொடகவெல பொலிஸ் நிலையத்தில் ஆஜரானதையடுத்து கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது அவர்களை ஜனவரி மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பெல்மடுல்ல நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# போர்க்குற்றங்கள் குறித்த தனது பொறுப்புக் கூறலை இலங்கை மறைக்கின்றது

## பிரிட்டன் பேராசிரியர் குற்றச்சாட்டு

(லண்டன்)

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமின்மை காரணமாக போர்க்குற்றங்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறல் மறைக்கப்பட்டுள்ளதாக லண்டன் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞான திணைக்கள உதவி பேராசிரியர் கேட் க்ரோனின் பார்மன் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பற்றிய தகவல்களை வெளியிடும் யூ.என்.டிஸ்பெச் இணையத்தளம், கேட் க்ரோனின் பார்மன் இவ்வாறு குறிப்பிட்டதாக செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்து 9 வருடங்கள் கடந்து விட்டன. இதன்போது பாரிய மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றதுடன் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்படனர் எனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் போர்க்குற்றங்கள் தொடர்பில் இதுவரை நீதிக்கு முன் எவரும் நிறுத்தப்படவில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில், தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமின்மை ஊடாக யுத்தத்தின் போது ஏற்பட்ட போர்க்குற்றங்களை இலங்கை அரசாங்கம் மறைக்கின்றதெனவும் அவர் தெரிவித்தார்.

ஆகையால் தற்போதைய சூழ்நிலையில் போர்க்குற்றங்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறலை வெளியுலகத்திற்குக் கொண்டு வருவதற்கான சவாலை இலங்கையின் செயற்பாடு ஏற்படுத்தியுள்ளதாகவும் கேட் க்ரோனின் பார்மன் தெரிவித்துள்ளார். (இ-7)

# இனவாதத்தைப் பரப்ப அரசியல்வாதிகளுக்கு இடமளிக்க வேண்டாம்

## மதத்தலைவர்களிடம் சபாநாய்கர் கோரிக்கை

(கொழும்பு)

பௌத்த விகாரைகள், இஸ்லாம் பள்ளிவாசல்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் இனவாதத்தையோ அல்லது மதவாதத்தையோ பரப்ப அரசியல்வாதிகளுக்கு இடமளிக்க வேண்டாம் என சபாநாயகர் கரு ஜெயசூரிய சகல சமயத் தலைவர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கமைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க பொது சமூகத்தை அணி திரட்ட பங்களிப்பை வழங்குமாறு சமயத் தலைவர்களிடம் கோரிக்கை விடுப்பதாகவும், இதற்கான சர்வமத தலைவர்களின் பதிலை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே சர்வ மத மாநாட்டு அமைப்பின் பிரதிநிதிகள் சபாநாயகர் கரு ஜெயசூரியவைச் சந்தித்துள்ளனர். ஜனநாயகத்தை பாதுகாக்க சபாநாயகர் செயற்பட்ட விதம் தொடர்பில், சர்வ மதத் தலைவர்கள் தமது பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

சுதந்திரத்தின் பின்னர், நாட்டு அரசியலில் ஏற்பட்ட படிப்படியான வெற்றிகள் மட்டுமல்லாது தோல்விகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (இ-7)

# 31ம் நாள்

# நீங்கா நினைவுகளுடன்...




## சின்னப்பு யோசவ் செல்வநாயகம்

(ஆசிர்வாதம் ஸ்ரோர்ஸ்,
ஆசிர் வணிக நிலைய உரிமையாளர்)

பிறப்பு:- 1945.11.03 இறப்பு:-2018.11.30

அன்புக்கோர் அணிகலனாய்
தந்தைக்கோர் இலக்கணமாய்
உற்றாருக்கு உறுதுணையாய்
அண்டிவந்தோர்க்கு ஆதரவாய்
பெற்றோருக்கு பெருமை சேர்த்து
எளிமையாய் வாழ்ந்து காட்டி
தனிமனிதனாய் சரித்திரம் படைத்து
கடமையே கண்ணெனப் போற்றி
நன்றி மறவாத நல் ஊழியன்
ஊர் போற்ற வாழ்ந்த உத்தமர்
மறைந்தாலும் மறையாப் புகழோடு
வாழும் எமது அன்புத் தந்தையின்
ஆன்மா ஆண்டவன் பாகத்தில்
அன்னையுடன் இணைந்து
இளைப்பாற மன்றாடுகின்றோம்.



எமது தந்தையின் மறைவின்போது எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்து எமது துயரில் நேரிலும் வெளிநாடுகளிலிருந்தும் ஆறுதலும் தேறுதலும் தந்த அனைத்துள்ளங்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு திருப்பலியில் பங்குகொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யோ.செ.அலெக்ஸ் நிக்சன் (மகன்)
கி.சே.அனிற்ரா சுபோஜினி (மகள்)
யோ.செ.ரஜீவ் (மகன்)

16/3, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(6836)

# ரணில்- சஜித் தலைமையில் ஐ.தே.க.வெற்றிபெறும்

## சுஜீவ சேனசிங்க நம்பிக்கை



(கொழும்பு)

அரசியல் நெருக்கடியில் ஐக்கிய தேசிய கட்சியினர் பணத்திற்கும் முறையற்ற அரசாங்கத்தின் பதவிக்கும் விலைபோகவில்லை. அனைவரும் ஒன்றிணைந்தே நீதித்துறையின் ஊடாக ஜனநாயகத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளோம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஆகியோரது தலைமைத்துவத்தின் கீழ் ஐக்கிய தேசியக்கட்சி முன்னேற்றமடையும் என விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

விஞ்ஞான.தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கடமைகளை நேற்று வெள்ளிக்கிழமை பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சி புதிய விடயங்களை வரவேற்கின்றது. 2020ஆம் ஆண்டுக்குப் பிறகு அரசியல் ரீதியில் நிலையான மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும். நாட்டுத் தலைவராக இனி ஐக்கிய தேசியக்கட்சியினரே தெரிவு செய்யப்படுவார்கள். அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கி பலருக்கு பல விடயங்களைத்தெளிவுபடுத்துவோம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தில் ஐக்கிய தேசிய கட்சியே மாறுபட்ட ஒரு அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்லும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## புதிய அரசியலமைப்பு உட்பட

# எதிர்கால நடவடிக்கைகளில் பௌத்தத்திற்கே முன்னுரிமை

## பிரதமர் ரணில் திட்டவட்டம்

(கண்டி)

**இலங்கையின் எதிர்கால நடவடிக்கைகளில் பௌத்த மதத்திற்கே முன்னுரிமை வழங்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

நேற்றுக் காலை கண்டியில் அஸ்கிரிய பீடாதிபதியைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் அண்மையில் அரசியல் நெருக்கடி ஏற்பட்ட வேளை அரசமைப்பையும் மக்களின் இறைமையையும் பாதுகாப்பதற்காக பௌத்தமத பீடாதிபதிகள் காட்டிய அக்கறையை பிரதமர் பாராட்டியுள்ளார்.

மாவனல்லயில் புத்தரின் சிலைகள் உடைக்கப்பட்ட விவகாரத்தை கையாள்வதற்காக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியை நியமித்துள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.



இலங்கையின் புதிய அரசமைப்பை உருவாக்கும்போது பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கும் ஏற்பாட்டில் மாற்றங்கள் இருக்காது என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பொருளாதாரத்தை மாற்ற ஐக்கிய தேசியக்கட்சி தயார்

## காவிந்த எம்.பி.கூறுகிறார்




(கம்பஹா)

எதிர்வரும் 2 வருடங்களுக்குள் நாட்டின் பொருளாதாரத்தில் எதிர்பார்க்காத அளவிலான மாற்றங்களை எதிர்ப்பார்ப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்காவிந்த ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கம்பஹா பகுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கு தீர்வொன்றை வழங்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஐக்கிய தேசிய கட்சியைப் பிளவுபடுத்துவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சியால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எஸ்.பி.திஸாநாயக்க உட்பட 16 பேர் அடங்கிய குழு தற்போது பிரதிபலனை அனுபவித்துக் கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஐக்கிய தேசியக் கட்சியை வழிநடத்தும் சுமந்திரனின் கட்டுப்பாட்டில் சபாநாயகர்

## பிரசன்ன ரணவீர தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற ஜனநாயகம் மக்கள் ஆணை பற்றி பேசும் சபாநாயகர் கருஜெயசூரிய பாராளுமன்றத்தினுள் ஐக்கிய தேசியக் கட்சியை வழிநடத்தும் சுமந்திரனுடைய ஆலோசனைகளுக்குக் கட்டுப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

2015 ஆம் ஆண்டு 54 உறுப்பினர்களைக் கொண்டிருந்த போதும் தற்போது நூறு உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்ற போதும் எமக்கு எதிர்க்கட்சி அந்தஸ்தை வழங்காது. வெறும் 14 உறுப்பினர்கள் மாத்திரமே மீதமுள்ள கூட்டமைப்பிற்கு தொடர்ந்தும் எதிர்க்கட்சி அந்தஸ்தை சபாநாயகர் வழங்கியுள்ளார் என பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீர தெரிவித்தார்.



பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

2015 ஆம்ஆண்டு ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றதிலிருந்து பாதாள உலகக் குழு மற்றும் மனிதப்படுகொலைகள் அதிகரித்துள்ளன. அன்று ஜே.ஆர். ஜெயவர்த்தன கூறியதைப் போன்று தற்போது நாட்டில் மக்கள் அனைவரும் தத்தமது பாதுகாப்பை தாமே உறுதிசெய்துகொள்ள வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், நீண்ட நாளை விருப்பமொன்று நிறைவேறலாம், நல்லவர்களின் தொடர்புகள் விரிவடையும் நாள்.

**மேடம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், இலாப நோக்கோடு பழகியவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொழில் விருத்தியுண்டு.

**இடபம்:** காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள். பிறர் உதவியுண்டு.

**மிதுனம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், நண்பர்களின் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும்.

**கும்பம்:** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புகள் கூடும் நாள், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை | | |
| சூரி, சனி | குரு, புத | சுக் | சந் |

கிரகநிலை
சந்திராஷ்டமம்
சதயம், பூரட்டாதி

29.12.2018
மார்கழி 14, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
சப்தமி முற்பகல் 9.18 மணிவரை
உத்தரம் பிற்பகல் 2.17 மணிவரை
சுபநேரம் 3.28-4.58 மணிவரை
இராகுகாலம் 9.28-10.58 மணிவரை
கெர்ப்போட்டம் ஆரம்பம்

வளவன்

**கடகம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தொழிலில் பொறுப்புக்கள் கூடும் நாள், குடும்பத்தாரின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**மகரம்:** குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், அறை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், கைவிட்டுப் போன பொருளொன்று மீண்டும் கைக்கு வந்து சேரலாம்.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ் வீர்கள் விருந்தினர் வருகையுண்டு.

**தனுசு:** குடும்பத்தில் ஒற்றுமை கூடும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம். கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்:** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் மேலோங்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் பிரியப்படுவீர்கள். வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)


தென் புலோலி வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தின் அருகில் அமைந்துள்ள "பரந்தாமன்" ஆச்சிரமத்தில் மார்கழி மாதத்தின் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் திருவாசக முற்றோதல் நடைபெறும். (இ-5)





சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு "உடல், உள ஆரோக்கியத்தைப் பாதிக்கும் உடற்பருமன்" எனும் தொனிப்பொருளில் கடந்த திங்கட்கிழமை கொடிகாமம் பழைய பிரதேசசபை மண்டபத்தில் இலவச மருத்துவ முகாம் இடம்பெற்றது. சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் திருமதி சியாமளா துரைரட்ணமும்,சிறப்பு விருந்தினர்களாக கொடிகாமம் கிராமிய சித்த மருத்துவமனைப் பொறுப்பதிகாரி திருமதி.கனகேஸ்வரி மற்றும் சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் செ.மயூரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் பிரதேச சபை உறுப்பினர்கள்,பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றனர். (படங்கள்:-சுபேசன்)

# 40 மின்விளக்குகள் பொருத்தல்



(சாவகச்சேரி)

கொடிகாமம் நகருக்கு 2018ஆம் ஆண்டின் பிரதேச சபை நிதி ஒதுக்கீட்டில் இருந்து 40 எல்.ஈ.டி மின் விளக்குகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் பொருத்தப்பட்டன. ஐந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இந்த மின் விளக்குகள் பொருத்தப் பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளனர். (இ-29-30)

# மின் குமிழ்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை உறுப்பினர் சாந்தரூபனால் குருநகர் மீனவத் தொழிலாளர்கள் சார்பாக ஜே.மக்மில்லனிடம் கடந்த 26 அம் திகதி ஒரு தொகை மின்குமிழ்கள் வழங்கப்பட்டு மாநகரசபை மின்சார இணைப்பு சேவையாளர்களால் பொருத்தப்பட்டுள்ளன.

சுதந்திரக்கட்சியின் யாழ் மாநகர சபை உறுப்பினர் சாந்தரூபனால் மீன்பிடித் தொழிலாளர்களின் நன்மை கருதி வீதி விளக்குகளுக்காக 60 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# வீதியை புனரமைக்க கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஜே/250 கிழவன் காணி வீடமைப்புத்திட்டத்திற்குச் செல்லும் பிரதான பாதை பொது மக்களால் பயன்படுத்த முடியாதளவுக்கு குண்டும் குழியுமாகக் காணப்படுவதாக பொது மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறித்த வீதி தேசிய வீடமைப்பு அதிகார சபையால் கட்டப்பட்ட 35 வீடுகளுக்குச் செல்லும் பிரதான பாதையாகக் காணப்படுவதுடன் தினமும் அதிகமான பொது மக்கள் பயன்படுத்தும் பாதையாகவும் காணப்படுகிறது.

எனவே இவ் வீதியைப் புனரமைப்பதற்கு மக்கள்பிரதிநிதிகளும் அதிகாரிகளும் முன்வர வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக தெல்லிப்பழைப் பிரதேச செயலரைத்தொடர்புகொண்ட போது, மக்களின் தேவைகள் குறித்து தான் அறிந்ததாகவும் அடுத்த ஆண்டின் பெப்வரி மாதத்திற்கு முன்பு குறித்த வீதியைப் புனரமைப்பதாக உறுதியளித்தார். (இ-10)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இராஜகிராம சனசமூக நிலையத்தில் வடமராட்சி தெற்கு-மேற்குப் பிரதேச சபையின் 15 ஆம் வட்டார உறுப்பினர் க.கிரிதரன் தலைமையில் அறுபது பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினார். (இ-5)

# பரீட்சைகளில் வெற்றி பெற்ற மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அரியாலை அபிவிருத்திச் சங்கம் அரியாலை பிரதேசத்தில் வாழ்கின்ற வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு கற்றலுக்கான உதவிகளை வழங்கி வருகிறது.

2019ஆம் ஆண்டுக்கான உதவி வழங்கும் நிகழ்வும், உதவித்திட்டத்தின் மூலம் பயன்பெற்று பரீட்சைகளில் வெற்றிபெற்ற மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை - 9 மணிக்கு சங்கத்தின் தலைவர் சு.சண்முகரட்ணம் தலைமையில் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எப்ஙக்ஸ் அன்ரன் கலந்து கொள்வார். (இ-7)

# ஆலய வீதி புனரமைப்பு



(பொற்பதி)

பல வருடங்களாகத் திருத்தப்படாமல் இருந்த திக்கம் பனிக்கர் ஆலய வீதிகளைப் புனரமைக்குமாறு மக்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் துரித அபிவிருத்தித்திட்டத்தின்மூலம் ரூபாய் 1.5 மில்லியன் ஒதுக்கீடு செய்துள்ளார். இந்நிதி ஒதுக்கீட்டின் மூலம் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-5-64)

# விநாயகர் முன்பள்ளியின் கலைவிழாவும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் கலை விழாவும் பரிசளிப்பும் நாளை 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்.கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் நிலையத் தலைவர் செ.மயூரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளரும் யாழ்.சிவப்பிரகாசம் மகா வித்தியாலய ஆசிரியருமான செ.பிரதாப், யாழ்.கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் நா.கருணாகரன், கௌரவ விருந்தினர்களாக கைதடி தென்கிழக்கு கிராம உத்தியோகத்தர் திருமதி கு.கோகிலா, கைதடி பொது நூலக பிரதம நூலகர் திருமதி ராணி சிவசுப்பிரமணியம், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் திருமதி இராசேந்திரம் ஜானகி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# உறவுகளுக்கு உதவும் கரங்கள் உதவி





(கிளிநொச்சி)

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக உணவுப் பொருட்கள் வழங்கும் பொருட்டு புத்தூர் உறவுகளுக்கு உதவும் கரங்கள் அமைப்பினூடாக யாழ்.மக்களிடமும் வர்த்தக நிலையங்களிலும் புலம்பெயர் உறவுகளிடமும் சேகரிக்கப்பட்ட உலர் உணவுப் பொருட்களின் ஒரு தொகுதிய அண்மையில் கையளித்தனர்.

இவ் உலர் உணவுப்பொருட்களானவை பாதிக்கப்பட்டு சுதந்திரபுரம் மகா வித்தியாலயம் மற்றும் இருட்டு மடு இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த மக்களுக்கு முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக் குடியிருப்பு பிரதேசத்தின் பிரதேச செயலகத்தின் செயலாளர் ஊடாக கையளிப்பட்ட தோடு சுண்டிக்குளம் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாகச் சென்றும் கையளிக்கப்பட்டன. (இ-7)

# தமிழ் எம்.பியொருவருக்கு புதிய அமைச்சை உருவாக்கி வழங்க பிரதமர் ரணில் முயற்சி

(கொழும்பு)

மக்களுக்கு சேவை செய்யக்கூடிய வகையில் அமைச்சு ஒன்று கிடைக்காத பட்சத்தில் தான் அமைச்சு பதவியை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

அமைச்சு பதவி தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு நேற்று முன்தினம் பதில் அளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலைமையின் பேரது ஜனநாயத்தை பாதுகாக்க வேண்டும் என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மலையக மக்கள் முன்னணி தனது முழுமையான ஆதரவை வழங்கியிருந்தது.

அதனடிப்படையில் தற்பொழுது மீண்டும் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டு அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் தமிழ் முற்போக்கு கூட்டணியில் இருவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசியல்குழப்பநிலைமை ஏற்பட்ட பொழுது மலையக மக்கள் முன்னணி ரணில் விக்கிரமசிங்கவிடம் பேச்சுவார்த்தை நடத்திய போது அவர், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவி ஒன்றையும், பிரதி அமைச்சு பதவி ஒன்றையும் மலையக மக்கள் முன்னணிக்கு தருவதாக ஏற்றுக் கொண்டார்.

ஆனால் அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆக மாறியதன் காரணமாக அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்விற்கு எங்களுடைய கட்சி சார்பாக கடிதம் ஒன்றை வழங்கியிருந்தோம்.


குறிப்பிட்ட கடிதத்தில் மலையக மக்கள் முன்னணியின் வளர்ச்சியை கருத்திற் கொண்டு எனக்கு கல்வி இராஜாங்க அமைச்சையும், இந்து மத விவகார அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சையும் எங்களுடைய கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமாருக்கு, பிரதி அமைச்சு பதவியையும் கோரியிருந்தோம்.

இது தொடர்பாக கடிதம் மூலமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

ஆனால் பிரதமர் எனக்கு கபினட் அந்தஸ்து அற்ற அமைச்சு ஒன்றையும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமாருக்கு பிரதி அமைச்சு பதவி ஒன்றையும் வழங்குவதாக தெரிவித்திருந்தார். அதனை நாங்கள் ஏற்றுக் கொண்டோம்.

தற்பொழுது அது தொடர்பில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளதுடன், எனக்கு ஏதோ ஒரு புதிய அமைச்சை உருவாக்கி தருவதற்கு முயற்சி செய்து வருவதாகவும் பிரதி அமைச்சு தொடர்பில் எந்த விதமான முடிவும் இல்லாமல் இருப்பதை நான் கேள்விப்படுகின்றேன்.

அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் மக்கள் முன்னணி என்ற வகையில் நாம் அமைச்சு பதவிகளை பெற்றுக் கொள்ளமாட்டோம்.




அதே நேரத்தில் எதிரகட்சிக்கு சென்று அமரவும் மாட்டோம். தொடர்ந்தும் எங்களுடைய ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்குவதற்கும் மலையக மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது.


நான் தனியே அமைச்சராக இருந்து கொண்டு அதன் பயன்களை அனுபவிப்பதை விட மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதே எனது நோக்கமாகும்.

எனவே அவ்வாறான ஒரு அமைச்சு பதவி கிடைக்காத சந்தர்ப்பத்தில் மலையக மக்கள் முன்னணி அமைச்சு பதவியை பொறுப்பேற்காது.

மக்களுக்கு சேவை செய்ய முடியாத ஒரு அமைச்சை ஏற்பதை விட ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது சிறந்தது என தான் கருதுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கொழும்பு துறைமுகத்திற்கு சாகல கண்காணிப்பு விஜயம்





(கொழும்பு)

துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் சாகல ரத்நாயக்க, கொழும்பு துறைமுகத்திற்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

குறித்த விஜயத்தை அவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை மேற்கொண்டுள்ளார்.

இவ்விஜயத்தின், போது துறைமுக அதிகார சபை தலைவரின் அலுவலகம், ஹாபர் மாஸ்டர் அலுவலகம் (Harbour Master Office), ஜயபாலு முனையத்தின் நிர்வாகக் கட்டடம் (JCT Administration Building) உள்ளடங்கலாக துறைமுகத்தில் உள்ள பல இடங்களை கண்காணித்தார்.

இதன் போது துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பராக்கிரம திஸாநாயக்க, இலங்கை துறைமுக அதிகார சபையின் முகாமைத்துவ அத்தியட்சகர் அத்துல ஹேவாவிதாரண, இலங்கை துறைமுக அதிகார சபையின் செயற்பாட்டு அத்தியட்சகர் ஜெயந்த பெரேரா உள்ளடங்கலாக நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர். (இ-7)


**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாககணித்துத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-076 835 1932, 021 223 2222

உரும்பிராய்.

(6730)





**அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்**

இணுவில்-மருதனார் மடம், சுன்னாகம்

இசை ஆராதனை

29.12.2018 சனிக்கிழமை பகல் 11 மணிக்கு

வீணை:- N.S. வாகீசன்

மிருதங்கம்:- வ.ரமணா

கடம்: பு.ரவிசங்கர்

கீபோட்:- V.செந்தூரன்

தபேலா:- க.நந்தகுமார்

அனுசரணை:-யோகா ரான்ஸ்போட், கந்தர்மடம்



**ஈசா யோகா வகுப்புக்கள்**

சத்குரு ஜக்கி வாசுதேவ் ஈசா அறக்கட்டளை





**கலாநிதி கௌரிபாலன் ஈசா யோகா கத்தாயோக ஆசிரியர்**

**சூரிய கிரியா**

சூரியன்தான் இவ்வுலகில் எல்லா இயக்கத்திற்கும் காரணமாகவுள்ளது. சூரியசக்தியே இவ்வுலகை இயக்குகின்றது. சூரியசக்தியே மறைமுகமாக உங்கள் உடலையும் இயக்குகின்றது.

நீங்கள் சூரியநமஸ்காரத்தை பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள், சூரியகிரியாவில் இருந்தே சூரிய நமஸ்காரம் உருவானது. சூரிய கிரியா மிகசக்தி வாய்ந்தபயிற்சி. சூரியகிரியா எமது உடலில் சூரியசக்தியை புத்துணர்வைடையச் செய்யும் எம்மை இயற்கையுடன் இசையச்செய்யும்.

**சூரியகிரியாவின் பலன்கள்:**

1. உடலுக்கும்,மனத்துக்கும் சமநிலையை உண்டாக்கும், மனதை அமைதியுடன் சந்தோஷமாக இருக்க வழிவகுக்கும்.
2. இருதயத்துக்கு இரத்தோட்டத்தை கூட்டி அதை மிக நன்றாக இயங்க உதவி செய்யும்.
3. உணவை நன்றாக சமிபாடடையச் செய்யும்.
4. சிறுநீரகங்களை நன்றாக தொழிற்படச் செய்யும்.
5. உடலின் தடுப்புச் சக்தியை கூட்டும்.
6. உடலில் உள்ளசுரப்பிகள் செம்மையாக்கும்.
7. மனஒருமை,ஞாபகசக்தி,கற்றுக்கொள்ளல் என்னும் தன்மைகளை முன்னேற்றும்.

**1.இடம்:-** கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம், கரணவாய் கிழக்கு,கரவெட்டி.

**29.12.2018 மாலை 5.00 -7.00**

**30.12.2018 மாலை 5.00 - 7.00**

**தொடர்பு, பதிவுகள் 071 924 7919**

குறிப்பு:- • சுகவீனம் உள்ளவர்கள் வைத்திய கலாநிதி கௌரிபாலன் யோகாசனம் அவர்களுக்கு எப்படி உதவி செய்யும் என்பதை கலந்துரையாட சந்தர்ப்பம் உண்டு.

• மதிய உணவை மாலை ஒரு மணிக்கு முதல் உட்கொள்ளல் அவசியம். (தளர்வான இறுக்கம் இல்லாது) உடைகள் பயிற்சிக்கு பெண்கள் கழுத்து மூடிய ஆடைகள் அவசியம்.



**மானிப்பாயில்**

மானிப்பாயில் பண்டிகைக் காலத்திற்கான விசேட சலுகை

**றஞ்சிற் மோட்டோர்ஸ்**

**(RRSC MOTORS)**

கொண்டா மோட்டார் சைக்கிளினைக் கொள்வனவு செய்து பண்டிகைக்கால சிறப்பு சலுகைகளைப் பெற்றிடுங்கள்.



எம்மிடம் குறைந்த ஆவணங்களுடன் லீசிங் செய்யும் வசதி

எம்மிடம் விசேட சலுகைகள்

அனைத்து வகையான பழைய மோட்டார் சைக்கிள்களைக் கொடுத்து புதிய கொண்டா மோட்டார் சைக்கிளைப் பெற்றிடும் வசதி

**முழுப் பணம் மூலமாக**

- சிறப்புப் பரிசில்
- காப்புறுதி (மூன்றாம் நபர்)
- யக்கெட்
- இலவச சேவைகள்
- இரண்டு வருட உத்தரவாதம்

**லீசிங் மூலமாக**

- சிறப்புப் பரிசில்
- பதிவுக்கட்டணம்
- காப்புறுதி
- தலைக்கவசம்
- யக்கெட்
- இலவச சேவைகள்
- இரண்டு வருட உத்தரவாதம்

Special OFFER




rrscmanipay@gmail.com

Honda Ranjit

றஞ்சிற் மோட்டோர்ஸ் (RRSC MOTORS)

இல.311A யாழ்.வீதி. மானிப்பாய்.

(சுதுமலைச் சந்தி அருகாமை)

T.P:021 492 7627 | 021 225 5228

077 310 7549 | 076 833 9898

(C-4824)

# சிறுவனைக்கொண்டு குளோரின் கரைத்த சம்பவம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குக!

## முல்லைத்தீவு மாவட்ட அதிபர் உத்தரவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இந்துபுரம் கிராமத்தில் 9 வயது சிறுவனைக்கொண்டு குளோரின் கரைப்பித்த சம்பவம் தொடர்பில் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாவட்ட அரசாங்க அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை குறித்த பிரதேசத்தில் வெள்ள நீர் கலந்த கிணறுகளை சுத்திகரிப்பதற்காக குளோரின் இடப்பட்டது. இந்த செயற்பாட்டிற்காக இரு ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

குறித்த இரு ஊழியர்களும் வீடுகளிற்கு சென்றுள்ளனர். பெற்றோர் வேலையின் நிமித்தம் வீட்டில் இல்லாத நிலையில், 9 வயது சிறுவனை குளோரினைக் கரைக்குமாறு கோரியுள்ளனர்.

அச்சிறுவனும் அவர்கள் குறிப்பிட்டவாறே குளோரினைக் கைகளால் கரைத்துள்ளான். பின்னர் குறித்த சிறுவனிடம் கரைத்த குளோரினை கிணற்றில் விடுமாறு கூறி திரும்பி சென்றுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் சிறுவனின் பெற்றோர் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

விசாரணை மேற்கொண்ட முல்லைத்தீவு அரசாங்க அதிபர் சம்பவம் தொடர்பில் விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் மாங்குளம் பொது சுகாதார பரிசோதகர் விஜய ஐங்கரன் நேற்றுக் காலை சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

சம்பவம் தொடர்பில் 9 வயது சிறுவனிடம் விசாரணை மேற்கொண்டதுடன், அவர்களின் பெற்றோருடன் தொடர்புகொண்டும் விசாரணை மேற்கொண்டார்.

சம்பவம் இடம்பெற்றுள்ளமை தொடர்பில் விசாரணைகளில் உறுதியாகியுள்ளதாகவும் தெரிவித்த பொது சுகாதார பரிசோதகர் இரு நபர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தமக்கு பணித்ததற்கமைய தாம் நேரடியாக விசாரணையை மேற்கொண்டுள்ளதாகவும் இந்த விசாரணை அறிக்கையை மாவட்ட அரசாங்க அதிபரிற்கு அனுப்ப உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்டவர்கள் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். இது போன்று எவ்வித சம்பவங்களும் இடம்பெறாது எனவும் அவர் உறுதிபட தெரிவித்தார். (2)

# மொத்த இழப்புக்களின் அறிக்கையை தயார் செய்ய ஆறுகுழுக்கள் அமைப்பு

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட மொத்த இழப்புக்கள் தொடர்பான முழுமையான அறிக்கையை தயார் செய்வதற்காக, மாவட்டத்தில் 6 விசேட குழுக்கள் அமைக்கப்பட்டு தரவு திரட்டும் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவிய அசாதாரண காலநிலை காரணமாக கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருந்தது.

அதன் காரணமாகப் பல ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டு வீடுகளை விட்டு இடம்பெயர்ந்ததோடு அவர்களின் நெல் வயல்கள், கால்நடைகள், மக்கள் போக்குவரத்து செய்யும் வீதிகள் என்பன கடும் சேதங்களுக்கு இலக்காகியிருந்தன.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு உடனடியாகச் செயற்படும் வகையில் 6 விசேட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைக்கப்பட்ட 6 விசேட குழுக்களில் கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிற்கு தலா இரு குழுக்கள் வீதமும் பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிற்குத் தலா ஒரு குழு வீதமும் செயற்படும்.

அவ்வாறு செயற்படும் குழுக்களின் இறுதி அறிக்கை அடுத்தாண்டு முதல் வாரத்தில் இறுதி செய்யப்பட்டு முழுமையான அறிக்கையாக வெளியிடப்படும்.

அதன் மூலம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட வீடுகள், இறந்த கால்நடைகள், சுகாதாரம், சேதமடைந்த வீதிகள், பாலங்கள், அழிவடைந்த நெல் வயல்கள் மற்றும் வாழ்வாதார அழிவுகள் என்பன தனித்தனியாக கணக்கிடப்பட்டு அதற்கான பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு மாவட்டத்தின் ஒட்டு மொத்தமான இழப்பின் பெறுமதி கண்டறியப்படும்.

இவ்வாறு முழுமையான தரவுகளைப் பெற்று கணக்கிடப்படும் நிலையில் கண்டறியப்பட்ட தேவை மதிப்பீடுகளின் அடிப்படையில் அடுத்த கட்ட அபிவிருத்திக்கான பணிகளும் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (2)




# வவுனியாவில் தொடர்ச்சியாக பெய்த மழையினால் மூவாயிரத்து 588 ஏக்கர் விவசாய நிலங்கள் அழிவு

## கமநல அபிவிருத்தி திணைக்கள மாவட்ட உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக மூவாயிரத்து 588.75 ஏக்கர் விவசாய நிலங்கள் அழிவடைந்துள்ளது என கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் இ.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் 48 ஆயிரத்து 902 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்த நிலையில் தற்போது 48 ஆயிரத்து 914 ஏக்கர் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய நீர்ப்பாசனத் திற்கு உட்பட்ட குளங்களில் ஆறாயிரத்து 529 ஏக்கர் நிலப்பரப்பிலும், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழான நடுத்தர குளங்களின் கீழ் ஐயாயிரத்து 585 ஏக்கரும், எமது திணைக்களத்திற்கு உட்பட்ட 661 குளங்களில் 29 ஆயிரத்து 800 ஏக்கரும், மானாவாரி அடிப்படையில் 7 ஆயிரம் ஏக்கரும் என மொத்தமாக 47 ஆயிரத்து 914 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரைக்கும் 29 ஆயிரத்து 895 ஏக்கருக்கு விவசாயிகள் உரமானியத்தைப் பெற்றுள்ளார்கள்.

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இதுவரை 3588.75 ஏக்கர் அழிவடைந்துள்ளது.

இதில்90 வீதமான காணிகள் வவுனியா வடக்கு பிரதேசத்தில் அழிவடைந்துள்ளன.

அதேபோன்று யானையினால் 17 ஏக்கர் அழிவுக்குட்பட்டுள்ளது. உழுந்து பயிர்ச்செய்கையில் 150 ஏக்கர் வெள்ளத்தினால் அழிவடைந்துள்ளது. இது தொடர்பான தகவல்களை திரட்டி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

# அனர்த்தம் ஏற்படும் போது அனைத்து மதத்தவர்களும் ஒன்றாக இருக்கின்றார்கள்

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு





(மன்னார்)

நாட்டில் வெள்ளம், சூறாவளி, நெருப்பு இவற்றினால் அனர்த்தம் ஏற்படும் போது அனைத்து மதத்தவர்களும் ஒன்றாக இருக்கின்றனர். அனர்த்தம் முடிந்து சந்தோசமாக வீட்டில் இருக்கும்போது எனது மதம் பெரியது. உனது மதம் சிறியது என்று அனைவரும் சண்டை பிடிக்கின்றனர். இந்த எண்ணம் மாறவேண்டும். அதுவே நாட்டிற்கு அபிவிருத்தியை ஏற்படுத்தும் என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

வடமாகாண கல்வி அமைச்சின் கலாசார திணைக்களம் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஒளிவிழா மன்னார் மாந்தை மேற்கு நகர விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஆளுநர்,

மதங்கள் முரண்பாடு இல்லாது மனிதர்கள் இருக்க வேண்டும் என்று சொல்லுகின்றபோதும் தெய்வங்களை கும்பிடச் செல்லும் பக்தர்கள் ஒருவருக்கு ஒருவர் சண்டை பிடிக்கின்றார்கள்.

மதங்கள் மனிதநேயத்தை வளர்க்க வலியுறுத்துகின்றன.

நாம் அதனை பின்பற்றவில்லை ஆன்மாவின் விடுதலைக்காக தெய்வத்தை நினைத்து தவம் செய்கின்றவர் மதத்திற்காக வன்முறையில் ஈடுபடுகின்றனர் என்றார். (2-9-285)

# தமிழர் மரபுக்கலைகள் நூல் வெளியீடு நாளை

(வவுனியா)

பண்டிதர் வீரசிங்கம் பிரதீபனின் தமிழர் மரபுக் கலைகள் நூல் வெளியீட்டு விழா நாளை 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா கந்தசுவாமி கோவில் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திருமதி.சுஜீவா சிவதாஸ்கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா, செட்டிகுளம் பிரதேச செயலர் க.சிவகரன், சிவநெறிப்புலவர் சீ.ஏ.இராமஸ்வாமி, கோவில்குளம் சிவன்கோவில் ஆதீனகர்த்தா ஆ.நவரத்தினராசா, மன்னார் தமிழ் சங்க நிறுவுநர் தமிழ்நேசன் அடிகளார், வவுனியா கந்தசாமி கோவில்பொருளாளர்க.வேல்மாறன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

விசேட விருந்தினர்களாக வவுனியா உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. பிரியதர்சினி சஜீவன், வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர் திருமதி. வீ.சூரியாழினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூலாய்வுரையை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முதுநிலை விரிவுரையாளர் மி.சூசைதாசன் நிகழ்த்தவுள்ளார்.

நூலின் முதற் பிரதியை அருட்கலைவாருதி ஸ்தபதி அ.சண்முகவடிவேல் பெறவுள்ளார்.

கலை நிகழ்வுகளாக நிருத்தியார்ப்பண நாட்டிய கலாயத்தின் பள்ளு நாட்டிய நாடகம், அகிலாண்டேஸ்வரி நுண்கலைக் கல்லூரியினரின் இராவணேசன் வட மோடிக்கூத்து ஆகியவை நடைபெறவுள்ளன. (2)




சாவகச்சேரி ஸ்ரார் உணவக உரிமையாளரின் அனுசரணையில் கிளிநொச்சி மக்கள் காப்பகம் ஊடாக இருபது பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்:-மகாலிங்கம்)

# கிருமித் தொற்றால் சிறுமி உயிரிழப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு முத்தையன்கட்டு இடதுகரை ஜீவநகர் பகுதியில் கிருமித் தொற்று காரணமாக சிறுமி ஒருவர் அண்மையில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சந்திரபாலன் சானுயா (வயது-9) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த சிறுமி காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பிரஸ்தாப சிறுமியின் மரணத்திற்கு கிருமித் தொற்றே காரணம் என வைத்தியசாலைத் தரப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# பாலங்கள் அமைக்க குறுக்கறுத்து வெட்டப்பட்ட வீதி சீர்செய்யப்படவில்லை

## உர வகைகளை கொண்டு செல்ல முடியாது விவசாயிகள் அவதி



(பூநகரி)

பூநகரி சோபாலபிட்டி-மறவகுறிச்சி வீதி திருத்த வேலைகள் நடைபெறும் நிலையில் இரு பாலங்கள் அமைப்பதற்காக வீதியை குறுக்கறுத்து வெட்டிய நிலையில் வீதியில் கல்லையும், கிரவல் மண்ணையும் பறித்துள்ளமையால் கடந்து 10 நாட்களாக மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வூர் பொதுமக்கள் இது தொடர்பில் பிரதேச சபை தவிசாளரிடமும் கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தரிடமும் முறைப்பாடுகளை செய்துள்ளார்கள்.

இதேவேளை பால வேலை செய்யும் போது துணை வீதி அமைக்காத நிலையில் அவ்வீதியில் இருக்கும் பிள்ளையார் ஆலயத்திற்கு பூசைக்கு குருக்கள் செல்ல முடியாத நிலையில் பூசை இடை நிறுத்தப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குறித்த வீதியூடாகவே விவசாய நிலங்களுக்கு உர வகைகளை விவசாயிகள் எடுத்துச் செல்வதாகவும் வீதியின் அவல நிலையால் தாம் தற்போது உர வகைகளை எடுத்துச் செல்ல முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி வழியாகப் பயணிப்போர் வேளாண்மை செய்யப்பட்டுள்ள வயல்களின் ஊடாக செல்வதால் அவை மிதிக்கப்பட்டு மடிவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். ஆதலால் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள், பொது மக்கள், ஆலய பரிபாலன சபையினர் கோரிக்கை விடுக்கின்றனர். (2-84)

# போலியாக நடித்து வீதியில் யாசகம் செய்த விசித்திரமான பெண் அடையாளம்

## வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

மனதை நெகிழச் செய்யும் வகையில் போலியாக நடித்து வீதியில் யாசகம் செய்த விசித்திரமான பெண் வவுனியாவில் அடையாளம் காணப்பட்டு சொந்த இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

வவுனியா-மன்னார் வீதியில் போலியாக நடித்து வீதியில் சென்றவர்களிடம் யாசகம் செய்த பெண் ஒருவர் ஊடகவியலாளர் மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தால் அடையாளம் காணப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டு சொந்த இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நேற்று காலை வவுனியா, மன்னார் வீதி, வேப்பங்குளம் பகுதியில் இருந்து பெண் ஒருவர் நடக்க முடியாதவராகவும், வாய் பேச முடியாதவராகவும் தன்னை உருமாற்றம் செய்து வீதியில் இருந்து அரக்கிக் கொண்டு யாசகம் செய்துள்ளார்.

இதனை அவதானித்த பலரது மனம் நெகிழ்ந்துள்ளதுடன், பெண் மீது இரக்கப்பட்டு உதவியாக சிறு தொகை பணங்களை வழங்கியதுடன், வாகனங்களில் சென்றோரும், வாகனங்களை நிறுத்தி பணம் வழங்கினர்.

அரக்கிக் கொண்டு சுமார் 2 கிலோமற்றர் தூரம் சென்று குருமன்காடு சந்தியை அடைந்த போது பெண்ணின் அவல நிலை கண்டும், விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்பு இருப்பதை அவதானித்தும் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பினர் குறித்த பெண்ணுடன் சைகையில் உரையாடி பெண்ணின் நிலை குறித்து மாவட்ட சமூக சேவை திணைக்களத்திற்கு தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த சமூக சேவை உத்தியோகத்தர் சக்கர நாற்காலியை வழங்கினர்.

ஆனால் தனக்கு அது வேண்டாம் எனவும், காசு தான் வேண்டும் எனவும் அடம் பிடித்ததுடன். அவ்வாறு அரக்கிச் செல்லவே முயன்றார

பெண்ணின் நடவடிக்கையில் சந்தேகம் அடைந்த சமூக சேவைத் திணைக்கள உத்தி யோகத்தர்கள் வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதுடன், வீதியால் சென்ற சுகாதார அமைச்சின் வாகனம் ஒன்றில் குறித்த பெண்ணை வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

வைத்தியசாலையில் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்போவதாக தெரிவித்ததையடுத்து அந்தப் பெண் உண்மைகளை கூறியுள்ளார்.

தான் மட்டக்களப்பைச் சேர்ந்தவர. யாசகம் செய்வதற்காக பஸ்சில் வவுனியா வந்ததாகவும் ஒரு காலில் பிறப்பில் இருந்து சிறு குறைபாடு உள்ள போதும் நடந்து திரியக் கூடியவர் எனவும் வாய் பேசுபவர் எனவும் தெரிவித்தார்.

பிள்ளைகளுக்காகவே தான் உருமாற்றம் செய்து இயலாதவர் போல் நடித்து யாசகம் செய்வதாகவும் கூறிய தான் இனி அவ்வாறு செய்ய மாட்டேன் எனத் தெவித்திருந்தார்.

இதன்போது குறித்த பெண் வாழ்வதற்கான ஆலோசனைகளை வழங்கிய சமூக சேவைத் திணைக்களமும், ஊடகவியலாளர்களும் மட்டக்களப்புக்கு அனுப்பி வைத்தனர். (2-250)

# கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்படாமையால் திருட்டு சம்பவங்களை பொலிஸார் துப்பறிய முடியவில்லை

## வணிக நிலையங்களில் பொருத்துமாறு பொலிஸார் அறிவுறுத்து

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் உள்ள உரம் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்களின் விற்பனை நிலையம் ஒன்று கடந்த 23 ஆம் திகதி இரவு உடைக்கப்பட்டு சுமார் மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான இரசாயன உபகரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக கடையின் உரிமையாளர் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

கொள்ளைச் சம்பவத்தை தொடர்ந்து மறுநாள் புதுக்குடியிருப்பு வணிகர் நிலைய உரிமையாளர்களை அழைத்த புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வணிக நிலையங்களில் பாதுகாப்பு தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இதன்போது புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் பெரும்பாலான வணிக நிலையங்களில் கண்காணிப்பு கமரா இல்லாத காரணத்தால் வணிக நிலையங்களில் நடைபெறும் திருட்டுச் சம்பவங்களை பொலிஸார் துப்பறிய முடியாத நிலை காணப்படுகின்றது.

முக்கியமான வணிக நிலையங்கள் வீதியைப் பார்த்து புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியிலும், புதுக்குடியிருப்பு இரணைப்பாலை வீதியிலும் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு வீதியிலும் புதுக் குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியிலும் கண்காணிக்கக்கூடியவாறு வணிக நிலையங்கள் கண்காணிப்பு கமராவை பொருத்த வேண்டும் எனவும் புதுக்குடியிருப்பு வணிகர் சங்கத்திடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-281)




# மன்னார் மக்கள் மன்றத்தினால் வெள்ள இடர் உதவி வழங்கல்



(மன்னார்)

வெள்ளப் பாதிப்புக்குள்ளான முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு உதவும் வகையில் மன்னார் மாவட்டத்தில் நிவாரணப் பொருட்களைச் சேகரிக்கும் பணியில் இளைஞர் குழுவினர் ஈடுபட்டிருந்த நிலையில், ஒரு தொகுதி நிவாரணப் பொருட்களை நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று வழங்கி வைத்துள்ளனர்.

இதன்படி முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு, தேவிபுரம் இடைதங்கல் முகாமில் உள்ள 102 குடும்பத்தினருக்கு உலருணவு பொருட்கள் அடங்கிய பொதியும் 60 குடும்பங்களுக்கு நுளம்பு வலையும் சிறுவர்களையும் நோயாளர்களையும்கொண்ட குடும்பத்திற்கு பால்மாவும் வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்ட இளைஞர்கள் குழு மற்றும் துளிர் உதவும் கரங்கள் இணைந்து மன்னார் மக்கள் மன்றத்தினூடாக குறித்த உதவிகள்ள நேரடியாக சென்று கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (2-285)

# தும்புருவில் குளநீர் குடிமனையினுள் நுழைவு

## 39 குடும்பங்கள் இடைத்தங்கல் முகாம்களில்

(பூநகரி)

பூநகரி ஜெயபுரம் பகுதியில் தும்புருவில் வான் பாய ஆரம்பித்துள்ள நிலையில் வீடுகளுக்குள் வெள்ளநீர் நுழைந்தமையால் அப்பகுதிக்குச் சென்ற பூநகரி பிரதேசசபை தவிசாளர் அ.ஐயம்பிள்ளை, பிரதேச சபை வட்டார உறுப்பினர் சந்திரபோல் ஆகியோரின் உதவியுடன் அம்மக்களை மீட்டு ஜெயபுரம் மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

39 குடும்பத்தைச் சேர்ந்த 127 பேர் இம்முகாமில் தங்கியுள்ளார்கள்.

இவர்களுக்கு பிரதேச செயலகத்தால் சமைத்த உணவுகள், படுக்கை விரிப்புக்கள், அத்தியாவசியப் பொருட்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

மேலதிக உதவிகளை வழங்க அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (2-84)

# முல்லைத்தீவில் இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்ட குடும்பங்கள் வீடு திரும்பல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொட்டித் தீர்த்த மழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளத்தினால் மக்களின் வாழ் இடங்களுக்குள் வெள்ளம் புகுந்துள்ள நிலையில் தற்போது மழை நீர் வடிந்தோடியுள்ள நிலையில் மக்கள் தமது வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இந்நிலையில் வவுனியா வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட ஒட்டுசுட்டான் எல்லையில் அமைந்துள்ள கந்தரோடை குளம் அதிக மழை காரணமாக நீர் நிரம்பி வழிந்தோட ஆரம்பித்தமையை அடுத்து கொட்டுகள் திறந்து விடப்பட்டுள்ளமையால் நீர் கருவேலன் கண்டல் ஆறு ஊடாக பண்டாரவன்னியன் கிராமத்தை நோக்கி சென்றுள்ளது.

இதனால் 28 குடும்பங்கள் இடம்பெயர்ந்து கருவேலன் கண்டல் அ.த.க. பாடசாலையில் தங்கவைக்கப்பட்டு நீர் வடிந்தோடியுள்ளதால் மக்கள் வீடுகளுக்கு திரும்பியுள்ளார்கள்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் 9 ஆயிரத்து 574 குடும்பங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்து 499 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

86 வீடுகள் முழுமையாகவும் 2 ஆயிரத்து 297 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன. 11 இடைத்தங்கல் முகாம்களில் ஆயிரத்து 566 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 889 மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று. ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு, துணுக்காய், வெலிஓயா பிரதேசங்களில் இந்த பாதிப்புக்கள் இடம்பெற்றுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்து மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (2-281)

# கிளிநொச்சி பொதுச்சந்தை வியாபாரிகள் மரக்கறி வகைகள் சேகரித்து கையளிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிளிநொச்சி பொதுச்சந்தை வியாபாரிகளால் தேவையான மரக்கறி வகைகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி சேவைச் சந்தை வர்த்தக சங்க தலைவர் அ.யேசுராஜன் தலைமையில் மரக்கறிகள் சேர்க்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களிடம் கையளிக்கப்பட்டன. (2-271)

# பூநகரியில் மின்குமிழ்கள் பொருத்தும் பணி தொடர்கின்றது

(பூநகரி).

பூநகரி பிரதேச சபை எல்லைப்பரப்பினுள் முக்கியமான சந்திகள் உள்ளிட்ட இடங்களிலும் பூநகரி நகர்ப் பகுதிகளிலும் இலங்கை மின்சார சபை கிளிநொச்சி அலுவலகத்தினர் தவிசாளர் அ.ஐயம்பிள்ளையின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் முக்கொம்பன் பிரதேசத்தில் மின்குமிழ்கள் பொருத்தும் பணி ஆரம்பமாகி தொடர்ந்து சகல பகுதிகளுக்கும் மின்குமிழ்கள் பொருத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியில் 20 இலட்சம் ரூபா செலவில் இவ்வேலைத்திட்டம் நடைபெறுவதாக பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (2-84)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–163

## சேதன விவசாயத்தை வளர்த்தெடுக்க முனைந்த அமரர் ஐ.சௌந்தரராசா



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**


இந்த வருடத்தில் பல அதிர்ச்சியான செய்திகளில் வெள்ள அனர்த்தத்தால் வட பகுதி குறிப்பாக வன்னிப் பகுதிகள் அல்லோலகல்லோலப்பட்டிருக்கும் இந்நிலையில் விவசாயத்தின் பாதுகாவலன் என வாழ்ந்து வரலாறாகிக் காட்டி சங்கானை விலா வெளிப்பகுதியில் கீரிமலை பாதையில் பசுமை விஷ்வாலங்கா விவசாயபண்ணை நிறுவனத்தின் (Green Vishwa (Farm Developers) Pvt ltd.) உருவாக்கத்தில் கருவாகி அதனை நிர்வகித்தும் வாழ்ந்த அமரர். ஐ.சௌந்தரராசாவின் திடீர் இழப்பினை எண்ணி இனியொரு பசுமைப் புரட்சியின் பக்கங்கள் நினைந்து கண்ணீரால் நனைந்து கொள்கின்றன.

எப்படியும் வாழலாம் என்னும் இவ்வுலகத் தில் கொண்ட குறிக்கோளில் தீர்க்கமான முடிவெடுத்து பல ஆண்டுகளுக்கு முன்னர் வட்டுக் கோட்டை நிறுவனம் என்னும் பெயரில் நிறுவனமொன்றை உருவாக்கி அதில் பல தொழில் வாய்ப்புக்களை அப்பகுதி விவசாயப் பெருமக்களுக்கும் அவர் தம் பிள்ளைகளை உள்ளீர்த்து இந் நிறுவனத்தினூடாக தொழில் வாய்ப்புக்களையும் பெருக்கி அதற்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த பெரியவர். பெருந்தகையாளர். விவசாயிகளின் தோழனாக தன்னை வரித்துக் கொண்டவர் 26.12.2018 இல் எம்மிடமிருந்து மறைந்து விட்டதனை இந் நல்லுலகம் இருக்கும் வரை நினைவுகூர்ந்து கொள்ளும். வலை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையையும் உருவாக்கி அதனை செம்மையாக இயக்கி வரும் பெருமை இவரைச்சாரும்.

விவசாயிகளுக்காக நிறுவனமொன்றை உருவாக்கி அதிலிருந்து பல விவசாய செயற்பாடுகளை முன்னெடுத்த பெருமைக்குரியவர் இவர். சேதன பொருட்களின் உருவாக்கத்திற்கு வித்திட்ட பெருந்தகை விவசாயிகளுக்கு சேவை வழங்குவதற்காக தன்னையும் தான் உருவாக்கிய நிறுவனத்திற்கும் அயராது உழைத்த மாபெரும் மனிதர் இன்று சாய்ந்து விட்டதென்பதனை ஜீரணிக்கவே முடியவில்லை.

வட்டுக்கோட்டையில் விவசாயிகள் இணைந்த நிறுவனத்தை உருவாக்கி கடைசி வரை தலைவராக தம் பணியை துணிந்து செயலாக்கிக் காட்டிய பெருந்தகை இடையில் அந்த நிறுவனம் வளர்ந்துவரும் நேரத்தில் தன்னை அந்த நிறுவனத்துடன் மட்டுமல்லாது தனது குடும்பத்திலிருந்தும் விடுவித்துக் கொண்டது அனைவரையும் ஒருகணம் துடிக்க வைத்தது மட்டு மல்லாது தீராத சோகத்தையும் வரவழைத்து விட்டது. இப்படியொரு துடிப்புடன் துணிந்து முடிவுகளை எடுக்கும் எழுபது வயது இளையோனை நம் வாழ்வில் இதற்கு முதல் கண்டதில்லை.

சேதன விவசாயத்தை ஊக்குவிக்கும் முழுமையான நோக்கில் அமரர். சௌந்தரராசா தமது முழு நேரத்தையும் அதற்காகவே ஒதுக்கி அதில் வெற்றியும் பெற்றவர் என்றே கூறவேண்டும். குறிப்பாக விவசாயக் குடும்பத்திலிருந்து யுவதிகளை தெரிந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சிகளும் கொடுத்து சேதன விவசாயத்தை ஊக்குவிக்கும் பசளைகள், பீடை கொல்லிகள்



அமரர் ஐ.சௌந்தரராசா

என பலவற்றை பரீட்சித்துப் பார்த்து தற்போது அவற்றை உற் பத்தி செய்யும் விவசாயக் கம்பனியை முதன் முதலாக இலங்கையில் உருவாக்கிய பெருமைக்குரியவர். இந்த நிறுவனத்தில் உற்பத்தியாகும் ரைக்கோடேர்மா என்னும் விவசாயிகளுக்கு நன்மை தருகின்ற பூஞ்சணத்தை மண்வாழ் தாவர நோய்களையும் குறிப்பாக நெமற்றோட்டுக்களையும் கட்டுப்படுத்த உருவாக்கி விவசாயிகளுக்கு சேவை அடிப்படையில் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்காக தமது வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்து வட பகுதியில் விவசாய கம்பனியில் தமது வருமானம் மற்றும் நிதிகளை செலவிட்டு தற்போது அது பாரியளவில் விருத்தி பெற்று சிறந்த ஒரு கம்பனியாக உருவெடுத்து வரும் போது அந்த இமயம் திடீரென சரிந்து விட்டது.

இடர்கள் பேரிடர்களாக எழும் போது அவ்வாறான சந்தர்ப்பங்களில் பணிபுரிபவர்களே அல்லல் பட்ட போது நொந்து ஒரு மூலையில் ஒதுங்கி விடாது சளைக்காது தமது புத்திசாதுரியத்தாலும் அன்பினாலும் பலரையும் அணுகி அந்த இடர்களிலிருந்து விடுபட்டு அனைவரும் போற்றும் வண்ணம் வாழ்ந்து காட்டிய செம்மல் எந்த தருணத்திலும் கோபித்துக் கொண்டதனை பார்த்ததில்லை. அனைத்தையும் தமது செழுமையான அன்பினால் மாற்று வழிகளை இனங்கண்டு அதில் வெற்றியும் கண்டவர் என்பதனை பல நேரங்களில் அருகிலிருந்து பார்த்து வியந்ததுண்டு. வலம்புரியில் வரும் இக்கட்டுரைத் தொடருக்கு அடிப்படையாக அமைந்தது இப் பெரியவரின் செய்தித்தாகம் என்றால் மிகையாகாது. இவருக்காகவே எழுத வேண்டும் என உந்துதல் எப்போதுமே இருக்கும்.

முயற்சிகளுக்கு முழுவடிவம் என்றால் பெரியவர் சௌந்தரராசா என்றால் மிகையாகாது. அசேதன பசளைகளாலும் பீடை நாசினிகளாலும் வட பகுதி குறிப்பாக யாழ்ப்பாணம் குளித்துக் கொண்டிருக்கும் காலத்தில் துணிந்து சேதன விவசாய செய்கையை முன்னெடுக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருந்து அதற்காக கட்டுமானம் மற்றும் செயற்பாடுகளை முடக்கி விட்டு பலரும் வியக்கும் ஒரு நிறுவனத்தை சேவை அடிப்படையில் இயங்க வேண்டும் என்ற கொள்கையுடன் உருவாக்கி அதனை திறம்பட இயங்கி வந்த பெருமையும் இவருக்குண்டு. அவ்வப்போது தமிழ் நாட்டிற்கு சென்று தமிழ் நாட்டு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தமக்குத் தேவையான அறிவையும் பயிற்சிகளையும் பெற்று அந்த தொழில்நுட்பங்களை எம்மவர்களுக்கும் வழங்க வேண்டுமென அனுதினமும் எண்ணமாகக் கொண்ட பெருந்தகையாளரை காண்பது அரிது. அதுமட்டுமின்றி வாழ்ந்து வரலாறாகி அடுத்த சந்ததிக்கு வழியும் காட்டி சென்றிருக்கும் பாங்கு புனிதத்துவமடைந்த புண்ணியம் செய்த ஆத்மாக்களுக்குண்டு. அந்த வகையில் அமரர். சௌந்தரராசாவின் ஆத்மா ஆறுதலடைந்து கொள்ளும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 177

இந்த நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுடன் அன்பாக ஒரு தந்தையைப் போல வாழ்ந்து வழிகாட்டி அவர்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கு உந்துதலாக இருந்த மாமலை திடீரென சரிந்தது பலருக்கும் வியப்பாகவே இருக்கின்றது. இலங்கையில் முதன் முதலாக் உயிரியல் கட்டுப்பாட்டை ஊக்குவிக்கும் இயற்கை எதிரிகள் எனும் நன்மை தரும் நுண்ணுயிரினங்களை விவசாயிக்கு உருவாக்கி அவர்களுக்கு கிடைக்கத்தக்கதாக அதிகளவில் உருவாக்குவதற்காக ஆய்வுகூடமொன்றையும் நிறுவி அதிலிருந்து தாவர நோய் மற்றும் நெமற்றோட்டுக்களை




கட்டுப்படுத்தும் நன்மை தரும் பூஞ்சணங்களை தெரிந் தெடுத்து அவற்றை அதிகளவில் உற்பத்தி செய்த பெருமைக்குரியவர்.

இவருடைய கோரிக்கையின் பேரில் விவசாய குடும்பத்து இரு பெண் பிள்ளைகளுக்கு நுண்ணங்கிகளை கையாளும் நுட்பங்களை யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறையின் ஆய்வுகூடத்தில் பயிற்றுவித்து பின்னர் அவர்களை கன்னொறுவவில் உள்ள பூங்கனியியல் விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் மேலும் பயிற்றுவித்து தற்போது நுண்ணங்கிகள் சார்ந்த அறிவினைப் பெற்ற ஆளுமையுள்ளவர்களாக மாற்றிக்காட்டிய பெருமை இந்த பெருந்தகைக்கேசாரும். விவசாய குடும்பத்து பிள்ளைகளை வழி நடத்தி அவர்களாகவே இவ்வாறான நுண்ணங்கிகளை உற்பத்தி செய்யும் வல்லமையை செயற்படுத்திக்காட்டிய பெருமைக்குரியவர். "வாய்ச் சொல்லில் வீரரடி" என்னும் கூற்றினை மெய்ப்பிக்கும் பல மனிதர்களுக்கு மத்தியில் தானாக உயர்ந்து நின்று பாரதி கண்ட புதுமைப் பெண்களை இங்கே எமது தேசத்தில் ஆளுமையுள்ளவர்களாக உருவாக்கிய இன்னொரு பாரதியை எம் கண் முன்னே நிறுத்தியிருக்கும் அமரர். சௌந்தரராசாவின் உன்னத ஆத்மா இத்தோடு தம் பணியை நிறுத்திக் கொண்டது வியப்பாகவே இருக்கின்றது.

நிறுவன மயமாக்கிய வட்டுக் கோட்டை நிறுவனத்திற்கு இன்னொரு பெயரிட்டு அதனை பசுமை விஷ்வாலங்கா விவசாய பண்ணை உருவாக்க நிறுவனமாக்கி அங்கே ஐந்திலைக்கரைசல், வேம்பிலிருந்து பெறப்படும் பல உற்பத்திப் பொருட்கள், அசோலா உற்பத்தி, மண்புழு வளர்ப்பு, உள்ளிக் கரைசல் என பலவற்றை அறிந்தும் கேட்டும் அனுபவப்பட்டும் உற்பத்தி செய்து விவசாயப் பெருமக்களுக்கு கொடுக்கும் நிலைக்கு உயர்த்தியிருக்கும் இவர் ஒரு சிறந்த நிர்வாகி. இப்பெரியவரின் கனவு நனவாகும் காலம் கனிந்து வந்து கொண்டிருக்கும் வேளையில் தன்னை இழப்புக்குள்ளாக்கி இந் நிறுவனத்தின் எதிர்காலத்தை ஒரு கேள்விக்குரியதாக்கி விட்டார் என்னும்போது மனம் நெருடுகின்றது. ஆயினும் இப் பெருந்தகை கொண்ட கனவு நனவாக வேண்டும் என்பது விவசாயம்சார் நல்லுலகத்தின் விருப்பமும் தேவையுமாகும்.

பெரியவர் கண்ட கனவு நனவாகும் நாள் வெகு துாரத்திலில்லை. அத்துடன் இவரது முழு முயற்சியினாலும் UNDP நிறுவனத்தின் அனுசரணையாலும் சிறந்த ஆய்வுகூடத்தை உள்ளடக்கிய உற்பத்தி பிரிவினையும் உருவாக்கி விஞ்ஞானத்தை விவசாயிகளுக்குள் புகுத்திய பெருமை இவருக்கேயுரியது. இவரது முயற்சிகளுக்கு மாவட்ட அரச அதிபரும் பிரதேச செயலர் களும் பல்கலைக்கழக ஆய்வா ளர்களும் முன்னின்று ஆதரவு தந்ததுடன் இந் நிறுவனத்தின் வளர்ச்சிக்கான பொறிமுறை கட்டமைப்பை உருவாக்கி அதனை கண்காணித்து வருவதும் சிறப்புக்குரியது. விவசாய பெருமக்களுக்கு பல பயிற்சி வகுப்புக்களை ஒழுங்கு செய்து அவர்களின் அறிவினை வளர்ப்பதற்கு அரும் பாடுபட்ட செம்மல் அதனோடு நின்று விடாது பல கண்காட்சிகளில் தமது உறுப்பினர்களையும் பங்குபற்ற வைத்து தமது உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தி அவற்றினது பயன்பாட்டை மக்களும் மாணவர்களும் பயனடைய வைத்த பெருமை இவரையே சாரும்.

பசுமை விஷ்வாலங்கா பண்ணை உற்பத்தி நிறுவனம் தனது அளப்பரிய சேவையை விவசாயப் பெருமக்களுக்கு தொடரவும் அங்கு பணிபுரியும் பணியாளர்களுக்கு தன்னம்பிக்கையை வளர்க்கவும் நாம் அனைவரும் கைகொடுக்க வேண்டும். வட மாகாணத்தில் இப்படியொரு சேவை எண்ணங் கொண்ட நிறுவனத்தை அதன் பணிகளிலிருந்து எள்ளளவும் விலகி விடாது கொண்ட கொள்கையுடன் அது பயணிப்பதற்கு எமது முழு ஆதரவையும் நல்குவதுடன் வாழ்ந்து வரலாறாகி விழுந்தாலும் தமது கொள்கைகளையும் எதிர்பார்ப்புக்களை யும் அங்கு பணிபுரியும் துடிப் பான பெண்பிள்ளைகளிடம் வளர்த்தெடுத்த இப் பெருந்தகையின் கனவினை நனவாக்கும் காலம் நோக்கி நாம் பயணிக்க வேண் டும் என எழுதும் இக் கைகள் அனைவரையும் வேண்டி நிற்கின்றது.

2018 ஆம் ஆண்டு அவரின் பேரிழப்போடு முடிவுறுகின்றது என்றாலும் 2019 இலிருந்து அவர் கொண்ட கனவினை எம்மிடம் விதைத்து விட்ட உணர்வினைப் பெற்றிருக்கின்றோம் என்பதோடு இந்நிறுவனத்தின் ஆணிவேராக இருந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இந் நிறுவனம் மேலும் விவசாயப் பெருமக்களுக்கும் சேதன விவசாயத்திற்கும் அளப்பரிய பணியை ஆற்றிட அனைவரும் உதவிட வேண்டும் எனவும் வேண்டி இப்பெரியவரை இழந்து துயருற்று வாடும் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எப்படியும் வாழலாம் என்னும் இப்பூவுலகில் இப்படித்தான் வாழ வேண்டும் என் நெறிப்படுத்திக் கொண்ட பேராளர்கள் வரிசையில் அமரர். சௌந்தரராசாவும் ஒருவராகின்றார் என்பதனை பெருமிதத்துடன் கூறிக்கொள்வதில் உண வினை உலகுக்கு வழங்கும் விவசாய நல்லுலகம் பெருமைப்படுகின்றது. அவர் விதைத்த விதை வேரினை ஆழமாக விட்டு செழிப்பாக வளர்ந்து பலருக்கும் பயன்படும் என்பதனை நாம் அனைவரும் உறுதி செய்து கொள்வோமாக.

# நாசகார சக்திகளால் புத்தர் சிலைகள் சிதைப்பு

# மத வன்முறைகளைத் தூண்டுபவர்களுக்கு பாரபட்சமின்றி தண்டனை வழங்க வேண்டும்

## முஜிபுர் ரஹ்மான் காட்டம்



(கொழும்பு)

**மாவனல்ல பகுதியில் இனங்களுக்கிடையில் மத ரீதியாக முறுகல் நிலையை உருவாக்கும் சில மோசமான சம்பவங்கள் இடம் பெற்றிருப்பது வேதனைக்குரியதாகும். இனங்களுக்கிடையில் சமாதானத்தை சீர்குலைத்து மத ரீதியிலான மோதல்களை உருவாக்கும் இந்த நாசகார செயல்களின் பின்னணியில் இயங்கும் மோசமான சக்திகளை அவசரமாக இனம் காணவேண்டியது அவசியமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.**

மாவனல்ல பகுதியில் புத்தர் சிலைகள் சில நாசகார சக்திகளால் சிதைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

புத்தரின் சிலைகளை சேதப்படுத்தி இந்நாட்டின் இன, மத நல்லிணக்கத்துக்கும் சமாதானத்திற்கும்சௌஜன்யத்திற்கும் வேட்டு வைத்திருக்கும் இந்த மோசமான அநாகரிக செயற்பாடு வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

மேலும் இந்த சம்பவத்தோடு தொடர்புடைய தீய சக்திகளின் பின்னணி தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவு ஆராய்ந்து சரியான தகவல்களை விரைவில் வெளியிட வேண்டும். இத்தகைய தீய செயல்களில் ஈடுபட்டவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

இனங்களுக்கிடையில் அமைதியின்மையை உருவாக்கி, வன்முறைகளைத் தூண்டும் இத்தகைய மோசமான செயற்பாடுகளை இந்நாட்டில் வாழும் எல்லா சமூகத்தினரும் பக்கச்சார்பின்றி கண்டிக்க முன்வர வேண்டும்.

இதுவே இந்நாட்டில் சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் நேசிக்கும் மக்களின் வேண்டுதலாகும். இனவாதம் எந்த வடிவத்தில், எந்த தளத்தில், எந்த இனத்தில் இருந்து உருப்பெற்றாலும் அதனை எதிர்க்கவும், தகர்த்தெறியவும் நாம் வேறுபாடுகளின்றி ஒன்றிணைய வேண்டும்.

கடந்த காலங்களில் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட இனவாத நடவடிக்கைகள் எமக்கு பலத்த இழப்புகளையும், இனங்களுக்கிடையிலான விரிசல்களையும் ஏற்படுத்தின என்பதை நாம் ஒரு போதும் மறந்து விடக்கூடாது.

நாட்டில் இன விரிசல்களை உருவாக்கி இலாபமடைய காத்துக்கொண்டிருக்கும் குறித்த இனவாத சக்திகள், இனங்களுக்கிடையிலான நல்லுறவை சிதைக்கும் செயற்பாடுகளை அடிக்கடி அரங்கேற்றி வருகின்றன.

இத்தகைய செயற்பாடுகள் எமது நாட்டின் இனங்களுக்கிடையிலான நல்லுறவிற்கு விடுக்கப்படும் பாரிய சவாலாகவும் அச்சுறுத்தலாகவும் இருக்கின்றன.

இந்த வன்முறை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் உண்மையான குற்றவாளிகளை வெகு விரைவில் வெளிச்சத்திற்கு கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.


கடந்த காலங்களில் முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டும், முஸ்லிம்களின் சொத்துக்களை அழித்தும் அரங்கேற்றப்பட்ட வன்முறை நாடகம் இன்று பௌத்தர்கள் புனிதமாக கருதும் புத்தர் சிலைகள் மீதான தாக்குதல்களாக மாறியிருக்கின்றன.

இந்த இனவாத செயற்பாடுகள் நாட்டின் முன்னேற்றநடவடிக்கைகளுக்கு பெரும் முட்டுக்கட்டையும் பின்னடைவுமென்பதை நாங்கள் மறந்து விடக் கூடாது. எமது முன்னேற்றத்திற்கு என்றும் தடையாக இருக்கும் இந்தத் தீய இனவாத, மதவாத நிலைப்பாட்டிலிருந்து நாம் விடுபட வேண்டும்.

இலங்கையர் என்ற ரீதியில் பிற்போக்குவாதத்தை தோற்கடித்து, எமது நாடு எதிர்நோக்கும் சவால்களுக்கு முகம்கொடுக்க முன்வர வேண்டும் என முஜிபுர் றஹ்மான் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்த முற்றாக ஒழித்த பாதாள உலகக் குழு தலைதூக்கியுள்ளது

## செஹான் சேமசிங்க கவலை



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவினுடைய ஆட்சிக் காலத்தில் முற்றாக ஒழிக்கப்பட்டிருந்த பாதாள உலகக் குழு ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி அமைத்ததிலிருந்து தலைதூக்க ஆரம்பித்துள்ளது.

இதன் காரணமாக நாட்டில் மனிதப்படுகொலைகளும் அதிகரித்துள்ளன.

பொது மக்களின் பாதுகாப்பு சுதந்திரம் என்பன கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது.

பொது மக்களின் பாதுகாப்பிற்கு பொறுப்புக்கூற வேண்டிய ஐ.தே.க. அரசாங்கம் பாதாள உலகக் குழுவினருடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வருகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# வெள்ளவத்தையில் இரு வேறு புகையிரத விபத்தில் இருவர் பலி

(கொழும்பு)

வெள்ளவத்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெல்சன் வீதி, முகுது மாவத்தைக்கு அருகில் புகையிரதத்தில் மோதி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7.15 மணியளவில் வெள்ளவத்தை பகுதியில் இருந்து தெஹிவளை நோக்கி பயணித்த புகையிரதத்தில் 65 வயதுடைய ஒருவர் மோதி இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் இதுவரையில் இனங்காணப்படவி ல்லை.

இதேவேளை நேற்று முன்தினம் பிற்பகல் 3.50 மணியளவில் வெள்ளவத்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்படை முகாமிற்கு அருகில் மருதானையிலிருந்து களுத்துறை நோக்கிப் பயணித்த புகையிரதத்தில் மோதி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மொரட்டுவ பகுதியை சேர்ந்த 42 வயதுடைய ராங்கனா நவோதினி இனோஷா பெர்னாண்டோ என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள் ளார்.

இச் சம்பவங்கள் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# பேருந்து தரிப்பு நிலையத்தில் நீண்ட நேரம் காத்திருந்த வாசு



(பொறளை)

பொறளையிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவின் வீட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு விட்டு வீட்டுக்குச் செல்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார வீதியில் நீண்டநேரம் காத்திருந்த சம்பவம் ஊடகங்களில் முக்கிய இடம்பிடித்துள்ளன.

அவருடைய மெய்ப் பாதுகாவலர் ஒருவருடன் அவருடைய இடத்துக்குச் செல்வதற்கு ஊடகவியலாளர் சந்திப்பு நிறைவடைந்த பின்னர் வீதியில் நீண்ட நேரம் காத்திருந்தார்.

அவர் தனது உத்தியோகபூர்வ வாகனத்தில் வருகை தந்திருக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட நேரத்துக்குப் பின்னர் ஆட்டோ ஒன்றுக்கு கையைக் காட்டி நிறுத்திய பின்னர் தன்னுடைய பாதுகாப்பு அதிகாரியை முதலில் ஏறுமாறு கூறிவிட்டு, பின்னர் அவர் ஆட்டோவில் ஏறிச் சென்றுள்ளார். (இ-7)

# கதிர்காமம் யாத்திரை சென்ற 15 பேர் வைத்தியசாலையில்



(புந்தல)

புந்தல - கிரிந்த பிரதான வீதியின் ஊரனிய சந்திக்கு அருகில் நேற்று இடம்பெற்ற பேருந்து விபத்தில் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

கதிர்காமம் யாத்திரைக்காக களுத்துறையில் இருந்து சென்ற பேருந்தொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து வீதியை விட்டு விலகியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த 13 பேர்அம்பாந்தோட்டை வைத்தியசாலையிலும் மற்றைய இருவர் தெபரவெவ ஆதார வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

# நம்பிக்கை - அவநம்பிக்கைக்கிடையே சிக்கிச் சாகிறேன்

## பேரறிவின் தாய் அற்புதம் மனக்குமுறல்



(சென்னை)

தான் தினமும் நம்பிக்கை- அவநம்பிக்கைக் கிடையே சிக்கிச் சாவதாக பேரறிவாளனின் தாயார் அற்புதம் அம்மாள் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன், நளினி, ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய 7 பேரும் 28 ஆண்டுகளாக சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்றனர்.

இவர்கள் அனைவருக்குமே விசாரணை நீதிமன்றத்தில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் அந்த தண்டனையை உச்ச நீதிமன்றம் பல்வேறு கால கட்டங்களில் ஆயுள் தண்டனையாகக் குறைத்து தீர்ப்பளித்தது.

7 தமிழர்களின் விடுதலை கடந்த நான்கரை ஆண்டுகளுக்கு மேலாக தாமதமாகி வந்த நிலையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 161ஆவது பிரிவின்படி அவர்களை விடுவிப்பது குறித்து மாநில ஆளுநரே முடிவெடுக்கலாம் என்று கடந்த செப்டெம்பர் மாதம் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதனடிப்படையில் செப்டெம்பர் 9 ஆம் திகதி தமிழக அமைச்சரவை கூடி 7 தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி தமிழக ஆளுநருக்கு அனுப்பி வைத்தது.

7 தமிழர்களின் நடத்தை உள்ளிட்ட விபரங்கள் அடங்கிய கோப்புகள் தனித்தனியாக தயாரிக்கப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

ஆனால், இன்று வரை தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் இதுகுறித்து எந்த முடிவையும் எடுக்கவில்லை. இதற்கு, தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க. உள்ளிட்ட அரசியல் கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

தமிழக அமைச்சரவை தீர்மானம் இயற்றி 100 நாட்களைக் கடந்த நிலையில், தான் தினமும் நம்பிக்கை- அவநம்பிக்கைக் கிடையே சிக்கிச் சாவதாக பேரறிவாளனின் தாயார் அற்புதம் அம்மாள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில், "விடுதலைக் கோப்பு கையெழுத்தாகல. தினம் நம்பிக்கை- அவநம்பிக்கைக் கிடையே சிக்கிச் சாகிறேன்.

தாமதம் ஏன்னு கேட்டு அறிவு ஒரு ஆர்டிஐ அனுப்பினான். 48 மணி நேரத்துல பதில் கேட்டு 48 நாளும் ஆயிருச்சு. பதில காணோம்.

அரசியல் சட்டத்துக்குதத்தான் மதிப்பில்ல. ஆர்டிஐ-க்குமா செல்லாம போயிரும்?" என பதிவிட்டுள்ளார். (4-7)

# சூடானில் ரொட்டி வி
# எதிராகத் தொடரு

## -20 பேர் உயிரிழப்பு-



(கார்டூம்)

சூடான் நாட்டில் ரொட்டி விலை உயர்வுக்கு எதிரான போராட்டத்தின்போது ஏற்பட்ட வன்முறைகளில் இது வரை 20 பேர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

சூடான் நாட்டில் ரொட்டி உற்பத்திக்கான அரசு மானியங்கள் நிறுத்தப்பட்டதால், ரொட்டி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இது பொது மக்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. ரொட்டி விலை உயர் வுக்கு எதிர்ப்பு தெரிவித்து சமூக ஆர்வலர்கள், எதிர்க் கட்சியினருடன் இணைந்து பொதுமக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த 19 ஆம் திகதி முதல் ரொட்டி விலை உயர்வுக்கு எதிரான போராட்டம் தீவிரமடைந் துள்ளது. போராட்டக்காரர்கள் பல்வேறு பகுதிகளில் வீதி மறியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன், கடைகளை சூறையாடி அங்குள்ள பொருட்களை போராட்டக்காரர்கள் கொள்ளை

# எச்.ஐ.வி.இரத்தம் செலுத்தப்பட்ட விவகாரம்; கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## விஜயபாஸ்கர் தெரிவிப்பு

(சென்னை)

விருதுநகர் மாவட்டம் சிவகாசியைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்ணுக்கு சாத்தூர் அரச மருத்துவ மனையில் வைத்து, எச்.ஐ.வி. இரத்தம் செலுத்தப்பட்ட விவகாரம் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில், இந்த விவகாரம் தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக சுகாதார அமைச்சர் விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 3 பேர் தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும்அவர்மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

# அமெரிக்காவில் பனிப்புயல்! 800 விமானங்கள் ரத்து

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் பனிப்புயல் வீசியதால் நூற்றுக் கணக்கான விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இதனால் விடுமுறைக்காக வெளியூர் செல்ல திட்டமிட்ட பயணிகள் சிரமத்துக்குள்ளாகினர்.

அமெரிக்காவில் தற்போது குளிர்காலம் என்பதால் பனியின் தாக்கம் அதிகமாக உள்ளது. வீதிகளில் பனி சூழ்ந்து காணப்படுவதால் வாகனங்களை இயக்க முடியவில்லை. அதிகளவில் பனி படர்ந்துள்ள வீதிகள் மூடப்பட்டுள்ளன. இதுதவிர அவ்வப்போது பனிப்புயலும் வீசி வருகிறது. இதனால்பொது மக்கள் வெளியில் நடமாட முடியாத நிலை ஏற்பட்டு ள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மத்திய அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் கடுமையான பனிப்புயல் வீசியது. இதன் காரணமாக 800 விமானங்கள் இரத்து செய்யப்பட்டன. 6500க்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமாக புறப்பட்டுச் சென்றன. குறிப்பாக வடக்கு டகோட்டாவில்உள்ள பார்கோ விமான நிலையம் மூடப்பட்டு, அனைத்து விமானங்களும் இரத்து செய்யப்பட்டன.

மத்திய மற்றும் மேற்கு சமவெளிப் பகுதிகளில் மழை, பனிப்பொழிவு மற்றும் பலத்த காற்று வீசியது. இதனால் வீதிப் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. சில வீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டது. நேற்றும்பனியின்தாக்கம் அதிகமாக இருந்தது.



கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு விடுமுறை என்பதால் ஏராளமான பயணிகள் வெளியூர் செல்வதற்கு திட்டமிட்டிருந்தனர். பனிப்புயல் காரணமாக விமானங்கள் ரத்து செய்யப் பட்டதால், பயணிகள் கடும் சிரமத்திற்குள்ளாகினர்.(4-7)

# சொகுசு கார் விபத்து மூன்று பேர் உயிரிழப்பு



(லண்டன்)

ஐஸ்லாந்தில் சொகுசு கார் விபத்துக்குள்ளானதில் பிரிட்டனில் வசிக்கும் இந்திய வம்சாவளி குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உயிரிழந்தனர்.

பிரிட்டனில் வசிக்கும் இந்திய வம்சாவளி குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர், விடுமுறையை கொண்டாடுவதற்காக ஐஸ்லாந்து நாட்டிற்கு சென்றுள்ளனர். அங்கிருந்து நேற்று முன்தினமிரவு ஒரு சொகுசு காரில் அனைவரும் பயணம் மேற்கொண்டனர். பரந்த மணல் சமவெளிப் பகுதியான ஸ்கெய்தரசந்தூரில் உள்ள குறுகிய பாலத்தில் சென்றபோது, கார் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடியது. பின்னர் பாலத்தை உடைத்துக்கொண்டு தரையில் விழுந்து நொருங்கியது.

இந்த விபத்தில் 2 பெண்கள் மற்றும் ஒரு குழந்தை என 3 பேர் உயிரிழந்தனர். அண்ணன், தம்பி மற்றும் இரண்டு குழந்தைகள் பலத்த காயமடைந்தனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் மீட்கப்பட்ட அவர்கள், ஹெலிகொப்டர் மூலம் தலைநகர் ரேக்ஜாவிக்கில் உள்ள வைத்தியசாலை க்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. (4-7)

# ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதரகம் ஏழு ஆண்டுகளுக்குப் பின் திறப்பு!

(டமாஸ்கஸ்)

சிரிய தலைநகர் டமாஸ கஸ் செயற்பட்டு வந்த ஐக்கிய அரபு ராச்சியத்தின் தூதரகம் போர் சூழ்நிலை காரணமாக மூடப்பட்டிருந்த நிலையில் 7 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

குறித்த தூதரகத்தில் அரபு இராச்சியத்தின் தேசிய கொடி நேற்று முன் தினம் வியாழக்கிழமை மீண்டும் உயர்த்தப்பட்டது. இந்த நடவடிக்கையின் ஊடாக மத்திய கிழக்கு ஒத்துழைப்பு ஆணையகம் சிரியாவுடன் இராஜதந்திர உறவுகளை மீளமைத்துள்ளமையை சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதரகம் சிரியாவில் மீண்டும் திறக்கப்பட்டமையானது ஏனைய அரபு தூதரகங்கள் மீள திறக்கப்படுவதற்கான முன்னோடியாகும் என்று அரபு இராச்சியத்தின் வெளிவிவகாரத்துறை பொறுப்பதிகாரி அப்துல் ஹக்கிம் அல்-நயோமி தெரிவித்துள்ளார். (4-7)

# அடுக்கு ப
# ஐந்து பேர்



(மும்பை)

மும்பை, சேம்பர் பகுதி யிலு


# எச்.ஐ.வி.இரத்
# சிசுவுக்கு தொற்

(சென்னை)

எச்.ஐ.வி. தொற்றுள்ள இரத்தம் ஏற்றப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டுள்ள கர்ப்பிணிக்கு மதுரை ராஜாஜி அரச மருத்துவமனையில், மேலதிக சிசிக்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், அவரது வயிற்றிலிருக்கும் 9 மாத சிசுவிற்கு எச்.ஐ. வி. தொற்று பரவாமல் தடுக்கப்படும் என, அந்த மருத்துவமனையின்தலைமை வைத்தியர் சண்முகசுந்தரம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# விலை உயர்வுக்கு ...டரும் போராட்டம்



யடித்துச் செல்வ தும் அதிகரித்துள்ளது. போராட்டக்காரர்களை ஒடுக்க கலவர தடுப்பு பிரிவு பொலிஸார் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இதனால் போராட்டக் காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த வன்முறைப் போராட்டங்கள் மற்றும் பொலிஸ் நடவடிக்கைகளில் 20 பேர் உயிரிழந்துள்ளதாக அரசுத்தரப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது. உயிரி ழந்தவர்களில் 2 பேர் பாது காப்பு படையினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டம் மேலும் தீவிரமடையும் சூழல் உருவாகியிருப்பதால் அனைத்து பகுதிகளிலும் கூடுதல் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, போராட்டக்காரர்களுக்கு எதிரான அடக்குமுறை மற்றும் வன்முறைகளால் அதிருப்தி அடைந்த வடக்கு மாநிலத்தைச் சேர்ந்த ஒரு அமைச்சர் ராஜினாமா செய்துள்ளார். இது ஆளும் கூட்டணிக்கு கூடுதல் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது. (4-7)

# இராணுவச் சட்டம் முடிவுக்கு வந்தது

## -உக்ரேய்ன் ஜனாதிபதி அறிவிப்பு-

(கீவ்)

ரஷ்யாவின் அச்சுறுத்தலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் உக்ரேய்ன் நாட்டில் கடந்த ஒரு மாதகாலமாக நடைமுறையில் இருந்த இராணுவச் சட்டம் முடிவுக்கு வந்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உக்ரேய்னின் கிரிமியா பகுதியை கடந்த 2014இல் ரஷ்யா தன்னுடன் இணைத்ததில் இருந்து இரு நாடுகளுக்குமிடையே பதற்றமான சூழல் நிலவியுள்ளது.

இந்நிலையில், கிரிமியா அருகே கெர்ச் ஜல சந்தியில் உக்ரேய்ன் நாட்டைச் சேர்ந்த 3 கடற்படை கப்பல்களை ரஷ்யா கடந்த மாதம் கைப்பற்றியது. தங்கள் பகுதியில் சட்ட விரோதமாக நுழைந்ததாக கூறி இந்த நடவடிக்கையை ரஷ்ய இராணுவம் எடுத்தது.

ரஷ்யா மற்றும் உக்ரேய்ன் நாடுகள் பகிர்ந்து கொள்ளும் கெர்ச் ஜலசந்தியானது, அஸோவ் கடலுக்கு செல்லும் ஒரே பாதை ஆகும். அந்தப் பகுதியில் ரஷ்யா தனது டேங்கர் கப்பலை நிறுத்தியுள்ளது. அத்து டன் ரஷ்ய போர் விமானங்களும் அந்த பகுதியில் பறக்கின்றன. இதனால் எல்லையில் தொடர்ந்து பதற்றம் நிலவி வந்தது. உக்ரேய்ன் கப்பல்களை ரஷ்யா கைப்பற்றியதையடுத்து அசோவ் கடற்பகுதியில் பதற்றம் மேலும் அதிகரித்தது.

இதையடுத்து நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், ரஷ்ய எல்லையில் உள்ள குறிப்பிட்ட பிராந்தியங்களில் இராணுவத்திற்கு முழு அதிகாரம் வழங்கக்கூடிய இராணுவச் சட்டத்தை அமுல்படுத்த முடிவு செய்தது. இதற்காக பாராளுமன்றத்தில் மசோதா தாக்கல் நிறைவேற்றப்பட்டு,



கடந்த மாதம் 28ஆம் திகதி இராணுவச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. ஒரு மாத காலம் இந்த சட்டம் அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், நாட்டின் எல்லை பிராந்தியங்களில் அமுலில் உள்ள இராணுவச் சட்டம் கடந்த புதன் முடிவுக்கு வந்துவிட்டதாக ஜனாதிபதி பெட்ரோ போரோஷென்கோ நேற்றுமுன்தினம் அறிவித்தார். தேசிய பாதுகாப்பு மற்றும் இராணுவசபைக்கூட்டத்தில்உரையாற்றியபோது இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டார். நாட்டின் பாதுகாப்பு சூழ்நிலை தொடர்பான அனைத்து கூறுகளையும் ஆராய்ந்து இந்த முடிவுக்கு வந்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

# ...த மாடியில் தீ! ...பேர் உயிரிழப்பு!



...ள்ள அடுக்குமாடி கட்ட டத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த கட்டடத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 7.15 மணியளவில் இத்தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது குறித்த சம்பவம் அறிந்து 15 தீயணைப்பு வாகனங்களுடன் அவ்விடத்திற்கு வந்த தீயணைப்பு பிரிவினர், சில மணித்தியாலங்களுக்கு பின்னர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். பின்னர் தீயில் படுகாயமடைந்த 5 பேரையும் மீட்டு, வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்துள்ளனர். (4-7)

# பேருந்து குடைசாய்ந்தது; 8பேர் பலி, 20பேர் படுகாயம்!



(லிமா)

பெருநாட்டின் நெடுஞ்சாலையில் பயணித்துக் கொண்டிருந்த பேருந்து ஒன்று ஆற்றுப் பள்ளத்தாக்கில் குடைசாய்ந்ததில் 8 பேர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற இந்த சம்பவத்தில் 20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அனர்த்தம் இடம்பெற்ற தருணத்தில் குறித்த பேருந்தில் 55 பயணிகள் வரை பயணித்ததாக அந்நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பெரு நாட்டின் ஹுயா சாயோ நகரில் இருந்து லிமா நகரம் வரை சென்று கொண்டிருந்த போது இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

அவசர மீட்புப் பணியாளர் கள் உயிரிழந்தவர்களின் சடலங்களை பேருந்து இடிபாடுகளில் இருந்து மீட்டதுடன், காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்திய சாலைகளில் அனுமதிக கப்பட்டனர். (4-7)

# தீவிர நோயால் பீடிக்கப்பட்ட சிறுவனின் ஆசையை நிறைவேற்றிய ரஷ்ய ஜனாதிபதி

(மொஸ்கோ)

ரஷ்யாவின் தெற்கு பிராந்தியத்தில் உள்ள ஸ்டாவ்ரோபோல் பிரதேசத்தில் வசிக்கும் கொய்லா குஸ்நட்



சோவ் (Kolya Kuznetsov) என்ற 10 வயது சிறுவன் ஒருவனின் கனவை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நிறைவேற்றியுள்ளார்.

தீவிர நோயால் பாதிக்கப்பட்டிருந்த அந்த சிறுவன் 'சம்போ' என்ற மல்யுத்தம் சார்ந்த விளையாட்டில் தொடர்ந்து பயிற்சி பெற்றுக்கொள்ள முடியாது அதிலிருந்து விலக வேண்டியேற்பட்டது.

அத்துடன் அவனுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு கைலாகு கொடுக்கவேண்டும் என்ற நீண்ட நாள் ஆசை இருந்துள்ளது. இந்நிலையில், சிறுவனின் ஆசையை நிறைவேற்றும் வகையில் அவரை கிரெம்ளின் மாளிகைக்கு புடின் வரவழைத்துள்ளார்.

அங்கு தனது தாயுடன் சென்ற கொய்லா குஸ்நட்சோவ்வை புடின் சந்தித்து பேசினார். அதன்பின் சிறுவனுக்கு கைலாகு கொடுத்து அவரது ஆசையை பூர்த்தி செய்து வைத்துள்ளார்.

அவரது போட்டிக்கான ஆடையிலும் புடின் கையெழுத்திட்டுள்ளார். நோயை குணப்படுத்தி பின் முதல் போட்டியில் கலந்து கொள்ளும்பொழுது இந்த ஆடையை அணிந்து கொள்ளலாம் என சிறுவனின் தாய் அவரிடம் உறுதியளித்துள்ளார்.

அத்தோடு, ரஷ்யாவின் கிரெம்ளின் மாளிகையை சுற்றிப் பார்த்த அந்த சிறுவன் அங்குள்ள பல அறைகளுக்கும் சென்றதுடன் 'ஆண்டிரீவ்ஸ்கை' என்ற அறைக்கும் சென்று பார்வையிட்டுள்ளார். (4-7)

# இரத்தம் ஏற்றப்பட்ட கர்ப்பிணியின் ...தொற்றுப் பரவாமல் விசேட சிகிச்சை

எச்.ஐ.வி.தொற்றுள்ள இரத்தம் ஏற்றப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டுள்ள சாத்தூரைச் சேர்ந்த கர்ப்பிணி, மதுரை ராஜாஜி அரச மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மரு த்துவமனையின் முதல் தளத்தில், பிரத்தியேக அறையில் வைத்து அவருக்கு விசேட சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட கர்ப்பிணிக்கு மகப்பேறு மருத்துவத் தலைவர் சாந்தி தலைமையிலான குழுவினர், சிகிச்சையளித்து வருவதாக வைத்தியசாலையின் தலைமை வைத்தியர் சண்முகசுந்தரம் தெரிவித்துள்ளார்.

அவருக்கு மகப்பேறுக்கான சிகிச்சையும், எச்.ஐ.வி. தொற்றைத் தடுப்பதற்கான சிகிச்சையும் வழங்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

9 மாத சிசுவிற்கு எச்.ஐ.வி. தொற்று பரவாமல் தடுப்பதற்கான உரிய சிகிச்சை வழங்கப்படும் என்றும், குழந்தை பிறந்தவுடன், குழந்தைக்கு தேவையான மருந்துகள் கொடுக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது.

குழந்தைக்கு எச்.ஐ.வி. தொற்று பரவாமல் 100 வீதம் தடுக்கப்படும் என்று மருத்துவமனையின் தலைமை வைத்தியர் சண்முகசுந்தரம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (4-7)

# பொதுத்தேர்தலை ஏப்ரலில் நடத்த அரசு தீர்மானம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதாகப் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் ஐ.தே.கவின் தேசிய அமைப்பாளருமான அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலுக்காகக் கட்சியைத் தயார்படுத்துவது தொடர்பில் தம் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தலைவர்களுக்கு யோசனை தெரிவித்துள்ளதாக அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் பலமுள்ள ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமொன்றை அமைப்பதே கட்சியின் நோக்கமாகுமெனத் தெரிவித்த அவர், ஐ.தே.க. எப்போதும் தேர்தலுக்குத் தயாராகவேயுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

தேசிய அரசாங்கமாக எதிர்வரும் சில மாதங்களுக்கு அரசாங்கத்தை முன்னெடுப்பது ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்பார்ப்பாகும் எனத் தெரிவித்த அவர், அது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திலிருந்து விலகிக்கொண்டிருந்தாலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், இதற்கிணங்க 2015 ஒகஸ்ட் மாதம் உருவாக்கப்பட்ட தேசிய அரசாங்கம் தொடர்ந்தும் நடைமுறையிலிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)



### 36 அரச ஊழியர்கள் உட்பட

## இலஞ்சக் குற்றச்சாட்டில் 40 பேர் கைது

(கொழும்பு)

இலஞ்சம்பெற்றுக்கொண்ட சம்பவம் தொடர்பில் வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள் 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்சம்மற்றும் ஊழல்விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் இவர்களுள் 36 பேர் அரசாங்க ஊழியர்கள் எனவும் அந்த ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இலஞ்சம் பெற்றுக் கொள்ளப்படும் சம்பவம் தொடர்பில் தெரியவருகையில் 1954 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தருமாறும், முறைப்பாடுகள் தொடர்பில் இரகசியத் தன்மை பேணப்படுவதுடன், அது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

2 கோடி ரூபாய் இலஞ்சம் பெற்றமையே இவ் வருடத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட அதிகூடிய இலஞ்சத் தொகை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 72 மில்லியன் ரூபாய் மோசடி! சண்.குகவரதனுக்குப் பிணை

(கொழும்பு)

72 மில்லியன் ரூபா பெறுமதியான காசோலை மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்ட மேல் மாகாண சபை உறுப்பினரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் உறுப்பினருமான சண். குகவரதனையும் அவரது மனைவியையும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த இருவரையும் நேற்று முன்தினம் சி.ஐ.டியினர் கல்கிசை மேலதிக நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே நீதவான் அவர்களை 25 மில்லியன் பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளில் செல்ல அனுமதியளித்தார்.

அத்துடன் இருவரின் கடவுச்சீட்டுக்களையும் நீதிமன்றப் பொறுப்பில் எடுக்க உத்தரவிட்ட நீதவான், அவர்களது வெளிநாட்டுப் பயணங்களையும் பிணை கையெழுத்திட்ட மூவரின் வெளிநாட்டுப் பயணங்களையும் தடை செய்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)



## நிவாரணங்கள் வழங்கல்



(கரணவாய்)

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் பொற்பதி நலன்புரிச்சங்க அனுசரணையில் குடாரப்பு கிராமத்திலுள்ள 35 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழக்கப்பட்டன.

இந் நிகழ்வு 9 ஆம் வட்டார உறுப்பினர் ஆ.சுரேஸ்குமார் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் ஜனநாயகப் போராளிகள் கட்சித் தலைவர் சி.வேந்தன் நலன்புரிச்சங்கத் தலைவர் அசோக், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், மற்றும் கட்சி இளைஞர்கள் மற்றும் கிராம மக்களும் கலந்து கொண்டனர். (இ-60)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நினைவாற்றல்

கடன் கொடுத்து விட்டு அதை மறக்காமல் நினைத்துக் கொண்டு இருப்பது சகஜம். கடன் வாங்கி விட்டு அதை அப்பவே மறந்து விடுவதும் இந்த உலகத்தில் ரொம்ப சகஜம். போன மாதம் பத்து ரூபா கொடுத்தேனே அதை வாங்கிக் கொண்டு போகலாம் என்று வந்தேன் என்றான்!

வந்தவனைப் பார்த்து 'நீ யார்' என்று கேட்பான் இவன். வந்தவனையே ஞாபகம் இல்லை என்னும் போது...! வாங்கிய பணமா ஞாபகம் இருக்கப் போகிறது! தனக்கு வேண்டாதது, மனதுக்குக் கசப்பானது! இதை மனிதன் மறந்து விடுகிறானாம்! உளவியல் அறிஞர் நினைவாற்றலை இரண்டு வகையாகப் பிரிக்கிறார்கள்.

குறுகிய கால நினைவு, நீண்ட காலநினைவு. நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தைப் பொறுத்தும் நோக்கத்தைப் பொறுத்தும் அதை இப்படிப் பிரிக்கிறார்கள். இன்றைக்குப் பேப்பரில் நமது 'ராசி பலன்' என்ன என்று பார்க்கிறோம். இதை நமது வாழ்நாள் முழுவதும் ஞாபகம் வைத்துகொள்ள வேண்டும் என்று அவசியம் இல்லை!

ஒரு திருக்குறள் படிக்கிறோம். அது நமக்கு எப்பவும் ஞாபகம் இருக்க வேண்டும். பாடம் படிக்கும் சமயத்தில் ஞாபக சக்தி ரொம்ப அவசியம். நினைவாற்றல் என்பது நாம் கற்கக்கூடிய தன்மையைப் பொருத்து என்று சொல்கிறார்கள்! இதை வளர்த்துக் கொள்வதற்குச் சில வழி முறைகள் இருக்கிறது. முதலில் படிப்பதற்கான ஆர்வம் வேண்டும்.

வேண்டா வெறுப்பாகப் போய் உட்கார்ந்தால் என்னத்துக்கு ஆகும்? படிப்பதை, கேட்பதை நன்றாக மனதில் வாங்கிக்கொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் இருக்க வேண்டும். கவனத்தை வேறு வகையில் சிதற விடக் கூடாது. ஒருமுகப்படுத்த வேண்டும்.

படிக்கும் பாடத்தை மனதுக்குள்ளே பாடமாக்கிப் பார்க்க வேண்டும். அதற்குக் கற்பனையைப் பயன்படுத்த வேண்டும். அதனால் தான் படத்தோடு பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். படிக்கும் செய்தியை மற்ற வகைச் செய்தியோடு தொடர்புபடுத்திப் படிக்க வேண்டும். நமக்குத் தெரிந்த மற்றப் பொருளோடு இணைத்துப் பார்க்க வேண்டும்.

நயத்துடன் பயிலவேண்டும், இசையுடன் பயில வேண்டும். ரொம்ப நாள் நினைவு வைத்துக் கொள்வதற்கு இது நல்ல வழி சின்னப்பிள்ளைகள் வாய்ப்பாடு கற்றுக்கொள்ளும் முறையை யோசித்துப் பாருங்கள் அது மாதிரி.

நாம் என்ன படிக்கிறோமா அதைப் பிரித்துப் பொருள் தெரிந்து படிக்க வேண்டும். அர்த்தம் தெரியாமல் நெட்டுரு போடுவது அதிக நாளைக்குத் தங்காது. கூடுமான வரைக்கும் திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்ப்பது நல்லது. படித்ததை மனக்கண் முன்னால் கொண்டு வரவேண்டும். படித்ததற்குப் பின்னர் புத்தகத்தை மூடிவைத்து விட்டுத் திரும்பச் சொல்லிப் பார்க்க வேண்டும்.

படித்ததற்குப் பின்னர் ஓய்வு அல்லது உறக்கம் ரொம்ப நல்லது. படித்ததற்குப் பின்னர் தான் தூக்கம் வரவேண்டும்... படிக்கும் போதே தூக்கம் வந்தால் அது நல்லது இல்லை. படித்ததற்குப் பின்னர் கடினமான வேலையில் ஈடுபடுவதும் நல்லதில்லை! ஒரு புத்தகத்தை அல்லது பாடத்தைப் படிப்பதற்கு முன்னர் அதனுடைய உட்பொருளை அல்லது கருத்தைத் தெரிந்து கொண்டு படிப்பது நல்லது.

பொதுவாகத் திரும்பத் திரும்பப் படிப்பது ஞாபக சக்தி வளர்த்துக் கொள்வதற்கு ஒரு சிறந்த வழி. அதனால் நினைவாற்றலை வளர்த்துக் கொள்வதற்குத் தேவை ஆர்வம், ஊக்கம், மன உறுதி. படிக்கும் காலத்திலேயே இந்தப் பழக்கம் வந்து விட்டால் பின்னாடி ரொம்பவும் உதவியாக இருக்கும்.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள். தலைவர்களாகி விட்டால் நிறையப் புள்ளிவிபரம் எல்லாம் சொல்ல வேண்டியிருக்கும். ஞாபகசக்தி இல்லை என்றால் எப்படிச் சொல்வது? ஜெனரல் ஸ்மட்ஸ் என்று ஒருத்தர். தென்னாபிரிக்காவில் பிரதமராக இருந்தார்.

பாராளுமன்றத்தில் பேசுவதற்கு அவருக்குப் புள்ளி விபரம் தேவைப்பட்டது. மறு நாளே அதைப்பற்றிப் பேசியாக வேண்டும். செயலாளரைக் கூப்பிட்டார். 'இதோபாருங்கள் நாளைக்கு இந்தப் புள்ளி விபரங்கள் எனக்குத் தேவை. இதை வைத்துத் தான் எதிர்க்கட்சிகளைத் திணறடிக்க வேண்டும்' என்று சொன்னார்.

செயலாளர் திகைத்துப் போய் விட்டார். 'சேர் இந்தப் புள்ளிவிபரங்களைச் சேகரிப்பதற்குக் குறைந்தது ஐந்து வருடம் ஆகும்!' என்று சொன்னார். 'அது எல்லாம் எனக்குத் தெரியாது... நீங்கள் என்ன செய்வீர்களோ... நாளைக்கு எனக்குப் புள்ளிவிபரம் கொடுக்கிறீர்கள்!' என்று விட்டார் ஸ்மட்ஸ். ஆனால் அவரால் ஒன்றும் முடியவில்லை!

மறுநாள் பாராளுமன்றம் கூடியது. புள்ளி விபரத்தை அள்ளிவீசி எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்து விட்டார் ஸ்மட்ஸ். பேச்சு முடிந்ததும் செயலாளர் ஓடிவந்தார்... 'எப்படி சேர் இது? இவ்வளவு புள்ளிவிபரங்களை ஒரே இரவில் எப்படிச் சேகரித்தீர்கள்... ஆச்சரியமாக இருக்கே!' என்றார்.

ஸ்மட்ஸ் சிரித்துக்கொண்டே சொன்னார், 'இந்த விபரங்களைச் சேகரிக்க அரசாங்கத்திற்கே ஐந்து வருடம் ஆகும் என்று சொன்னீர்கள். அப்படி என்றால்... இது எல்லாம் உண்மைதானா என்று கண்டுபிடிக்க எதிர்கட்சிகளுக்கு 15 வருடம் ஆகும்... அவர்கள் கண்டுபிடித்து என்னை மடக்குவதற்குள்ளே நான் நிச்சயமாக இந்தப் பதவியில் இருக்கப் போவதில்லை! அதுதான் அடித்து விட்டேன்! என்றாராம்.

# பிரதமரின் பெயர்ப்பலகைக்குச் சேதம்



(நாவலப்பிட்டி)

நாவலப்பிட்டி நகரில்வைக்கப்பட்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயர்ப் பலகையை, இனந்தெரியாத நபர்கள் சேதப்படுத்தியுள்ளனர் என்று, நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில், நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதிய பிரதமரை வரவேற்கும் வகையில், நாவலப்பிட்டி நகர சபையின் அனுமதியுடன், நகரில் வைக்கப்பட்டிருந்த பெயர்ப்பலகைக்கே, இவ்வாறு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதென, நகர சபையின் தவிசாளர் சசங்க சம்பத்சஞ்சே, பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என்றும், நகரிலுள்ள வியாபார நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வியின் உதவியுடன், சந்தேக நபர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)



கேலிச்சித்திரம்

# மைத்திரியை கொலை செய்ய திட்டமிடப்பட்டதா? நாமல் குமாரவைக் கைது செய்ய நடவடிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டமை குறித்து உறுதியான தகவல்கள் இல்லை என தெரியவருகிறது.

நாமல் குமார என்பவரின் தொலைபேசியில் அழிக்கப்பட்ட தரவுகளில் கொலை சூழ்ச்சி தொடர்பில் எவ்வித தகவல்களும் இல்லை என குற்ற விசாரணை திணைக்கள தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொலிஸ் அதிகாரி பிரசன்ன அல்விஸை கொலை செய்வது தொடர்பில் நாமல் குமார மற்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் நாலக சில்வா மேற்கொண்ட கலந்துரையாடல் மாத்திரமே அழிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

பிரதி பொலிஸ்மா அதிபர் நாலக சில்வாவின் கல்வி தகுதி தொடர்பில் முறைப்பாடு செய்த அதிகாரிகள் மூன்று பேரில் குறித்த பொலிஸ் அதிகாரி அல்விஸ் டி சில்வாவும் உள்ளார்.

அவர் பயங்கரவாத விசாரணை பிரிவில் பணியை ஆரம்பிப்பதற்கு முன்னர் குறித்த பொலிஸ் அதிகாரி அந்த பிரிவில் சேவை செய்துள்ளார்.

இந்நிலையில் நாமல் குமார பொலிஸ் மற்றும் மக்களைப் பிழையாக திசை திருப்பியுள்ளதாகவும், அந்த குற்றச்சாட்டு அடிப்படையில் அவரை கைது செய்ய வாய்ப்புகள் உள்ளதாகவும் தெரிய வருகிறது. (இ-7)

# பாலித ரங்கே பண்டாரவுக்கு அமைச்சர் பதவி கட்டாயம் வழங்கப்பட வேண்டும்

## மனோ கணேசன் வலியுறுத்து



(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவி கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்பதற்கு இரு வேறு கருத்துக்கள் கிடையாது என அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

தகுதியான நபரான ரங்கே பண்டாரவை அமைச்சரவையில் இணைத்து, புத்தளம் மாவட்ட மக்களுக்கு பாரிய சேவையை அரசாங்கம் செய்யும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 30ஆக இருக்க வேண்டும் என்பது எனது நிலைப்பாடு என்ற போதிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்த எண்ணிக்கை 28ஆக இருக்க வேண்டும் என தெரிவித்தார்.

இதனால், சட்டமா அதிபரின் கருத்தை அறிந்து, அது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் மனோ கணேசன் தெரிவித்தார்.

தனக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவிவழங்கப்படாதுபோனால், எதிர்காலத்தில் தீர்மானம் ஒன்றை எடுக்க நேரிடும் என பாலித ரங்கே பண்டார தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



யாழ்.கைதடி வடக்கு அம்பிகா முன்பள்ளியின் வருடாந்த கலை விழாவும் பரிசளிப்பு விழாவும் கடந்த புதன்கிழமை இடம்பெற்றன.இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு சிறார்களுக்கான பரிசில்களை வழங்கினார். இந் நிகழ்வில் சிறார்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், போட்டிகளில் வெற்றிபெற்ற சிறார்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

# செயலாளருக்கு வாகனம் பிரேரணை தோற்கடிப்பு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச சபை செயலாளருக்கு உத்தியோகபூர்வ புதிய வாகனக் கொள்வனவு செய்வதற்கு ஐ.தே. கட்சிஉறுப்பினர்களால்கொண்டுவரப்பட்ட பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

பிரதேச சபையின் இவ்வாண்டுக்கான கொடுப்பனவுகளை வழங்கும் சபையின் அனுமதிக்கான விசேட கூட்டம் பிரதித்தவிசாளர் க.பொன்னையா தலைமையில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் ஐ.தே.கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களான சி.தங்கராஜா, எஸ்.கிருபராஜா ஆகியோரால் கொண்டுவரப்பட்ட பிரேரணையே சபையின் அதிகமான உறுப்பினர்களின் எதிர்ப்பையடுத்து தொற்கடிக்கப்பட்டது. (இ-10)



மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியில் 539 குடும்பங்களுக்கு மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றியத்தின் சார்பில் நேற்று முன்தினம் நிவாரணப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. யுத்தம் காரணமாக மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து 27 வருடங்களின் பின் மீளக் குடியேறிய மக்களே இவ்வுதவியை வழங்கினர். மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைக்கும் வகையில் புலம் பெயர் வாழ் மயிலிட்டி திருப்பூர் ஒன்றிய உறவுகளின் நிதிப்பங்களிப்புடன், மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றியம் பருத்தித்துறை முதல் மயிலிட்டி வரையான பகுதிகளில் சேகரித்த பொருட்களையும் ஒருங்கிணைத்து இந் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. (படங்கள்:- மகாலிங்கம்)



# பாலிதீவு- பயணத்தின் அனுபவம்

10

சோ.நிக்கஷ்
அரியாலை.



பாலித்தீவு பயணம் என்றதும் அநேகரது பட்டியலில் இருக்கும் ஒரு இடம் இந்த பெனிடா தீவு. பயண ஏற்பாட்டு குழு மூலம் நீங்கள் பாலிக்கு செல்வதாக இருந்தால் அவர்களின் பட்டியலில் இந்த இடம் பெரும்பாலும் இடம்பெறாது.

முன்கூட்டியே இதையெல்லாம் விசாரித்து தெரிந்து கொள்வது நல்லது. பயண ஏற்பாட்டுக்குழுவுக்கே எந்த அவசியமும் இல்லை என்பதற்காக தான் இதை இப்போது பகிர்ந்து கொண்டிருக்கிறேன்.

நாங்கள் முதல் நாளில் பெனிடா தீவிற்கான விலை விசாரிப்பில் ஈடுபட்டிருந்தோம். விசாரித்த வரை ஒருநாள் சுற்றுலாவிற்கு அதாவது நாங்கள் தங்கியிருக்கும் விடுதியிலிருந்து sanur துறைமுகத்திற்கு அழைத்துச்செல்வது, அங்கிருந்து தீவுக்கு விரைவுப்படகு, தீவில் நான்கு இடங்களுக்கு அழைத்துச் செல்வது, மதிய உணவு, மற்றும் திரும்ப அழைத்து வருவதற்கு ஆரம்பவிலை 1,200,000 IDRகள். பேரம் பேசி கிட்டத்தட்ட 600,000 IDR வரை இறங்கி வந்தார்கள்.

நாங்களாகவே Sanur துறைமுகத்திற்கு சென்று அங்கு ஏதேனும் விரைவுப்படகு சீட்டை பேரம் பேசி பாதி விலைக்கு பெற்றுக்கொள்ளலாம். பெனிடா தீவில் மோட்டார் வண்டிகளை வாடகைக்கு பெற்று சுற்றிப்பார்ப்போம் என முடிவெடுத்தோம்.

தற்செயலாக குறைந்த விலைக்கு பிரயாணச்சீட்டு எடுக்க முடியவில்லை என்றால் பணம் நட்டம். பயணத்தை நிறுத்தி திரும்பி வருவதானால் நாள் நஷ்டம். எது எப்படியோ நடப்பது நடக்கட்டும் என அன்றைய தினம் காலை 7.30 மணியளவில் Sanur துறைமுகத்திற்கு கிளம்பினோம். ஒரு மணி நேர பயணம். பயணக் கட்டணம் 100,000 IDR.



Sanur துறைமுகத்தில் தான் எங்களுக்கு எரிச்சலூட்டும் பாலியிலேயே பிடிக்காத மனிதனை கண்டோம். ஒரு பயண ஏற்பாட்டு தரகர். நாங்கள் வாகனத்திலிருந்து இறங்கும்போதே எங்களை வந்து பிடித்துக் கொண்டார் அந்த நபர். அவரிடம் விலையை கேட்க சென்று வர மாத்திரம் அதே 400,000 IDR என்றார்.

அவரை தவிர்த்து பிரயாண சீட்டுகள் விற்பனை செய்யும் இடத்திற்கு சென்று விலைகளை விசாரிக்க தொடங்கினோம். ஆனால் அவரோ எங்களை விலை விசாரிப்பதற்கு விடாமல் முந்திக்கொண்டு எல்லா இடங்களிலும் தடைபோட தொடங்கிவிட்டார்.

இருபத்தி மூன்றாம் புலிகேசி திரைப்படத்தில் ஒரு காட்சி வரும் 'அந்தப்பக்கம் பாதாளக்கிணறு..', 'இது வந்த பாதை..' அந்த சம்பவத்தை நினைவு படுத்திக்கொள்ளுங்கள். அப்படியே இப்போது எங்கள் ஐவரையும் அந்த முகம் தெரியாத மனிதரையும் நினைத்துக்கொள்ளுங்கள்.

நாங்கள் யாரிடமும் ஏதும் விசாரிப்பதற்கு முன்பே 'இது லெம்போகன் செல்லும் டிக்கெட்', ' இவங்கட ஸ்பீட் போட் இல்ல', 'இந்த படகு எப்பயோ போயிட்டு' இப்படி எதையாவது சொல்லிக்கொண்டே வந்தார். பொறுக்க முடியாத நாங்கள் ' எங்களுக்கு தெரியும் நீங்க போங்க' என்றும் கூறிப்பார்த்து விட்டோம் கடைசிவரை எங்களை விட்டு அகலவே இல்லை.

சரி நாங்கள் இரண்டு குழுக்களாக பிரிந்து பார்ப்போம் என்றால் யாரோ ஒருவனை அழைத்து தங்கள் மொழியில்ஏதோ சொல்லி இரண்டாவது குழுவுக்கு காவல் போட்டு விட்டார்.

கடைசியாக அவரிடமே இரண்டு இலட்ச ரூபாய் தருகிறோம் முடியுமா முடியாதா என கேட்க ' முடியும்.. வரும்போது நீந்தி தான் வரவேணும்' என்றார்.

அப்படியே போட்டுத் தள்ளலாம்போல இருந்தது. பெரும் போராட்டத்திற்கு பின்பு 260,000 IDRகளிற்கு அவரிடமே பிரயாணச் சீட்டுக்களை பெற்றுக்கொண்டோம்.

அதாவது அவர் தனக்கு தெரிந்த ஒரு சேவை வழங்குநரை அறிமுகப்படுத்தினார்.

நாங்கள் பயணச்சீட்டு எடுத்த சற்று நேரத்திலேயே 5 இஞ்சின் பொருத்திய விரைவுப்படகு Sanur இலிருந்து Nusa penidaவிற்கு கிளம்பியது..

Nusa penidaவில் தரையிறங்கிய போது நேரம் பத்து மணியை தொட்டிருக்கவில்லை. ஆனால் வெயிலோ சுட்டெரித்துக் கொண்டிருந்தது. அது போதாது என்று தூரத்தில் சொற்பமாய் திரண்டிருந்த கறுத்த மேகம் பின்மாலையில் மழையொன்றுக்கான அறிவிப்பை சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தது.

எங்கள் திட்டம் என்னமோ அங்கே சென்று மோட்டார் வண்டி எடுத்துக் கொண்டு சுற்றிப்பார்ப்பது தான். வெயிலோ மழையோ மோட்டார் வண்டி என்று வந்தால் அதை எதிர்கொள்ளத்தான் வேண்டும். துறைமுகத்திலேயே தலா 75,000 IDR ற்கு மூன்று மோட்டார் வண்டிகள் ஒரு நாள் வாடகைக்கு பெற்றுக்கொண்டோம்.

இங்கிருக்கும் வீதிகள் மிக மோசமான நிலையில் இருப்பதோடு அல்லாமல் ஏற்ற இறக்கங்களும் அதிகம். மோசமான நிலையிலிருக்கும் நுவரெலிய வீதி ஒன்றை நினைத்துப் பாருங்கள். ஆனால் அது போல அவ்வளவு அபாயகரமானது இல்லை என்றாலும் சாதாரண வீதிகளோடு ஒப்பிடுகையில் அபாயகரமானது தான். தலைக்கவசம் தேவையில்லை என்கிறார்கள்.

இவற்றை எல்லாம் சமாளிப்பீர்கள் என்றால் மோட்டார் வண்டியை தெரிவு செய்யுங்கள். இல்லாவிடில் கார் ஒன்றினையும் உங்கள் திறமைக்கேற்ப குறைந்த விலையில் வாடகைக்கு அமர்த்திக் கொள்ளலாம். நாங்கள் மோட்டார் வண்டியை தெரிவு செய்தமைக்குரிய மிக முக்கிய காரணம் இங்கு பொலிஸ் கெடுபிடிகள் ஏதுமில்லை என்பது தான்.

(பயணம் தொடரும்)



வேலணை மக்கள் ஒன்றியத்தால் கிளிநொச்சி பன்னங்கண்டி அ.த.க. பாடசாலையில் தங்கியிருந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அன்றாட வாழ்க்கைக்கு தேவையான பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

# செந்தண்மை பூண்டொழுகிய ஓர் அந்தணப் பெரியோன்

## மறைந்தார் மாண்பு



புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்தவர்களில் மூன்று வகை காணப்படுகின்றது. மனிதரில் மனிதர், மனிதரில் மாணிக்கம், மனிதரில் தெய்வம் என்ற ரீதியில் அண்மையில் எம்மை விட்டுப் பிரிந்த யாழ்ப்பாணம் செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில் பிரதம குரு கி.நாராயணக் குருக்கள் மனிதரில் தெய்வமாக விளங்கிய ஓர் உத்தம பண்பாளர்.

இவருடைய முகத்தில் எந்த நேரமும் சிரிப்புத்தான். ஒரு தெய்வீகக் கலையுடன் நடமாடிய பிராமணோத்தமசீலர் இன்று நம்மிடையே இல்லையே என்பதை எண்ணும் போது துக்கம் தொண்டையை அடைக்கின்றது.

அன்னாரின் இழப்பு ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

அந்தண குலத்திலே செந்தண்மை பூண்டொழுகிய ஓர் அந்தணப் பெரியோன் எனும்படி நடமாடும் தெய்வமாக விளங்கிய இவர் முருகப் பெருமானை அலங்கரிப்பதில் அதிக நேரத்தைச் செலவிடுவார். பிராமண தேஜஸ் பொலிவுடன் புன்சிரிப்புத் தவழ நிற்கும் இவர் இல்லாமல் ஆலயமே களையிழந்து காணப்படுகின்றது.

1957 இல் தோன்றிய இவர் தென்னிந்திய கேரளா மாநில திருவனந்தபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கிருஷ்ணஐயர் கோமதியம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரராவார்.

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய குரு சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்களிடம் ஆசார்யாபிஷேகம் பெற்று கீரிமலை உபதபாலதிபர் சபா சுப்ரமண்ய சர்மா மகள் கல்பனா கௌரியை மணந்து கிருஷ்ணயோகம் கிருஷ்ணராஜ், துளசிகா ஆகியோருக்குத் தந்தையானார். 27.04.2018 இல் ஷஷ்டியப்த பூர்த்தி விழாக் கண்ட இவர் இலங்கையில் பல கோயில்களில் மஹோற்சவங்களையும் கும்பாபிஷேகங்களையும் திருமணங்களையும் செய்து வைத்த பெருமையையுடையவர்.

மலேசியா, சிங்கப்பூர் முதலிய இடங்களில் பணி செய்த இவர் பல சமூகப் பணியும் ஆற்றியுள்ளார். எல்லாவிதத்திலும் சிறந்து விளங்கிய இவர் கடந்த 28.11.2018 இல் இவ்வுலக வாழ்வை நீத்து இறைபதமெய்தினார். எல்லோருடனும் அன்பு காட்டிய இவரது மறைவு ஆன்மீகர்களுக்குப் பெரிதும் கவலையை அளித்துள்ளது.


இராசையா ஸ்ரீதரன்

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

132




> 1842 ஆம் ஆண்டு ஏசிளம் அறிக்கையில் உள்ள இந்த விபரங்கள் யாழ்ப்பாணத் தீப கற்பத்திலுள்ள வீடுகளின் தொகை, ஆண், பெண் தொகை என்ற விபரங்கள் காணப்பட்டன. இவ் அறிக்கை 1814 இல் நடந்த மேலுமொரு குடிசன மதிப்பை மேற்கோள் காட்டுகின்றது. 1814 நடந்த அந்தக் குடிசன மதிப்பின் படி மன்னார், வன்னி, யாழ்ப்பாணத் தீபகற் பம் என்னுமிடங்களின் தமிழர் சனத்தொகை 103 377 ஆகக் காணப்பட்டது. 1842 இல் சனத் தொகை 219540 ஆக இருந்தது

1842 ஆம் ஆண்டு ஏசிளம் அறிக்கையில் உள்ள இந்த விபரங்கள் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலுள்ள வீடுகளின் தொகை, ஆண், பெண் தொகை என்ற விபரங்கள் காணப்பட் டன.

இவ் அறிக்கை 1814 இல் நடந்த மேலுமொரு குடிசன மதிப்பை மேற்கோள் காட்டுகின்றது. 1814 நடந்த அந்தக் குடிசன மதிப்பின்படி மன்னார், வன்னி, யாழ்ப்பாணத் தீபகற்பம் என்னுமிடங்களின் தமிழர் சனத்தொகை 103377 ஆகக் காணப்பட்டது. 1842 இல் சனத் தொகை 219540 ஆக இருந்தது.

உண்மையில் 28 வருடங்களில் இப்பிரதேசத்தின் சனத் தொகை 116163 ஆல் அதிகரித்திருந்தது. இவ் அறிக்கையில் கிழக்கு மாகாணம் உள்ளடங்கவில்லை. 1842 ஆம் ஆண்டு குடிசன மதிப்பு யாழ்ப்பாணத் தீபகற் பத்தின் வரைபடத்தையும் கொண்டுள்ளது.

இதில் கிராமம் கிராமமாக சனத்தொகை குறிப்பிடப்பட்டதுடன் இதனுடன் இணைக்கப்பட்ட பட்டியலில் வீடுகளின் எண்ணிக்கை, அவை எவற்றால் கட்டப்பட்டவை (கல் அல்லது மரம்) என்ற விபரத்துடன் எழுத்தறிவு, மதம் சம்பந்தப்பட்ட விபரங்களும் காட்டப் பட்டுள்ளன. இந்த அட்டவணைகள் தீபகற்பத்து மக்களின் வாழ்க்கைத்தரத்தைப் பற்றித் தெளிவாகக் காட்டுகின்றன.

சனத்தொகைப் பெருக்கம் சமூக, பொருளாதார, தொழில் வாய்ப்புத் துறைகளில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. தீபகற்பத்தில் காணித் தட் டுப்பாடு ஏற்பட்டு அது மக்களை வன்னிப் பெருநிலப் பரப்பு, கிழக்கு இலங்கையின் மேற்குப் பிரதேசங்களை நோக்கியும் இடம்பெயர வைத்தது.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் அரையிறுதிக் காலத்தில் அவர்கள் அரசாங்க, வர்த்தக , விவசாயத் துறைகளில் புதிய வேலைகளுக்கான வாய்ப்புக்களைத் தேடலாயினர். இச்செயற்பாடுகள் அவர்களை வன்னிப் பெருநிலப்பரப்பிலும் கிழக்கிலும் உள்ள தமிழருடன் ஒன்றிணையச் செய்ததோடு பெரும்பான்மைச் சிங்கள சமூகத்தினருடனும் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்த உதவின.

தமது சுய இன அடையாளத்தையும் சிங்கள இன அடையாளத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும் ஒரு நிலைக்கு அவர்கள்

## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

வந்தபோது வடக்கு- கிழக்குத் தமிழர் தமது சுய அடையாளம் பற்றிய கூர்மையானதொரு உணர்வை விருத்தி செய்யலாயினர்.

இலங்கையில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் குறிப்பாக கரையோரப் பிரதேசங்களில்300 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்திருந்த போதும் அவர்களால் தமிழர் மத்தியில் நிலவிய இறுக்கமான சாதியமைப்பை மாற்ற முடியவில்லை.

போர்த்துக்கேய கத்தோலிக்க மிஷனரிமாரும் டச்சு புரட்டஸ்தாந்து மிஷனரிமாரும் தமது மதப்பிரசாரத்தில் சாதியத்திற்கு எதிராகப் போதித்த போதும் பயன் எதுவும் கிட்டவில்லை.

தொழிற்புரட்சிக்குப் பிந்தியதான பிரித்தானிய ஆட்சியினரும் அவர்களுடைய மிஷனரிமாரும் தமது நியாயவாத, விஞ்ஞானபூர்வ சிந்தனைகளினால்கூட சாதியத்தை ஆட்சியின் ஆரம்ப காலத்தில் மாற்ற முடியவில்லை.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பெரும்பாலும் மிஷனரி கல்விச் செயற்பாடுகளினாலும் மதப்பிரசாரத்தினாலும் விடுதிப் பாடசாலைகளினாலும் மாத்திரமன்றி நவீன வர்த்தகச் செயற்பாடுகளினால் ஏற்பட்ட பொதுவான பொருளாதாரச் செழிப்பினாலும் சாதியம் ஓரளவு ஒழியவே செய்தது. ஆனால் பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக் காலத்தில் சாதிய முறைமையில் எந்தவொரு மாற்றமும் நிகழவில்லை.

17 ஏப்ரல் 1845 இல் மட்டக்களப்பிலிருந்து சைவர் ஒருவர் மோர்னிங் ஸ்ரார் பத்திராதிபருக்கு எழுதிய ஒரு கடிதம் சாதிய முறைமை பற்றியும் அது எவ்வாறு செயற்பட்டது என்பதைப் பற்றியும் ஆழமான தகவல்களைத் தருவதாக உள்ளது.

எமது அதிகருணை வாய்ந்த முடிக்குரிய விக்டோரியா மகாராணியின் மகிழ்ச்சியான ஆட்சியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மனிதநேயமும் இரக்கமும் நிறைந்த செயல்களான இருபது மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களைக் கொடுத்து மேற்கு இந்தியாவில் அடிமைகளை விடுவித்ததும் இலங்கையில் அடிமை வியாபாரத்தை அடியோடு ஒழித்தமையும் எல்லையற்ற புகழ்ச்சிக்கு ஏற்புடையதாகும். ஆனால் பத்திராதிபர் அவர்களே! இலங்கையில் அடிமை வியாபாரத்தை விட மிகக் கொடுமை குறிப் பாகத் தமிழர் மத்தியில் இழைக்கப்படுகின்றது.

நான் குறிப்பிடுவது சாதி பார்ப்பதைத்தான். மேற் சொன்ன இடங்களிலுள்ள பெரும்பங்கினர்க்கு அடிமைத்தளையில் இருப்பதைப் பார்க்கிலும் அதிகமான தீங்குகள் இந்த சாதியத்தினால் இழைக்கப்படுகின்றது.

தாழ்ந்த சாதியைச் சேர்ந்த ஒருவர் விபத்தில் சிக்கிக் கொண்டால் அவருக்கு உயர் சாதியினர் உதவுவார்களா? அவர் கீழே விழுந்தால் அவரைத் தூக்கி விடுவார்களா? அவருடைய வீடு தீப்பற்றிக் கொண்டால் அதை அணைக்க முயற்சிப்பார்களா? அவரையும் அவருடைய உடைமைகளையும் காப்பாற்ற முன்வருவார்களா? அவர் தாகமாய் இருந்தால் தங்களுடைய கிணறுகளில் நீர் அள்ள அனுமதிப்பார்களா? தமது பாத்திரத்தில் பானம் செய்ய விடுவார்களா? அவர் நோயாளியானால் வைத்தியர் அவரைக் கவனிப்பாரா? நாவிதன் அவருக்கு வழிப்பானா? 'இல்லை தாழ்ந்த சாதியினன் உயர் சாதியினரின் இல்லத்திற்குச் சென்றால் அதனிலிருந்து தூரத்தில் உட்காரவேண்டும். அவர்களுள் ஒருவரைச் சந்திக்க நேரும் பொழுதெல்லாம் தான் அந்தச் சாதியைச் சேர்ந்தவனென்றும் தீண்டத்தகாதவன் என்றும் சொல்லவேண்டும். தனது சாதிக்கென விதிக்கப்பட்டதற்கு மாறாக நடப்பின் அவன் தண்டனைக்கு உட்படல் வேண்டும்.

(தொடரும்)

### மகிந்த அணிக்குள் பிளவு

# எதிர்க்கட்சித் தலைவராக வெல்கமவை நியமிக்கவும்

(கொழும்பு)

எதிர்க் கட்சித் தலைவராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவை நியமிக்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாதுகாப்பு இயக்கம், சபாநாயகர் கருஜெயசூரியவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திலங்க வீரகோன் தெரிவித்தார்.

மேலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் அங்கத்துவம் பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஜனாதிபதி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவ்வாறு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்காவிட்டால் தாம் சட்டத்தை நாட வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (இ-7)

# மகிந்தவும் ஆளும் கட்சியின் பங்காளர் எதிர்க்கட்சி பதவியை கொடுக்க முடியாது

## மரிக்கார் எம்.பி.எதிர்ப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவும் ஆளும் கட்சியின் பங்காளர் என்ற வகையில் அவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்குவது சட்டத்துக்குப் புறம்பானதாகும். ஆகவே மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்க முடியாது என ஐக்கிய தேசிய கட்சி அறிவித்துள்ளது.

மேலும், 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி 17 ஆம் திகதிக்கு பின்னரே பொது தேர்தல் இடம்பெறும். அதுவரையில் பொதுத் தேர்தலை நடத்தப்போவதுமில்லை. ஆனால் எதிர்வரும் ஜனவரி மாதத்தின் பின்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆலோசனை வழங்குவதாகவும் அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை அலரிமாளிகையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த போதே ஐக்கிய தேசிய கட்சின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கேள்வி: மத்திய வங்கியின் பிணைமுறி கொடுக்கல்-வாங்கல்களில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பான விபரங்கள் அறிக்கையிடப்படுமா?

பதில்: அரச சொத்துக்களை திருடியவர்களுக்கு கட்டாயமாக தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். இழுஞ்ச ஊழல் மோசடி தொடர்பான அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் விரைவில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படுமாயின் ஐக்கிய தேசிய கட்சியும் இந்தப் பிரச்சினைகளை தீர்த்துக்கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க தயாராகும்.

பிணைமுறி விவகாரம் கடந்த 2007 ஆண்டு முதல் இடம்பெற்று வந்துள்ளது. இது தொடர்பான விபரங்கள் விரைவில் வெளிடப்பட வேண்டும். யார் ஊழல் செய்தாலும் குற்றம் குற்றமாகவே கருதப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### அரசியல் குழப்ப நிலையால்

# மத்திய வங்கியால் ஒரு டொலரைக்கூட கடனாகப்பெற முடியவில்லை-ஹர்ஷ கவலை

(கொழும்பு)



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்த பின்னர் கடந்த 52 நாட்களாக இலங்கை மத்திய வங்கியால், வெளிநாடுகளில் இருந்து ஒரு டொலரை கூட கடனாகப் பெற முடியவில்லை என அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

மத்திய வங்கி அதிகாரிகள் இதுபற்றி தன்னிடம் கூறியதாகவும் மத்திய வங்கி விடுத்த அனைத்துக் கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.


உலகில் கடனைத் தரப்படுத்தும் மூன்று நிறுவனங்களான மூடிஸ், எஸ். என்ட்.பீ. மற்றும் ஃபிச் ரேட்டிங்க்ஸ் ஆகிய நிறுவனங்கள் கடன் தரப்படுத்தலில் இலங்கையை கீழ் மட்டத்திற்குக் கொண்டு சென்றதே இதற்குக் காரணம்.

அத்துடன் குறித்த காலப் பகுதியில் அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகராக இலங்கை ரூபாய் சுமார் 10 வீதம் வீழ்ச்சியடைந்தது.

இதற்கு அமைய தற்போது அரசாங்கம் பெரிய சவாலை எதிர்நோக்கி வருவதாகவும் எனினும் அரசாங்கம் நிலைமையை சரியான வழிக்குக் கொண்டு வரும் எனவும் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். (இ-7)

# இந்தோனேசியாவில் சுனாமி பேரழிவால் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் இரங்கல்

(கொழும்பு)



அனக் கிரகட் எரிமலை காரணமாக இந்தோனேசியாவில் ஏற்பட்ட சுனாமி பேரழிவால் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவிற்கு கடிதம் ஒன்றின் மூலம் தனது இரங்கலை தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் "அனக் கிரகட் எரிமலை வெடித்தமை காரணமாக கடலோர நிலச்சரிவால் ஏற்பட்ட சுனாமிக்குப் பின் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு மற்றும் உட்கட்டமைப்புக்கு உண்டான பாதிப்பை அறிந்துகொண்டேன்.


உங்களுடனான எனது ஒற்றுமையை வெளிப்படுத்த இந்தச் சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்கின்றேன். என் குடும்பத்தினருக்கு எனது இரங்கலைத் தெரிவிக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் இடம்பெற்ற குறித்த பேரழிவால் சுமார் 430 பேர் உயிரிழந்ததுடன் 1,495 பேர் காயமடைந்தனர். மேலும் 21,991 பேர் இடம்பெயர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1601

### சில்வியா

நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்து போ, மற்றவர்களின் முதுகின் மேல் ஏறிப்போக விரும்பாதே



### சுதாகர்

பாடம் கற்றுக்கொடுத்தபின் ஓசையின்றி விலகிச் செல்லும் ஆசானின் பெயர்தான் வலி



### தமயந்தி

மகிழ்ச்சி உன் வீட்டுத் தோட்டத்திலேயே உள்ளது. மாற்றான் வீட்டுத் தோட்டத்தில் கை வைக்காதே



### அழகு

வாழ்க்கை ஒரு தண்டனையல்ல, அது ஒரு பரிசு. அதைப் பெற தகுதியானவர்களுக்கு மட்டுமே இது வழங்கப்பட்டுள்ளது. ரசிச்சு வாழனும்



### கிருத்திகா

மரியாதை வயதைப் பொறுத்து வருவதில்லை. அவர்கள் செய்யும் செயலைப் பொறுத்தே வருகிறது



### ரேஷ்மா

அழுக்காய் இருப்பது அவமானம் இல்லை... அடுத்தவரை ஏமாற்றிப் பிழைப்பதே அவமானம்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சிலை உடைப்பு நடவடிக்கையை வன்மையாக கண்டிக்கின்றோம்

## முஸ்லிம் மீடியா போரம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை போன்ற பல்லினப் பல மத மக்கள் வாழும் ஒரு நாட்டில் இன்னுமொரு மதத்தின் சின்னங்களைச் சேதப்படுத்தும் நடவடிக்கை எந்தவகையிலும் அனுமதிக்க முடியாத ஒன்று எனவும், இதில் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் தயவுதாட்சண்யம் இன்றி சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என். எம். அமீன் தெரிவித்தார்.

மாவனல்லயிலும் ஏனைய இடங்களிலும் இடம்பெற்றதாகக் கூறப்படும் புத்தர் சிலை சேதப்படுத்தல் சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாராக இருந்தாலும் அவர் ஏற்றுள்ள மதம், அவரால் புனிதமான ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது. இன்னுமொரு மதத்தை நிந்திப்பதைக் கூட இஸ்லாம் அனுமதிப்பதில்லை. இஸ்லாம் மாற்று மதத்தவர்களுடன் விட்டுக் கொடுப்புடனும் புரிந்துணர்வுடனும் வாழுமாறு வழிகாட்டுகின்றது.

இந்நாட்டிலுள்ள பெரும்பான்மை சமூகம் மதிக்கும் மதச் சின்னமொன்றை சேதப்படுத்துவது அதனைச் சார்ந்தவர்களை ஆத்திரமூட்டும் செயல் என்பதில் இரு கருத்துக்கள் இருக்க முடியாது. சம்பந்தப்பட்ட சில இளைஞர்கள் தவறான முறையில் மதத்தின் பேரால் வழி நடத்தப்பட்டுள்ளமை வருந்தத்தக்க ஒன்றாகும்.

குற்றம் செய்தவர்களைச் சரியான முறையில் அடையாளம் கண்டு, சட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவே இதுபோன்ற செயல்களை எதிர்காலத்திலும் தடுக்கலாம் என்பது பௌத்த மதத்தைச் சார்ந்தவர்களின் கருத்தாகவுள்ளது.

இதுபோன்ற செயல்களும், சம்பந்தப்பட்டவர்களும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதே இந்நாட்டில் சகவாழ்வை நிலை நாட்டுவதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய பிரதானமான வழிமுறையாக இருக்கும் எனக் கருதுகின்றோம்.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுத் தகவல்களும் இந்தப் பாடத்தைத் தான் கற்றுத் தருகின்றன. பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் நடவடிக்கைகளில் அவதானமாக இருப்பதன் ஊடாகவே இதுபோன்ற நடவடிக்கைகளைத் தவிர்க்கலாம் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் மேலும் தெரிவித்தார். (இ-7)

## புத்தர் சிலைகள் உடைப்பு

# மாவனல்லயில் இரட்டிப்பு பாதுகாப்பு

## பொலிஸ் பேச்சாளர் ருவான் தகவல்

கண்டி மற்றும் மாவனல்ல பகுதிகளில் புத்தர் சிலைகளைச் சேதப்படுத்தி பதற்ற நிலையை ஏற்படுத்த முனைந்த குற்றத்திற்காக சந்தேகத்தின் பேரில் இதுவரை ஏழு பேரைக் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

அதேவேளை, விஷமிகளால் மேற்படி பிரதேசங்களில் இனவாதம் தூண்டப்படுவதை தடுக்கும் வகையில் பூரண பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும், விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு நடவடிக்களில் ஈடுப டுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், சி.ஐ.டியினர் மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஆறு பேர் மாவனல்ல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர். அவர்கள் ஆறு பேரையும் எதிர்வரும் ஜனவரி இரண்டாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை, நேற்று முன்தினம் கைதானவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்களான மேலும் இருவரை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்வதாகவும் தெரிவித்தார்.

இவர்கள் தொடர்பில் கடுமையான சட்டத்தைப் பிரயோகிக்குமாறு பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதேவேளை, மேற்படிச் சம்பவம் இடம்பெற்ற பகுதிகளில் விஷமிகளால் இனவாதம் தூண்டப்படுவதைத் தடுக்கும் வகையில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அமைதியை நிலைநாட்டும் வகையில் சகல செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 26 ஆம் திகதி அதிகாலை கண்டி, மாவனல்ல பிரதேசங்களின் சில இடங்களில் சில விஷமிகளால் புத்தர் சிலைகள் சேதப்படுத்தப்பட்டன. அதனையடுத்து பொலிஸ்மா அதிபரின் உடனடி நடவடிக்கைக்கிணங்க சி.ஐ.டியினர் அங்கு அனுப்பப்பட்டனர். சம்பந்தப்பட்ட பிரதேசங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரைகளை விடுத்தார்.

மாவனல்ல பகுதியில் ஒரு புத்தர் சிலை சேதப்படுத்தப்பட்ட நிலையில் சந்தேக நபரொருவர் பிரதேசவாசிகளால் மடக்கிப்பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அதனையடுத்து மாவனல்ல பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மேலும் ஐந்து பேரை கைதுசெய்தனர். அத்துடன் இச் சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.



கண்டி, யட்டிநுவர, வெலம்பட, மாவனல்லப் பகுதிகளிலேயே மேற்படி புத்தர் சிலைகள் சேதமாக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 100 | 95 | 100 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 400 | 460 | 400 |
| தக்காளி | 120 | 150 | 180 | 250 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 30 | 40 |
| கோவா | 80 | 80 | 90 | 80 | 100 |
| கரட் | 100 | 160 | 140 | 110 | 200 |
| பூசணி | 50 | 50 | 40 | 100 | 60 |
| புடோல் | 80 | 120 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 150 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 250 | 250 | 240 | 240 | 300 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 80 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 40 | 50 | 40 | 80 |
| பயற்றங்காய் | 100 | 200 | 120 | 130 | 120 |
| லீக்ஸ் | 150 | 170 | 180 | 170 | 200 |
| பீற்றூட் | 200 | 150 | 150 | — | 200 |
| கறிமிளகாய் | 300 | 320 | 240 | 130 | 280 |
| முருங்கைக்காய் | — | — | 700 | — | — |
| போஞ்சி | 140 | 120 | 120 | 110 | 120 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | — | 70 | 100 |
| கீரை-1பிடி | 50 | 35 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 200 | 300 | 250 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 200 | 150 | 160 | 180 | 180 |
| வெங்காயப்பூ | 300 | 450 | 400 | — | — |
| முள்ளங்கி | 60 | 80 | 100 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 45 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | 50 | 110 | 60 |

## மீண்டும் வீழ்ச்சியடைந்த இலங்.ரூபாவின் பெறுமதி

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள அமெரிக்க டொலர் ஒன்றுக்கான விற்பனை மற்றும் கொள்வனவு பெறுமதிப்படி இலங்கை ரூபா மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதன்படி நேற்றைய தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 184.07 ரூபாவாக பதிவாகியுள்ளது. அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி அண்மையில் அதிகரித்திருந்த நிலையில் நேற்று வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# செய்தித்துளிகள்

## ஹெரோயின் போதைப் பொருளுடன் டிக்கி அக்கா கைது!

(கொழும்பு)

கொழும்பு, கிராண்ட்பாஸ் 95 தோட்ட சந்திக்கு அருகில் சுமார் ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் "தொட்டலங்க டிக்கி அக்கா" என்று அழைக்கப்படும் பெண்ணை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

போதைப் பொருள் விற்பனை சம்பந்தமாக கைது செய்யப்பட்ட விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள "தொட்டலங்க களு அக்கா" என்ற பெண்ணுக்கு இந்த ஹெரோயின் சொந்தமானது என்பது, பெண்ணிடம் நடத்திய விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொழும்பு, பர்கியுசன் வீதியை சேர்ந்த 51 வயது பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் மாலிகாகந்தை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (இ-7)

## ஏழ்மை நிலை குறைவு-சாமர



ஊவா மாகாணத்தின் ஏழ்மை நிலை கடந்த நான்கு ஆண்டுகளில் வெகுவாகக் குறைவடைந்து காணப்படுவதாக புள்ளி விபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாக ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார். ஊவா மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## சிவனொளிபாதமலைக்குச் சென்ற யாத்திரிகர்கள் வைத்தியசாலையில்

(டிக்கோயா)

சிவனொளிபாதமலை யாத்திரைக்குச் சென்ற இரு யாத்திரிகர்கள் மீது கற்கள் புரண்டதனால், காயமடைந்த இருவரும் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தங்கல்ல - கணேமுல்ல பகுதியை சேர்ந்த 26 வயது ஆண் ஒருவரும், 27 வயது பெண் ஒருவருமே இவ்வாறு காயமடைந்துள்ளனர். (இ-7)

## எண்ணெய்த் தாங்கிகளில் தகரம் வெட்டிய 8 பேர் கைது

(கொழும்பு)

சீனத்துறைமுகத்தில், எண்ணெய்த்தாங்கி தொகுதியில், இரண்டு தாங்கிகளை வெட்டி, இரும்புத் தகரங்களை எடுத்துச்சென்ற 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தாங்கிகள், ஐ.ஓ.சி நிறுவனத்துக்கு உரிய இடத்திலேயே உள்ளது. அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தவர் வழங்கிய முறைப்பாட்டையடுத்தே, மேற்படி எட்டுப்பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

வெட்டி அகற்றப்பட்ட இரும்புத் தகரங்களும் கைப்பற்றப்பட்டன. அந்த இரண்டு தாங்கிகளுக்கும் 90 இலட்சம் ரூபாய் சேதம் ஏற்பட்டுள்ளது என ஐ.ஓ.சி நிறுவனம் அறிவித்துள்ளது. (இ-7)

## கட்டுநாயக்கவில் அவசரமாக தரையிறங்கிய பாரிய விமானம்

(கொழும்பு)


உலகின் மிகப்பெரிய விமானமான A-380 ரக விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவசரமாக தரையிறங்கியுள்ளது.

குறித்த விமானத்தின் ஊழியர் ஒருவர் திடீர் சுகயீனமடைந்தமையால் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இந்த விமானம் தரையிறக்கப்பட்டுள்ளது.

EK-408 ரக எமிரேட்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான விமானம் டுபாயில் இருந்து அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரம் நோக்கிச் செல்லும் போது இவ்வாறு தரையிறக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சிறுவர் அரங்கம்

# நல்ல தீர்ப்பு



(நேற்றைய தொடர்ச்சி...)

மரியாதை ராமன் ஏட்டில் குறிப்பெடுத்தான். பிறகு மூத்தவள் சாந்தாவை கூண்டில் நிற்க வைத்து கேள்விக்கணைகளைத் தொடுத்தான்.

"நான் என் புருஷனுக்கு முதல் மனைவி. குழந்தை பிறக்காததாலே நானே என் புருசனுக்குப் பெண் பார்த்தேன். கூடப் பிறக்கலன்னாலும் அவ என் தங்கச்சி. குழந்தை பிறக்கப்போவுது ன்னு செய்தி வந்ததும் அதிக சந்தோசம் பட்டவ நான்தான் ஐயா!"

"தாய் இல்லாத பெண்ணாச்சே! பிரசவத்தை நம்ம வீட்டிலேயே பார்த்துடலாம்னு இவளைப் பொறந்த ஊட்டுக்குக் கூட அனுப்பலே! நல்லபடியா குழந்தை பொறக்கணும்னு நான் வேண்டாத தெய்வம் இல்லே, முடிச்சுப் போடாத காணிக்கை இல்லே!" என்றாள் மூத்தவள் சாந்தா.

உடனே இளையவள் காந்தா, "குழந்தை திடீரென்று எழுந்திருக்கும். போய் ஆசையா பெரியம்மாகிட்டபடுத்துக்கும். அப்படிப் படுத்த குழந்தையை கழுத்தை நெரிச்சுக் கொன்றுவிட்டு, ஒண்ணும் தெரியாத பாப்பா போல நடிக்கிறதைப் பாரு!" என்று சீறினாள்.

மரியாதைராமன் இளையவள் - காந்தாவிடம் "குழந்தைக்குக் குளிப்பாட்டுவது யார்? மருந்து கொடுப்பது யார்? தூங்க வைப்பது யார்? அழகா உடுத்தி, கண்ணுக்கு மை தீட்டி, காற்றாட வெளியில் தூக்கிக்கிட்டு வேடிக்கை காட்டுறது யார்?" என்று கேட்டான்.

அதற்கு இளையவள், "என்னமோ தான் பெத்த புள்ளை மாதிரி குழந்தைக்கு எல்லாம் செய்யுறது எதுக்கு? புருசன் தன்னைத் தள்ளி வச்சிடுவாரோ என்ற பயம். பாக்கிறவங்க தன்னைப் பாராட்டுவார்கள் என்ற சுயநலம்தான்! தாய்ப்பால் குடிக்க மட்டும்தான் குழந்தையை என்கிட்டக்கொடுப்பா! ஏன்னா அது அவளால முடி யாது!" என்று ஏளனமாக சாந்தாவைப் பார்த்துச் சொன்னாள்.

மரியாதை ராமன் வாக்கு மூலத்தில் தெரிகின்ற கருத்துக்களைக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தான். குழந்தையின் தகப்பன் என்ன சொல்கிறான்? அவன் ரெண்டு பொண்டாட்டிக்காரன். அவனுடைய கருத்தைக் கேட்போம்என்று மரியாதை ராமன் குழந்தையின் தகப்பனைக் கூண்டில் ஏற்றினான்.

"ஐயா! இந்தக் குழந் தையை யார் கொன்றது? தெரியவில்லை என்றால் யார் கொன்றிருப்பார்கள் என்ற ஊகத்தையாவது சொல்லும்!" என்றார் மரியாதை ராமன்.

தகப்பன் அழுது கொண்டே "நான் ஊரில் இல்லாத சமயம் பார்த்து இந்தக் கொலை நடந்திருக்கிறது. பெத்தவள் செய்தாளா? மத்தவள் செய்தாளா? யார் செய்திருந்தாலும் கடுமையான தண் டனை கொடுங்க? எனக்கு ரெண்டாவது கல்யாணம் செய்து வைச்சதே முதல் தாரம் தான். மனப்பூர்வமா கத்தான் ஒத்துக்கிட்டா! நமக்குக் குழந்தை வேணும்! என்னாலே முடியாதபோது 'உடன் பிறவா சகோதரி' மூலமாவது அந்தப் பாக்கியம் கிட்டட்டும்னு சொன்னவளே பெரியவள் தான்!

அடிக்கடி சின்னவ எங்கிட்ட பெரியவளைப் பத்தி தூபம் போடுவா! அவளை விரட்டுங்க. என் குழந்தையை எப்பவும் அவளே கவனிச்சுக்கிறா. அப்புறம் குழந்தைக்கு எம்மேலே எப்படிங்க பாசம் வரும்! குழந்தையும் அவகிட்ட நல்லா ஒட்டிக்கிச்சு. அப்படிச் சொல்லும்போது நான் 'ஒண்ணா இருக்கக் கத்துக் கணும்'னு புத்தி சொல்வேன்.

"இன்னொரு உண்மையை இந்தச் சபையில் சொல்றேன். சின்னவளுக்குக் குழந்தை பிறந்த ஆறு மாசம் கழிச்சு பெரியவள் என்னை வைத்தியர்கிட்ட அழைச்சிட்டுப் போனா! வாந்தி மயக்கம்னு சொன்னா! வைத்தியர் அவளைப் பரிசோதித்து 'மகிழ்ச்சி' என்று சொன்னார். ஆம்!.பெரியவளும் தாயாகப் போகிற நிலையில் இருக்கிறாளாம்!

'நான் சந்தோசம் அடைஞ்சேன்! ஆனா, பெரியவ வைத்தியரிடம், கருவைக் கலைக்கும் மருந்தைக் கொடுங்க. எனக்கு குழந்தை வேணாம்!' என்றாள். நானும் வைத்தியரும் தடுத்த போது 'விஷம் குடிச்சிருவேன்'னு பயமுறுத்தினா.

வழக்கு தனக்கு எதிராகப் போவதை அறிந்த இளையவள் காந்தா, "என்குழந்தையைக்கொலை செய்தவளை சும்மா விடக் கூடாது. இந்த நீலிக் கண்ணீர் விட்டா குழந்தை பிழைச்சுடுமா? விஷத்தைக் கொடுத்தா குழந்தை உடல் நீலம் பாய்ஞ்சிருக்கும் கையால நெரிச்சிருந்தா கைரேகை தெரிஞ்சிருக்கும்!" என்று அரற்றினாள்.

மரியாதை ராமன் அவள் சொல்வதைக் குறித்துக் கொண்டான். "சரி அம்மா, குழந்தையைப் பெத்தவங்க நீங்க! ஆகவே தண்டனையில் ஒரு பகுதி நீங்க குற்றம் சாட்டும் மூத்தவளைக் கட்டிப்போட்டு கசையடியை நீங்களே கொடுக்கலாம். கயிறால் கட்டினால் அறுந்து விடும். எதனால் கட்டினால் உடலை இறுக்கும்?" என்று யோசிப்பது போல் கேட்டான்.

இளையவள் மகிழ்ச்சி பொங்க 'மரத்தைச் சுத்திப் படரும் பாட வரங்காய் கொடியை வைச்சுக் கட்டினால் கொடி அறுபடாது. உடலை இறுக்கி விடும்' என்றாள். 'என் வீட்டுத் தோட்டத்திலேயே அந்தக் கொடி படருது' என்று மேலும் தகவல் தந்து மூத்தவள் கொஞ்ச நேரத்தில் கொடியால் கட்டப்படுவாள் என்று மகிழ் ச்சியுடன் இருந்தாள்.

சொன்னபடியே இளைய வள் வீட்டிலிருந்த நீளமான பாடவரங்காய் கொடி அறுத்துக் கொண்டு வரப்பட்டது. சபையில் நிசப்தம்.

மரியாதை ராமன் அரசரிடம் இரகசியமாக ஏதோ சொன்னான். "அப்படியா!" என்பது போல் அரசர் ஆச்சரியத்தால் வாய் பிளந்தார். கூடியிருந்த மக்கள் முடிவு தெரிந்து கொள்ள முட்டி மோதிக் கொண்டு இருந்தனர்.

மரியாதைராமன் அந்தப் பாடவரங்காய்க் கொடியை சேவகனிடம் கொடுத்து அந்த அம்மாவைக் கொடியால் கட்டுங்கள்! என்று உத்தர விட்டான். 'எந்த அம்மா' என்பதை மக்கள் யோசனை செய்வதற்குள், சேவகன் இளையவளைக் கட்டத்துவங்கினான்.

இளைவள் பதறி "வேண்டாம்! என்னைக் கட்டாதீர்கள். நானே உண்மையைச் சொல்லி விடுகிறேன். குழந்தையைக் கொலை செய்ய கசாப்புக் கடைக்காரனின் உதவியை நாடினேன். அவன் தான் கத்தியால் குத்தமாட்டேன்.

கொடியால் கழுத்தை நெறித்து பெரியம்மா பக்கத்தில் போட்டுடறேன் என்று சொன்னான். என் வீட்டுக்காரர் இல்லாத நேரம் பார்த்துத் தகவல் சொன்னேன். அவனும் காரியத்தை முடித்தான்.

எனக்குக் குழந்தை போனாலும் பரவாயில்லை. பெரியவ மேலே எங்க வீட்டுக்காரர் வைச்சிருக்கிற பாசத்தை நாசப்படுத்தணும்கிறதுதான் என் ஒரே நோக்கமாய் இருந்தது. எனக்கு என்ன தண்டனை வேணும்னாலும் கொடுங்க!" என்று மண்டியிட்டு அழுதாள்.

மரியாதை ராமன், "குற்றவாளி வாயாலே குற்றத்தை ஒப்புக் கொள்ள" வைத்ததை, ராமனின் தந்தை மகிழ்ச்சி பொங்க பாராட்டினார். மக்களும் இளையவளின் அடாத செயலை இகழ்ந்தார்கள். இளையவளுக்குச் சிறைத் தண்டனை கிடைத்தது.

இளையவள் மூத்தவள் கால்களில் விழுந்து அழுதாள். "அக்கா! நம் குலத்தைத் தழைக்க வந்த செல்வத்தை அழித்து விட்டேனே! நான் ஒரு மகாபாவி! அந்தப் பழியை உன் மீது போட்டு ஒழித்து விட நினைத்தேனே! என்னை மாதிரி ஒரு துரோகியை, நீங்கள் உங்கள் வாழ்வில் பங்கு போட்டுக் கொள்ள வைத்தீர்களே! நான் நன்றி கெட்டவள்!" என்று புலம்பலுக்கிடையே சொல்லி காவலர்களுடன் சென்றாள். புருசனும், மூத்தவளும் கண்கலங்கி 'சீக்கிரம் நாம் மூவரும் ஒன்றாகலாம்' என்றார்கள்.

மரியாதைராமன் வீட் டில் அவனுடைய தந்தை, "பெற்ற குழந்தையைக் கொன் றாள் ஒருத்தி. நானோ பெற்ற மகனின் புகழைத் தடுக்க நினைத்தேன்.

அவள் பொறாமை கொண்டு குழந் தையைக் கொன்றாள். நான் அறியாமையால் என் மகனின் அறிவுத் திறனை மூடி மறைக்க நினைத்தேன்!" என்று மரியாதைராமனைக் கட்டிப் பிடித்து ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

(முற்றும்)

## பொதுஅறிவு துணுக்குகள்

- அட்லான்டிக் பகுதியில் ஆண்டிற்கு ஒரு முறைதான் சூரியன் உதயமாகிறது.
- மகாத்மா காந்தி இந்தியாவில் மட்டுமல்ல தென்னாபிரிக்காவிலும் சிறைத் தண்டனை அனுபவித்துள்ளார்.
- முதன் முதலில் கேள்விக் குறியைப் பயன்படுத்திய மொழி இலத்தின் மொழிதான்.
- கைரேகையைப் வைத்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறையைக் கண்டறிந்தவர் எட்வர்ட் ஹென்றி.
- மீன் தன் வாழ்நாள் இறுதி வரை வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும்.
- பசுமைப் புரட்சி என்று கேள்விப்பட்டிருப்போம். அது என்ன இளஞ்சிவப்புப் புரட்சி. அதாவது மருந்து வகைகள் உற்பத்தியைப் பெருக்குவது ஆகும்.
- நீலப் புரட்சி என்பது மீன் உற்பத்தியை பெருக்குவதும், வெண்மைப் புரட்சி என்பது பால் உற்பத்தியைக் குறிப்பதும் ஆகும்.
- மஞ்சள் புரட்சி என்பது எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை பெருக்குவது ஆகும்.

## பழமொழிகள்

- அகல உழுகிறதை விட ஆழ உழு.
- அகல் வட்டம் பகல் மழை.
- ஆவும் தென்னையும் ஐந்து வருடத்தில் பலம் தரும்.
- ஆறு போவதே போக்கு அரசன் சொல்வதே தீர்ப்பு.
- இறைத்த கிணறு ஊறும், இறையாத கேணி நாறும்.
- உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா
- உடல் உள்ள வரையில் கடல் கொள்ளாத கவலை.
- ஊர் உண்டு பிச்சைக்கு, குளம் உண்டு தண்ணீருக்கு.
- எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம்.
- எழுத்தறச் சொன்னாலும் பெண் புத்தி பின் புத்தி.

தன்மானம், அறிவு, தன்னடக்கம் ஆகிய இவை மூன்றும் போதையில் உள்ளவனுக்கு இல்லை.
– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## போதைவஸ்து கொடுமை அறுந்தொழிவதெப்போ!

களவு, கொள்ளை, கடத்தல், போதைவஸ்துப் பாவனை என்ற கொடூரங்கள் எந்த நாட்டில் தலைவிரித்தாடுகிறதோ அந்த நாடு உருப்பட்டதாக வரலாறு இல்லை.

இதனை மறுதலையாகக் கூறுவதாக இருந்தால், உலகில் உள்ள நாடுகளில் எங்கெல்லாம் வறுமையும் நோயும் பிணியும் மலிந்துள்ளதோ அந்த நாடுகளில் சண்டைகளும் இன, மத, மொழி வேறுபாடுகளும் சீவியம் நடத்தும்.

அதன்வழியாக வன்செயல்களும் வன்முறைகளும் போதைவஸ்து கடத்தல்களும் தாராளமாக நடந்தேறும்.

இந்த அடிப்படையில்தான் இலங்கையிலும் போதைவஸ்துப் பாவனையும் போதைவஸ்து கடத்தலும் சர்வ சாதாரணமாக நடக்கிறதென லாம்.

சுருங்கக்கூறின் நிலைமை இப்படியே இருக்குமாயின் போதைவஸ்துக் கடத்தப்படுகின்ற கேந்திர நிலையமாக இலங்கை இருக்கும் என்பது ஆச்சரியத்துக்குரியதல்ல.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என இனவாதிகள் கோசம் எழுப்புவதை தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட போதைவஸ்து கடத்தல் கும்பல்கள் தமது கடத்தல் வேலையை கனகச்சிதமாகச் செய்து முடிக்கின்றன

இதற்கு மேலாக, யுத்தத்தில் பாதிக்கப்பட்ட, ஒரு சிறந்த தலைமை இல்லாதுபோன சூழ்நிலையில் வடபுலத்தில் போதைவஸ்துப் பாவனையை அதிகரிப்பதில் போதைவஸ்து கடத்தல் கும்பல்கள் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

இவ்வாறு வடபுலத்தில் போதைவஸ்துப் பாவனையை அதிகரிப்பதற்காக ஏதும் அறியாத மாணவர்களை சம்பந்தப்பட்ட தரப்புகள் பயன்படுத்துவதான தகவல்கள் எங்கள் இனத்தின் எதிர்காலம் பற்றிய ஏக்கத்தை அதிகரிக்கச் செய்துள்ளது.

அண்மைக்காலமாக போதைவஸ்து கடத்தல்களை பொலிஸார் கண்டறிந்து வருவதான செய்திகள் நாளாந்தம் ஊடகங்களில் வெளிவந்தமுள்ளன.

வடபகுதியில் ஒவ்வொரு நாளும் போதைவஸ்து கடத்தல்கள் கண்டறியப்படுகின்றன எனும்போது, பொலிஸாரால் கண்டுபிடிக்கப்படாத போதைவஸ்து கடத்தல்கள் எத்தனையோ நடக்கலாம் என்ற அனுமானத்தை எவரும் அடியோடு நிராகரிக்க முடியாது.

ஆக, வடபகுதியை போதைவஸ்து ஊடாக நிர்மூலமாக்க அதிஉயர் சக்திவாய்ந்த தரப்பொன்று திட்டம் தீட்டியுள்ளதென்பது சர்வ நிச்சயம்.

புதுப்புதுப் போதைவஸ்துக்களை இங்கு எடுத்து வருகின்ற போதைவஸ்துகாரர்களிடம் இருந்து எங்கள் இளம் சமூகத்தைப் பாதுகாப்பதாக இருந்தால்,

பொலிஸார் கண்டறிவர் என்ற மனநிலையில் இருந்து நாம் முற்றுமுழுதாக விடுபட்டு, போதைவஸ்து கடத்தலை முற்றாக வேரறுக்க மக்கள் சமூகம் முன்வர வேண்டும்.

இவ்வாறு போதைவஸ்து ஒழிப்பில் மக்கள் சமூகம் தலையிட்டால், போதைவஸ்து கடத்தலை அடியோடு நிறுத்த முடியும்.

இதேவேளை எங்கள் மாணவச் செல்வங்கள் மத்தியிலும் இது தொடர்பான விழிப்புணர்வுகள் செய்யப்பட வேண்டும்.

அப்போதுதான் போதைவஸ்து என்ற கொடூரத்தை எம் மண்ணில் இருந்து ஒழித்துக் கட்ட முடியும்.

# ரணிலின் அரசியல் இராஜதந்திரங்களை மைத்திரி கற்றுக்கொள்ள வேண்டும்

## மேர்வின் சில்வா அறிவுரை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் சூழ்ச்சியினை அமைதியாக சட்டத்தின் ஊடாக தோற்கடித்தமையின் காரணமாகவே மீண்டும் ஜனாதிபதியாலே பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார்.

எனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் இராஜதந்திரங்களை ஜனாதிபதி மைத்திரி கற்றுக் கொள்ள வேண்டும் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

விஞ்ஞான, தொழில் நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுஜீவ சேனசிங்க நேற்று அமைச்சின் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட நிகழ்வல் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை தொடர்ந்து ஜனாதிபதி மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியிடம் ஆட்சியை கௌரவமாக ஒப்படைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்ட பின்னர் ஐக்கிய தேசிய கட்சியின உறுப்பினர்களின் மத்தியில் ஜனாதிபதி பல விமர்சனங்களை தொடுத்தார்.

இது ஒரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு அழகல்ல, இன்றும் இவர் தனது தனிப்பட்ட வெறுபபுக்களை அரசியலில் முன்னிலைப்படுத்துகின்றார் என மேர்வின் சில்வா கடுமையாக விமர்சித்தார். (இ-7)

# அடுத்த ஆண்டு முழுவதும் தேர்தல் ஆண்டாக அமையும்

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டின் ஆட்சி நிர்வாகம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கின்ற ஆண்டாக 2019ஆம் ஆண்டு மாறியுள்ளது.

அடுத்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று கட்டாயமாக நடத்தப்பட வேண்டும். அத்தோடு அனைத்துக் கட்சிகளும் கலந்தாலோசித்து ஒரு நிலைப்பாட்டிற்கு வரும் பட்சத்தில் மாகாண சபைத் தேர்தல்களையும் விரைவாக நடத்த முடியும். அதுமாத்திரமன்றி, பாராளுமன்றத்தில் ஸ்திரமற்ற நிலையொன்று தோன்றுமாயின் பொதுத்தேர்தல் நடத்தப்படுவதும் இன்றியமையாததாகும்.

இந்நிலையில் அடுத்த வருடம் முழுதும் ஒரு தேர்தல் ஆண்டாக அமையும் அதேவேளை, எமது இலக்கு எதுவென்று தீர்மானித்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும் என பெரு நகரங்கள், மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும்

## ரணிலிடம் டக்ளஸ் எம்.பி.கோரிக்கை

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு தலா 25 ஆயிரம் ரூபாய்வழங்கப்பட வேணடும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு -கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னதாக இரண்டு மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதி போதாது எனவும் அந்நிதியை 25 ஆயிரம் ரூபாயாக அதிகரித்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்க வேண்டும் என இதன் போது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனிடையே இரணைமடுக் குளத்தின் நீர் முகாமைத்துவம் சீரின்மை காரணமாகவே மக்களுக்கு இவ்வாறான அனர்த்தம் ஏற்பட்டதாக சுட்டிக்காட்டிய செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா துறைசார்ந்தவர்களின் அசமந்தபோக்கும் கவனயீனமும் இதற்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தார்.

இதனடிப்படையில் துறைசார்ந்த அமைச்சூடாக விரைவான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என பிரதமர் ரணில விக்கிரமசிங்க உறுதிபடத் தெரிவித்துள்ளார். (ம-3)

## கட்டுவன் ஐயப்பனுக்கு இன்று கொடியேற்றம்

கட்டுவன் கரண்டைக் குளம் ஸ்ரீ ஐயப்பன் கோவில் கொடியேற்றம் இன்று சனிக்கிழமை காலை 10.00மணிக்கு நடைபெறும்.

மார்கழி உத்திரம் பஞ்சமி திதியில் சனிக்கிழமை ஐயப்பன் பிறந்ததாக ஐதீகம். இன்றைய தினத்திலிருந்து 10 நாட்கள் ஐயப்பனுக்கு காலையில் அபிஷேகமும் பூஜையும் வீதியுலாவும் நடைபெறும். (ம)

## ஹரின், மலிக்கின் அமைச்சுப் பதவி நீக்கப்பட்டுள்ளது

ஹரின் பெர்ணான்டோ மற்றும் மலிக் சமரவிக்ரம ஆகியோருக்கு வழங்கப்பட்ட இரண்டு அமைச்சுப் பதவிகள் நீக்கப்பட்டுள்ளதாக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் ஊடாக இந்த விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 20ஆம் திகதி டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராக, ஹரின் பெர்ணான்டோ பதவிப்பிரமாணம் செய்து கொணடார்.

அத்தோடு, அபிவிருத்தி மூலோபாயங்கள், சர்வதேச வர்த்தகம் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப, ஆய்வு அமைச்சராக மலிக் சமரவிக்ரம பதவியேற்றார்.

எனினும், அவர்கள் இருவரும் உடன் அமுலாகும் வகையில் தமது அமைச்சுப் பதவிகளிலிருந்து இராஜினாமா செய்ததாக, கடந்த 26 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 26ஆம் திகதி வெளியிடப்பட்ட மற்றுமொரு அதிவிசேட வர்த்தமானிக்கு அமைய, இரண்டு அமைச்சுப் பதவிகளில் அவர்கள் நீக்கப்பட்டு, ஏனைய அமைச்சுப் பதவிகளில் அவர்கள் மீள நியமிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.


அதற்கமைய, டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சுப் பதவியிலிருந்து ஹரன்பெர்ணான்டோவும்விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆய்வு அமைச்சுப் பதவியிலிருந்து மலிக் சமரவிக்ரவும் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- நல்லவனாக இருந்து மற்றவர்களுக்கு இயன்ற நன்மைகளைச் செய்து வருவதே ஆன்மிக வாழ்வின் அடிப்படை நெறிமுறை.
- பகை, பொறாமை போன்ற தீயகுணங்களை வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே வந்துவிடும்.
- பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனை தெய்வமாகவும் உயர்த்துவதே சமயத்தின் நோக்கம்.
- எந்தக் காலத்திற்கும் தியாகம் தான் வாழ்விற்குரிய விதியாக இருக்கப் போகிறது.
- மன அமைதி பெற்று வாழ்வது தான் மதங்களின் அடிப்படை லட்சியம். மதத்தின் பெயரால் மனிதன் சச்சரவு செய்வது கூடாது.
- இந்த உலகம் ஒரு பெரிய உடற்பயிற்சிக்கூடம். அதில் நம்மை வலிமையுடையவர்களாக்கவே நாம் வந்திருக்கிறோம்.
- தெய்வீகத்தன்மை இல்லாத மிதமிஞ்சிய அறிவும் ஆற்றலும் மனிதனை கீழ்நிலைக்குத் தள்ளிவிடும் சக்தி படைத்தவை.

# இலங்கைக்கெதிரான இரண்டாவது டெஸ்ட்போட்டி
# 660 வெற்றி இலக்கை நிர்ணயித்த நியூசிலாந்து



கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெற்று வரும் டெஸ்ட் போட்டியில், இலங்கை அணிக்கு 660 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கினை நியூசிலாந்து நிர்ணயித்துள்ளது.

இலங்கை-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெற்று வருகிறது. முதலில் ஆடிய நியூசிலாந்து அணி 178 ஓட்டங்களுக்கு ஓல்-அவுட் ஆனது. பின்னர் இலங்கை அணி 104 ஓட்டங்களுக்கு சுருண்டது.

அதனைத் தொடர்ந்து களமிறங்கிய நியூசிலாந்து அணியில் தொடக்க வீரர்கள் ராவல் 74 ஓட்டங்களும் டாம் லாதம் அபாரமாக ஆடி 176 ஓட்டங்களும் குவித்தனர். பின்னர் வந்த வில்லியம்சன் (48), டெய்லர் (40) ஆகியோர் கணிசமான ஓட்டங்களை எடுத்து வெளியேறினர்.

அவர்களை தொடர்ந்து களமிறங்கிய நிக்கோலஸ், கிராண்ட்ஹோம் ஆகியோரின் அபார ஆட்டத்தினால் நியூசிலாந்து அணி 4 விக்கெட் இழப்புக்கு 585 ஓட்டங்கள் குவித்தது. நிக்கோலஸ் 162 ஓட்டங்களுடனும் கிராண்ட்ஹோம் 71 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தபோது டிக்ளேர் செய்வதாக அறிவிக்கப்பட்டது.

இதன்மூலம் இலங்கை அணிக்கு 660 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் ஆடிய இலங்கை அணி 3ஆம் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 24 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

தொடக்க வீரர்கள் குணதிலக (4), கருணாரத்ன(0) ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் அவுட் ஆகினர். சண்டிமல் 14 ஓட்டங்களுடனும், குசல் மெண்டிஸ் 6 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (க)

# உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் அழைக்கப்பட்ட 12 கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியானது உரும்பிராய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடத்தப்படவுள்ளது.

நேற்று 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் ஜனவரி முதலாம் ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ள இந்தச் சுற்றுப்போட்டியில் 12 அணிகள் பங்குபற்றுகின்றன.

அணிகள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடைபெறவுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் அடுத்த சுற்றுக்குத் தெரிவு செய்யப்படும்.

அந்த வகையில் 8 அணிகள் தெரிவு செய்யப்பட்டு காலிறுதியாட்டங்கள், அரையிறுதியாட்டங்கள் என நொக்கவுட் முறையில் நடைபெற்று இறுதிப் போட்டிக்கு அணிகள் தெரிவு செய்யப்படும்.

ஏ பிரிவில் ஊரெழு றோயல், கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம், அராலி பாரதி அணிகளும் பி பிரிவில் மயிலங்காடு ஞானமுருகன், வேலணை ஐயனார், நாமகள் ஆகிய அணிகளும் சி பிரிவில் நாவாந்துறை சென்.மேரிஸ், இளவாலை சென்.லூட்ஸ், கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் ஆகிய அணிகளும் டி பிரிவிர் இளவாலை யங்ஹென்றிஸ், ஆனைக்கோட்டை யூனியன், குப்பிளான் குறிஞ்சிக்குமரன் ஆகிய அணிகள் பங்குபற்றவுள்ளன.

சம்பியனாகும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் 40 ஆயிரம் ரூபாய் பணப்பரிசிலும் இரண்டாமிடம் பெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் 20 ஆயிரம் ரூபாய் பணப்பரிசிலும் வழங்கப்படவுள்ளது. (க-26)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# மெல்பேர்ன் டெஸ்ட் போட்டி
# அவுஸ்திரேலியாவை மிரட்டிய பும்ரா

மெல்பேர்ன் டெஸ்டில் பும்ராவின் புயல்வேக பந்துவீச்சினால் அவுஸ்திரேலியா அணி 151 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3 ஆவது டெஸ்டில் விளையாடி வரும் இந்திய அணி, முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட் இழப்புக்கு 443 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இந்திய அணியில் அதிகபட்சமாக புஜாரா 106 ஓட்டங்களும் கோஹ்லி 82 ஓட்டங்களும் எடுத்தனர். பின்னர் ஆடிய அவுஸ்திரேலிய அணி ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 8 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்நிலையில் அவுஸ்திரேலியா தனது ஆட்டத்தைத் தொடங்கியது. பின்ச்சை 8 ஓட்டங்களில் இஷாந்த் சர்மாவும் ஹாரிஸை 22 ஓட்டங்களில் பும்ராவும் வெளியேற்றினர்.

அதன் பின்னர் வந்த கவாஜா (21), ஷான் மார்ஷ்(19), ஹெட் (20) ஆகியோர் குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளை இழந்தனர். அதன் பின்னர் வந்த டிம் பெய்ன் 22 ஓட்டங்களில் அவுட் ஆக ஏனைய விக்கெட்டுகளும் மளமளவென சரிந்தன.

கடைசி இரண்டு விக்கெட்டுகளை பும்ரா கைப்பற்றினார். இதன்மூலம் அவுஸ்திரேலிய அணி 151 ஓட்டங்களுக்கு சுருண்டது. அபாரமாக பந்து வீசிய பும்ரா 15.5 ஓவர்களில் 33 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதில் 4 ஓவர்கள் மெய்டன் என்பது குறிப்பிடத்தக்கது.





ஜடேஜா 2 விக்கெட்டுகளையும் இஷாந்த் சர்மா மற்றும் ஷமி தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தற்போது இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்சை ஆடி வருகிறது. (க)

# 15 பந்துகளில் 6 விக்கெட்டுகள்

## பௌவுல்ட் அசத்தல்



இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்டில் அசுரவேகத்தில் மிரட்டிய பௌவுல்ட் 15 பந்துகளில் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி மிரட்டியுள்ளார்.

இப்போட்டியின் முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி 178 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன்பின்னர் முதல் இன்னிங்சை விளையாடிய இலங்கை அணி நியூசிலாந்து பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் திணறியது.

இதன் காரணமாக அந்த அணி 104 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இந்த இன்னிங்சில் நியூசிலாந்து பந்துவீச்சாளர் பௌவுல்ட் அபாரமாக பந்துவீசினார்.

அவர் 15 பந்துகளில் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார். (க)

## அமைச்சர் ராஜித...

அவர் விஜயம் செய்யவுள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள வடக்கு மக்களுக்கான சுகாதார சேவைகள் செவ்வனே இடம்பெற்று வருவதை உறுதிப் படுத்துவதற்காகவும், முகாம்களில் வாழ்வோரின் சுகாதாரப் பிரச்சினைகள் குறித்து ஆராயவும், சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரத்ன இன்று விஜயம் செய்யவுள்ளார்.

இதன்போது வட மாகாண சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

மேலும், முகாம்களில் வசிக்கும் மக்களின் சுகாதாரத் தேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் குறித்தும் அமைச்சர் கவனம் செலுத்தவுள்ளார்.

இதன்போது சுகாதார போசணைகள் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு மற்றும் இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் ஆகியவற்றினால் சேகரிக்கப்பட்ட உலருணவுப் பொருட்களை பாதிக்கப்பட்டோர் வாழும் இரண்டு முகாம்களுக்குப் பகிர்ந்தளிக்கவும் அமைச்சர் திட்டமிட்டுள்ளார். (ம-3)

## வெள்ளப் பாதிப்பு...

கிளிநொச்சிக்கு வருகை தந்தார்.

பிரதமருடன் அமைச்சர்கள் ரிசாத் பதியூதீன், தயா கமகே, ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்டோரும் வருகை தந்துள்ளனர்.

இதன்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ள இடர் பாதித்த பகுதிகள் ஊடாகப் உலங்கு வானூர்தியில் இருந்தவாறே பிரதமர் பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகளுடனான முக்கிய கூட்டத்தில் பிரதமர் ஈடுபட்டுள்ளார். (ம-281)

## விசாரணை செய்...

மையில் வடக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் (பொறியியல்) எஸ்.சண்முகநாதன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சிவகுமார் ஆகியோர் அடங்கிய குழுவையே ஆளுநர் நியமித்துள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி பெய்த கடும் மழையின் போது இரணைமடுகுளத்தின் நீர் கொள்ளளவு சடுதியாக உயர்ந்த போதும் குளத்தின் வான்கதவுகள் உரிய நேரத்தில் திறக்கப்படாது விட்டதனால் இந்த வெள்ளப் பாதிப்புக்கள் ஏற்பட்டது எனத் தெரிவித்து அதற்கான விசாரணைகளை முன்னெடுக்கவே இவ் விசாரணை குழு அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-312)

## நுண்கடன்களை...

அண்மையில் திடீரென ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்டங்கள் பல்வேறு பாதிப்புக்களை சந்தித்துள்ளது அந்தவகையில் கடும் மழை காரணமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது

இந்த கலந்துரையாடலில் நுண்நிதி கடன்வசூலிப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதற்கு என்ன தீர்மானம் மேற்கொள்வது என்பது தொடர்பில் ஆராய்ந்ததை தொடர்ந்து பிரதமர் அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களிடம் நுண்நிதி கடன் வசூலிப்பதை தற்காலிகமாக தடுத்து நிறுத்துமாறு மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டார்.

வடக்கு மாகாணத்தில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட விவசாயக் கடன்கள் மற்றும் சிறு முயற்சிகளுக்கான கடன்களை மறுசீரமைக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வங்கிகளுக்கு பணித்துள்ளார்.

இந்த நடைமுறைகள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களை பிரதேச செயலர் ஊடாகப் அத்தாட்சிப்படுத்திப் பெற்றுக் கொள்ளுமாறும் வங்கிகளுக்கு பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

விவசாயக் கடன்கள் மற்றும் சிறு முயற்சிகளுக்கான கடன்களை மறுசீரமைப்பதன் ஊடாக தற்போதுள்ள கடன் மீளச் செலுத்துகைக் காலம் மற்றும் மாதாந்தக் கட்டணம் என்பன மாற்றியமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-281)

## பாதிக்கப்பட்ட மக்...

அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொழும்பு மாநகர சபையால் நுளம்பு வலைகள் வழங்கி வைக்கப்பட்டு வருகின்ற நிலையில், இரண்டு வாரங்களுக்கு தேவையான உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை சீரமைப்பதற்கான ஆளணி பற்றாக்குறை நிலவும் பட்சத்தில் அதற்கு படையினரை அழைக்க ஏற்பாடு செய்வதாகவும் உறுதியளித்துள்ளார்.

மழை, வெள்ளத்தினால் மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமையை கருத்திற் கொண்ட பிரதமர், நுண்கடன்களை அறவிடுவதை தாமதப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியுள்ளார். (ம-281-312)

## பணத்துக்கு ஆசை...

இரண்டு தொலைத்தொடர்பகங்களில் இருந்து ஈசீ காஸ் மூலம் அனுப்புமாறு கூறப்பட்டது.

இதை நம்பிய யுவதி அவ்வாறு இரண்டு இடங்களில் இருந்து பணத்தினை அனுப்பி விட்டு மீண்டும் தொடர்பு கொண்ட போது அவ் அழைப்பு எடுக்கப்பட வில்லை. தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த யுவதி நெல்லியடி பொலிஸில் முறையிட்டுள்ளார். (ம-60)

## வெள்ளத்தால் பாதி...

இதன்போது அறிவுறுத்தினார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள இடர் தொடர்பான பாதிப்புக்கள் மற்றும் மக்களுக்கான இழப்பீடுகள் உதவிகள் தொடர்பில் ஆராய்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் கிளிநொச்சிக்கு வருகை தந்தார்.

வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட வீதிகள் தொடர்பில் மதிப்பாய்வு செய்து அவற்றை சீரமைக்கும் பணிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் உள்ளூராட்சி சபைகள் முன்னெடுக்கவேண்டும். அதற்கான நிதி ஒதுக்கீடு வழங்கப்படும் என்று பிரதமர் உறுதியளித்தார். (ம-281-312)

## கழுத்தை அறுத்த...

கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இலங்கையில் பகிடிவதைக்கு எதிரான சட்டங்கள் அமுலுக்கு கொண்டு வரப்பட்ட போதும் நடைமுறைக்கு சாத்தியபாடாக அமையவில்லை. இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் பகிடிவதை செயற்பாட்டில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-281)

## மன்னார் புதைகுழி ஆய்வு தொடரும்! – சாலிய பீரிஸ்

மன்னாரில் பெரும் மனித புதைகுழிகளிலுள்ள எச்சங்களை ஆய்வு செய்வதற்கு காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் உதவும் என அவ் அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உண்மையை நிலைநிறுத்துவதிலும் ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட சூழ்நிலைகளை உறுதிப்படுத்துவதற்கும், அவர்களுக்கேற்பட்ட கதியையும் காண்பதில் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் அர்ப்பணிப்பு தொடர்கிறது.

மன்னார் பாரிய புதைகுழியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்படும் எச்சங்களை புலனாய்வு செய்வதற்கு காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் உதவுவது தவிர்க்க முடியாததாகும்.

இப்பணிகளில் உயர்ந்த தரத்தை உறுதிப்படுத்தி புலனாய்வு முன்னெடுப்பில் பொது மக்கள் நம்பிக்கையை நிச்சயப்படுத்திக் கொள்ளும் அவசியத்தை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்து வலியுறுத்தியதாகவும் கூறினார். (ம-3)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சந்திரமூர்த்தி



கற்சிலைமடுவைப் பிறப்பிடமாகவும் பெரிய அரசடி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சந்திரமூர்த்தி நேற்று (28.12.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகமணி-சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் வதனியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் விநாயகமூர்த்தி, இந்திரமூர்த்தி, காலஞ்சென்ற லோகேந்திரன், மல்லிகாதேவி, சிவமூர்த்தி, காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி மற்றும் குருமூர்த்தி, றஞ்சினிதேவி, ஜெயமூர்த்தி, மோகனதாஸ், காலஞ்சென்ற யோகராசா, காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், திவாகரன், ஜெசிதா, காலஞ்சென்ற ஜெனிதா மற்றும் றஜிதா, வதனராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜிதா, லங்கேஸ், தவராஜன், நிரோஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் பவிசாயினி, தாருகன், சரணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் தருமரத்தினம், றஞ்சினி, றஜனி, குமுதினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2018) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-4929)

பெரிய அரசடி.
சாவகச்சேரி.

தகவல்:- குடும்பத்தினர்
077 737 4606

BRITISH COLLEGE OF ENGLISH

IELTS Academic + General
IELTS Life Skills

Cambridge English Courses
- Cambridge Preliminary Test (PET) (B1)
- Cambridge First Certificate in English (FCE) (B2)
- Cambridge Advanced English (CAE) (C1)

2004 ஆம் ஆண்டு எமது கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இதுவரை சுமார் 5000 மாணவர்கள் IELTS இல் சித்தியடைந்து UK, Australia, Canada, USA போன்ற நாடுகளில் நிரந்தரமாக வசித்து வருகின்றனர்.

A1, பரீட்சையில் சுமார் 750 இற்கு மேல் City & Guilds மற்றும் IELTS - Life Skills பரீட்சையில் நமது நாட்டு இல்லத்தரசிகள் சித்தியடைந்து UK ல் வசித்து வருகின்றனர்.

University of Cambridge Certificate வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தக்கூடியவை. Cambridge English Qualification Registration Centre for the British Council. (சி-4781)

வகுப்புக்கள் நடைபெறும் இடம்
JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPARTMENT
NO.464, Hospital Road, Jaffna. 075 261 3659 077 880 3887

### மஹஜன சம்பத

திகதி 2018/12/28
சீட்டிழுப்பு இலக்கம் 3821
ஆங்கில எழுத்து Z
வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 8 6 3 4 2
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி 2018-12-28
சீட்டிழுப்பு இலக்கம் 94
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 22 23 28 51
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2018.12.28
சீட்டிழுப்பு இலக்கம் 1987
ஆங்கில எழுத்து E
வெல்லப்பட்ட இலக்கங்கள் 24 57 68 75
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 28/12/2018
சீட்டிழுப்பு இலக்கம் 324
வெற்றி எழுத்து Z
சுப்பர் இலக்க 19
வெற்றி இலக்கங்கள் 26 32 39 42
தேசிய லொத்தர் சபை

## அச்சுவேலியில்...

ணங்கள் விற்பனை செய்யும் நிலையத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற தீ விபத்தினால் கடை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. கடையில் இருந்த பாடசாலை உபகரணங்கள் மற்றும் மென்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள் உட்பட பல இலட்சம் ரூபாய் பெறுமதியாக பொருள்கள் தீயில் முற்றாக எரிந்து நாசமாகியன.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 11.30 மணியளவில் பெரும் வெடிச்சத்தங்களுடன் தீ பரவ ஆரம்பித்து 12.30 மணி வரை தீ நீடித்துள்ளது.

கடையில் இருந்த பட்டாசு வெடிபொருள்கள் பெரும் சத்தத்துடன் வெடிப்பதனை அடுத்து வெளியில் வந்து பார்த்த அயலவர்களுக்கு கடை தீ பிடித்து எரிவது தெரியவந்துள்ளது.

ஒன்றுகூடிய பொதுமக்கள் தீயினை கட்டுப்படுத்துவதற்கு முயன்ற போதும் கடையில் இருந்த அனைத்து பொருள்களும் தீயில் எரிந்து நாசமாகியன.

அதேவேளை சம்பவ இடத்திற்கு வந்த அச்சுவேலி பொலிஸார், யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீ அணைப்பு பிரிவினர் தீயினை கட்டுப்படுத்த முனைந்த போதும் தீயினை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. (ம-3)

## வடக்கில் வெள்ள...

கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிகளவாக 74 ஆயிரத்து 730 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை மாலை 6 மணி வரையான நிலைவரப்படி அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## அனைத்துக்கும்...

களை பூர்த்தி செய்யும் முகமாக 200 நீர் இறைக்கும் இயந்திரங்களை இராணுவத்திடம் தருவதாக தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் பிரதேச சபைகள் இருக்கிறது எனவும் அவற்றை அவர்களிடம் கையளிக்குமாறும் குறிப்பிட்டார்.

எனினும் இராணுவத்தை கொண்டு எல்லாவற்றையும் செய்வதாயின் பிரதேச சபைகளை மூடிவிடுமாறும் பிரதமர் ரணில் முன்னிலையில் ஆதங்கப்பட்டார்

அதனைத் தொடர்ந்து பிரதேச சபைகளிடம் ஒப்படைத்து ஆட்கள் பற்றாக் குறை இருப்பின் இராணுவத்தையும் எடுத்து குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக தீர்மானிக்கப்பட்டது.(ம-28)


குவைத் வேலைவாய்ப்பு

மோட்டார் சைக்கிள் டிலிவரி றைடர், மோ. சைக்கிள் மெக்கானிக், கார் சாரதி

சம்பளம் ரூ. 71,640/- ஆரம்பக் கட்டணம் இல்லை

Emerald Isle Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

பதிவுக் கட்டணம் ரூ.200 மட்டுமே

221-1/1 மின்சார நிலைய வீதி 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்

077 00 38 215 ☎ 021 221 9 221 www.emeraldisle.lk jaffna@emeraldisle.lk

வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அவுஸ்ரேலிய வேலைவாய்ப்பு

பஸ் & டீசல் மெக்கானிக்

சம்பளம் ரூ. 547,902/- ஆரம்பக் கட்டணம் இல்லை

Emerald Isle Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

பதிவுக் கட்டணம் ரூ.200 மட்டுமே

221-1/1 மின்சார நிலைய வீதி 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்

077 00 38 215 ☎ 021 221 9 221 www.emeraldisle.lk jaffna@emeraldisle.lk

வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

ஆங்கிலம்

மிகவும் இலகுவான முறையில் ஆங்கில பாடத்தை அடிப்படையிலிருந்து விளக்கப் பயிற்சிகளுடன் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் வீடுகளுக்கு வந்து கற்பித்துதரப்படும். மற்றும் தரம் 6 தொடக்கம் O/L வரையான ஆங்கில வகுப்புக்கள்.

தொடர்பு: 077 089 6147 (6829)

பணிப்பெண் தேவை

வெள்ளவத்தையில் சிறிய குடும்பம் ஒன்றுடன் தங்கியிருந்து வேலை செய்ய பணிப்பெண் ஒருவர் தேவை. உடனே தொடர்பு கொள்ளவும்.

0770527090 (6826)

விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240 V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-4853)

கணனி திருத்தம்

IPhone, IPad, ICloud Unlock

உங்கள் கணனிகள், Laptop பழுதடைந்து விட்டதா? உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகின்றோம். கணனிகள் விற்றல், வாங்குதல். பழைய கணனிகளும் வாங்கப்படும்

தொடர்புகளுக்கு :

ALM Computer System - 077 243 8537 (6827)

ரூ. 57,600 - ரூ. 570,441 சம்பளத்துடன்

டுபாய், குவைத், ஓமான், பாஃரேன், கட்டார் நியூசிலாந்து, அவுஸ்ரேலியா, கனடா

Work Visa & Student Visa ஏற்பாடுகளுடன்

ஹொட்டேல் முகாமைத்துவம்

Tourism & Hospitality Management (3 மாதம்)

பயிற்சி, முன்னனுபவம் உள்ளவர்களுக்கு

உடனடி வேலைவாய்ப்பு!

Kitchen Helper, Steward, Waiter, Housekeepers, Supervisor, Sandwich Maker, Barista, Commis I, II, III & Chef

மேலதிக விபரங்களை அறிய ஹொட்டேல்துறை & வெளிநாட்டு வேலைவாய்ப்பு கண்காட்சி & கருத்தரங்கு

ஜனவரி 3, 4 & 5களில் 10 மணி

No.1 Award Winning Institute of the North

SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
Sri Lanken Entrepreneur of the Year 2017

221-1/1. மின்சார நிலைய வீதி. (2ம் ஒழுங்கை). யாழ்ப்பாணம்

0777 324 004 www.sikaram.lk
021 222 00 11 Sikaram Academy

வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-4834)

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை

FLC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி. ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781

181, பிரதான வீதி. நெல்லியடி. 0779 789 456/0762 669 614

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

(C-4639)

வீடு வாடகைக்கு

அச்சுவேலி தோப்பு, இராஜ வீதியில் கைத்தொழிற்பேட்டை மற்றும் பிரபல பாடசாலைகள், வைத்தியசாலைக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0777361872

முகுந்தன் (6824)


## யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

**அங்கத்துவத்தை உறுதிப்படுத்தல்**

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பேக்கரி உரிமையாளர்களையும் ஒருமுகப்படுத்தும் முகமாக எதிர்வரும் 2019. 01.01 ஆம் திகதி தொடக்கம் எமது சங்கத்தின் கீழ் தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின் றோம். இது எதிர்காலத்தில் பேக்கரி உரிமையாளர்களின் நன்மை கருதி மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும்.

- நிர்வாகத்தினர்

(C-4925)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

மஞ்சவனப்பதி முருகன் துணை

விசேட விலைக்கழிவு

புதுவருடத்தை முன்னிட்டு இன்று முதல் 31-ம் திகதி வரை சீனி, மா, அங்கர் தவிர்ந்த ஏனைய பொருட்களை 3000/- ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு 10% விலைக்கழிவும் 5000/- ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு 10% விலைக்கழிவும் எமது நிறுவனத்தில் இருந்து 6km தூரத்திற்குள் வசிப்போருக்கு பொருட்கள் இலவசமாக விநியோகிக்கப்படும்.

விசேடமாக பாடசாலை



மாணவர்களுக்கான தரமான கொப்பிகள், புத்தகப்பை மற்றும் பாடசாலை உபகரணங்களுக்கும் 10% விசேட விலைக்கழிவு உண்டு.

தொலைபேசியிலும் பொருட்களை ஓடர் செய்யலாம்

(24 மணித்தியால சேவை )

தொடர்புகளுக்கு :

SUNJEYS A to Z SUPER MART
100, ARASADY ROAD, JAFFNA.
(யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)
021 205 3077

(C-4928)


## ஓராண்டு நினைவில்...



தோற்றம்: 09.03.1944
மறைவு: 08.01.2018

அமரர்
**தாமோதரம்பிள்ளை வல்லிபுரம்பிள்ளை**
(லங்கா மணல் கூட்டுத்தாபனம், புல்மோட்டை)
திதி: 29.12.2018

அன்னையின் குறை தெரியாமல்
அப்பாவின் அரவணைப்பில்
அன்னையைக் கண்டேன்...
அப்பாவின் அன்பும்
அரவணைப்பும் இந்த
அகிலத்தில் வேறு
யாரிடமும் கிடைப்பதில்லை...
அப்பாவின் பாசத்தை
உணர்கின்றேன்...
உணரும் வேளை தனில்
உயிருடன் இல்லை – அப்பா...

இன்று (29.12.2018) சனிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன்அழைக்கின்றோம்.
(இவ்அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.*

29, 6-ம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம்.

வ.சுதர்சன் (கண்ணன்)
மகன் - 0777741389

(6835)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.